# அல்லாமா இக்பால்...
## கவிதையும் தத்துவமும்

கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி

தாருல் புஷ்ரா பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FAIZAL FAREED
AHATHTHIMURIPPU

# அல்லாமா இக்பால்
# கவிதையும் தத்துவமும்

## ALLAMA IQBAL
## POETRY AND PHILOSOPHY

தாருல் புஷ்ரா பதிப்பகம்

2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : அல்லாமா இக்பால் கவிதையும் தத்துவமும்
ஆசிரியர் : கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி
பதிப்புரிமை : ஆசிரியருக்கே
பக்கங்கள் : viii+ 96
வெளியீடு : தாருல் புஷ்ரா.
16/3A, மெனரிகம பிளேஸ்.
கல்கிஸ்ஸ.
இணையதளம் : www.drshukri.net
கணனி வடிவமைப்பு: எம்.ஆர்.எம். முஸம்மில்
அட்டைப் படம் : ஏ.எல்.எம். நவ்பர்
அச்சகம் : ஏ.ஜே. பிரிண்ட்ஸ்,
தெஹிவளை.

**Title** : ALLAMA IQBAL POETRY AND PHILOSOPHY
**Author** : Dr. M.A.M. Shukri
**Copy Right** : Reserved
**Pages** : viii+ 96
**Published by** : Dharul Bushra ,
16/3A, Menarigama Place,
Mt. Lavania.
**Web.** : www.drshukri.net
**Type Setting** : M.R.M. Musammil
**Cover Design**: A.L.M. Nawfar
**Printers** : A.J. Prints, Dehiwala.
**Price** : Rs: 200.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“உள்ளத்தின் சோகப் பெருமூச்சின் வேதனையை
இளைஞர்களுக்கு அளிப்பாயாக!

எனது அன்பையும், ஆழமான, தீட்சண்யப் பார்வையையும்
அவர்களுக்குக் கொடுப்பாயாக!

எனது அதிகாலைப் புலம்பலை இளைஞர்களுக்குக்
கொடுப்பாயாக!

இளம் ராஜாளிக் குஞ்சுகளுக்கு மீண்டும்
இறக்கையைக் கொடு!

இறைவா! எனக்கு ஒரே ஒரு ஆவல், எல்லோருக்கும்
எனது தீட்சண்யப் பார்வையைக் கொடு!”

– அல்லாமா இக்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்..

அல்லாமா இக்பால் கவிதையும் தத்துவமும்

இக்பாலின் கலை இலக்கியக் கோட்பாடு

இஸ்லாமிய மதச் சிந்தனையின் புனர்நிர்மாணம் பற்றிய இக்பாலின் கருத்துக்கள்

இக்பாலும் பாரதியும்- ஓர் ஒப்புநோக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

எமது காலப் பிரிவில் வாழ்ந்த மிகப் புகழும், கீர்த்தியும், பிரபல்யமும் பெற்ற கவிஞர்களுள் ஒருவராக அல்லாமா இக்பால் விளங்குகின்றார். பொதுவாகக் கவிஞர்கள் இயற்கையின் அழகினால் ஆகர்ஷிக்கப்படும் நுண்ணிய கலையுணர்வைப் பெற்றவர்களாகவும், அவர்களது கவிதைகள் அந்த அழகுணர்வினதும், கலையுணர்வினதும வெளிப்பாடாகவும் கருதப்படுவதுண்டு. ஆனால் இக்பால் அழகை மட்டுமன்றி கருத்துக்களையும் நேசித்தார். அவரது கவிதைகள் அவரது கருத்துக்களினதும். அவர் வரித்துக்கொண்ட தத்துவங்களினதும் வெளிப்பாடாகும். எனவேதான் அவர் தத்துவக் கவியாக Philosopher Poet கருதப்படுகின்றார். அவரது கவிதையில் தத்துவமும் கவித்துவமும் மிக அற்புதமாகப் பின்னிப் பிணைந்துள்ளது. அவர் அவரது கவிதைகளின் மூலம் மனித சமூகத்திற்கு ஒரு செய்தியை விடுக்க விரும்பினார். அந்தச் செய்தி கவித்துவம் சிதைக்கப்படாத வகையில் அவரது கவிதைகளுள் பொதிந்துள்ளன. அல்-குர்ஆனினாலும், இறைதூதரின் ஆழமான நேசத்தினாலும் போஷிக்கப்பட்ட ஓர் ஆத்மீக ஆளுமையை அவர் பெற்றிருந்தார்.

விரிந்த அறிவாலும், ஆழமான சிந்தனையாலும் பரிணாமம் பெற்ற ஓர் அறிவாளுமையை அவர் கொண்டிருந்தார். இருபதாம் நூற்றாண்டின் சடவாத நாகரிகத்தின் கோரப் பசிக்கு இரையாகி தனது ஆத்மாவின் ஒளியை இழந்திருந்த முஸ்லிம் உம்மத்திற்கு அல்-குர்ஆனின் அழைப்பை வழங்கி அதற்கு ஆத்மீக உயிரோட்டத்தை வழங்குவதே அவரின் கவிதையின் அடிப்படை நோக்கமாக அமைந்திருந்தது. இந்த வகையில் அவர் தத்துவக் கவியாக மட்டுமன்றி இலட்சியக் கவியாகவும் விளங்கினார்.

நான் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் கல்வி கற்றுக்கொண்டிருந்த காலப் பிரிவில் இக்பால் எனக்கு அறிமுகமானார். அப்போது ஸாஹிராவின் அதிபராக இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ் இக்பாலின் சிந்தனையில் மிக ஈடுபாடு கொண்டிருந்தார். ஸாஹிராவின் நூலகம் இக்பால் பற்றிய முக்கிய நூல்களை உள்ளடக்கியிருந்தது. அறிஞர் அஸீஸ் அவரது உரைகளில் இக்பாலின் கவிதைகளை மேற்கோள் காட்டிப் பேசுவார். இக்பாலின் ஆளுமையிலும் கருத்துக்களிலும் எனக்கு ஒரு பற்றும் ஈடுபாடும் ஏற்பட்டது. ஆனால் இக்பாலின் ஆழமான தத்துவங்களைப் புரிந்துகொள்ளும் அறிவுப் பின்னணியும், சிந்தனை முதிர்ச்சியும் என்னில் அப்போது காணப்படவில்லை.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில்; பேராசிரியர் ஸெய்யித் அக்தர் இமாமின் மாணவனாகவும், அதனைத் தொடர்ந்து அவருடன் சக விரிவுரையாளராகவும் கழித்த காலப் பிரிவு எனது அறிவாளுமையின் மிக முக்கிய கால கட்டமாகும். பேராசிரியர் இமாமுடன் நடந்த கருத்துப் பரிமாறல்கள் இக்பால் பற்றிய எமது அறிவையும், புரிதலையும் மிக விசாலமாக்கியது. இக்பாலுடன் ஓர் அத்தியந்த ஆத்மீகப் பிணைப்பை ஏற்படுத்தியது.

எடின்பரோ பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டப்படிப் பிற்காகக் கழித்த காலப் பிரிவில் எனது சக மாணவராக கராய்ச்சி பல்கலைக்கழகத்திலிருந்து பட்டப்படிப்புக்காக வருகை தந்திருந்த இம்தியாஸ் அஹ்மத் இக்பாலின் கவிதைகளில் ஆழமான ஈடுபாடு கொண்டிருந்தார். இருவமாக இணைந்து "Iqbal The Poet of Islamic Renaissance "இக்பால் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக் கவி" என்ற தலைப்பில் பேராசிரியர் மொன்ட்கொமெரி வொட் தலைமையில் ஒரு கருத்தரங்கை வெற்றிகரமாக நடத்தினோம்.

அல்லாமா இக்பால் பற்றி அவ்வப்போது நான் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாக "அல்லாமா இக்பால் கவிதையும் தத்துவமும்'' என்ற இந்நூல் அமைந்துள்ளது. இதில் உள்ளடக்கப்பட்டுள்ள கட்டுரைகள் இக்பாலின் ஆளுமையின் பல்வேறு பரிமாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலின் கணனி வடிவமைப்பு மற்றும் தளக்கோளத்தில் உதவிசெய்த சகோதரர் எம்.ஆர்.எம். முஸம்மில், இதனை வெளியிடுவதில் பல சிரமங்களை மேற்கொண்ட சகோதரர் எம்.ஜே.எம். இம்தியாஸ், இன்ஸாப் ஸலாஹுத்தீன்,எம்.ஏ.எம். றிபாக் ஆகியோருக்கும் எனது ஆழ்ந்த நன்றிகள்.

அல்லாஹ் இப்பணியை ஏற்றுக்கொள்வானாக...

**கலாநிதி எம்.ஏ.எம் சுக்ரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லாமா இக்பால்
# கவிதையும் தத்துவமும்

அல்லாமா இக்பால் இஸ்லாமிய சிந்தனை வரலாற்றில் தோன்றிய மாபெரும் சிந்தனையாளர்களுள் ஒருவர். இருபதாம் நூற்றாண்டின் இஸ்லாமிய சிந்தனையில் தனது ஆழமான செல்வாக்கைப் பதித்த ஒரு யுக புருஷர். இக்பால் முஸ்லிம் 'உம்மத்'தின் பதின்மூன்று நூற்றாண்டு கால வரலாற்றில் தோன்றிய பல்வேறு சிந்தனை நீரோட்டங்களும் ஒட்டு மொத்தமான அனுபவங்களும் ஒன்றுசேரும் ஒரு சமுத்திரம். அவரது கவிதைகளிலும், உரைநடைகளிலும் முஸ்லிம் உம்மத்தின் அபிலாசைகள், வேட்கைகள், கனவுகள், அனுபவங்களைத் தரிசிக்க முடிகிறது.

அவர் ஒரு சாமான்ய கவிஞரல்லர். ஆங்கிலத்தில் Higher Poets என அழைக்கப்படும் பெருங் கவிஞர்களின் வரிசையில் அவர் அடங்குகின்றார். சாமான்யமான, சாதாரண கவிஞர்கள், மக்கள் மத்தியில் புகழ் பெறுவதையும், பிரபல்யமடைவதையும் நோக்கமாகக் கொண்டு அவர்கள் தோன்றிய காலத்தில் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ள, மக்களின் கை தட்டு தல்களையும் ஆரவாரத்தையும் பெற்றுத் தருகின்ற விடயங் களையே தமது கவிதைக்குக் கருப்பொருளாகக் கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய கவிஞர்களால் உயர்ந்த, மகத்தான கவிதைகளைப் ( Higher Poetry) படைத்தல் முடியாது.

உயர் கவிதை என்பது ஒரு கவிஞனின் ஆளுமைக்கும் அவனது சூழலுக்கும் இடையில் நடைபெறுகின்ற இடையறாத, பாரதூரமான போராட்டத்தின் விளைவாகும். மகத்தான ஒரு தலைவனும் சிந்தனையாளனும் அவனைச் சூழ வாழும் மக்களின் சிந்தனைக் கண்ணோட்டத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் எவ்வாறு சமூகத்தில் ஒரு மாற்றத்தை தோற்றுவிக்கிறார்களோ, அது போன்ற ஒரு பணியையே ஒரு மகாகவியும் புரிகின்றார். அத்தகைய மகாகவி மக்களுக்கு விடுக்கும் செய்தி, அவரது சமகால சமூகத்தினதும் தேசத்தினதும் நிலையை விட உயர்ந்ததாகவும் அமையலாம். அவரது காலத்தையும் தாண்டி பல்வேறு காலப் பிரிவுகளில் பல் சமூகங்களில், நாடுகளில் அதன் செல்வாக்கை ஆழப் பதிக்கலாம். இவ்வகையில் அது காலத்தை வென்று வாழும் நித்தியத்துவத்தையும் தேசம், நாடு, சமூகம் என்ற எல்லைகளைத் தாண்டிச் செல்லும் ஒரு சர்வதேசியத் தன்மையையும் பெறலாம்.

இக்பால் இத்தகைய ஒரு மகாகவி; யுக புருஷர். ஒரே நேரத்தில் கவிஞராகவும், தத்துவ ஞானியாகவும் அவர் விளங்கியதால் அவர் இலக்கியப் பணியில் ஒரு பெரும் அறைகூவலை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அதுவே தத்துவத்தைக் கவிதையில் வடிக்கும் ஒரு பணியாகும். இக்பால் தத்துவத்தைப் பாடலாக்கும் பணியில் வெற்றி கண்ட ஒரு மகத்தான தத்துவக் கவிஞராவார்.

## இக்பாலின் இலக்கிய முன்னோடிகள்

இந்தியத் துணைக்கண்டம் மூன்று புகழ்பெற்ற முஸ்லிம் கவிஞர்களைத் தோற்றுவித்தது. மிர்ஸா காலிப், ஹாலி, இக்பால் ஆகிய மூவருமே இக் கவிஞர்களாவர். இவர்கள் மூவரும் பாரசீக மொழியிலும், உர்துவிலும் தங்களது கவிதைகளைப் படைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனர். காலிப் 1857ம் ஆண்டு நடைபெற்ற சுதந்திரப் போரைக் கண்டு அனுபவித்தது மட்டுமன்றி முஸ்லிம்களின் கையிலிருந்து அரசியல் அதிகாரம் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களைச் சென்றடைந்ததையும் நேரடியாகக் கண்டவர். 1857ல் நடைபெற்ற சுதந்திரப் போர் இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியாளர்களின் இறுதியை உணர்த்தியது. இந்தக் கலகத்தை அடக்குவதற்கு பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கடைபிடித்த கொடூரமான நடவடிக்கைகள் முஸ்லம்களைப் பெரும் பாதிப்பிற்கு ஆளாக்கின. முஸ்லிம் சமூகம் விரக்தியும் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையுமற்ற ஒரு நிலையை எதிர்நோக்கியது.

அரசியல் புரட்சியின் பின்னர் தோன்றிய அந்த அவல நிலை, சமூகச் சீர்குலைவு அனைத்தாலும் காலிப் பாதிக்கப் பட்டார். அவரது கவிதைகளில் அவரது கால சமூகத்தில் நிலவிய சீர்கேட்டை விளக்கும் விரக்தி நிலையும், அதே நேரத்தில் எதிர்காலத்தை மன நம்பிக்கையோடு நோக்கும் உறுதியும் ஒரே நேரத்தில் பிரதிபலிக்கின்றன. அவரது கவிதைகள் ஒரு எச்சரிக்கைத் தொனியாகவும் நம்பிக்கையின் குறியீடாகவும் உள்ளன. கால மாற்றங்களை உணர்ந்து முஸ்லிம் சமூகம் தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளல் வேண்டும் என்ற கருத்தை அவரது கவிதைகள் வலியுறுத்தின. முஸ்லிம் சமூகம் எதிர்காலத்தை நம்பிக்கையோடு நோக்கி, தனது சக்தியிலும், வளங்களிலும் தங்கி நின்று செயல்பட வேண்டும் என்ற கருத்தும் அவரது கவிதைகளில் பொதிந்திருந்தன. இக்காலகட்டத்திலே யே அலிகார் இயக்கம் (Aligar Movement) தோன்றியது.

ஆங்கில மொழி அறிவையும், மேற்கத்திய நவீன சிந்தனைகளில் முஸ்லிம்களை ஈடுபாடு கொள்ளச் செய்வதையும் அலிகார் இயக்கம் தனது அடிப்படை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டது. அலிகார் இயக்கத்தின் முன்னோடியான சேர் ஸெய்யித் அஹ்மத் கான் முஸ்லிம்கள் ஆங்கில மொழியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பதன் அவசியத்தையும் மேற்கத்திய கருத்துக்களைத் தம் மோடு இணைத்துக் கொள்வதன் அவசியத்தையும் வலியு றுத்தினார்.

அலிகார் இயக்கத்தின் செல்வாக்கு முஸ்லிம்களின் இலக்கிய முயற்சிகளிலும் பிரதிபலித்தது. இக்காலப் பிரிவில் தோன்றிய கவிதை, உரைநடைகளில் இந்தப் பண்பை நாம் அவதானிக்க முடிகிறது. இந்திய முஸ்லிம் இயக்கத்தின் இந்தத் திருப்பத்தை இக்காலப் பிரிவில் தோன்றிய புகழ்பெற்ற கவிஞரான அல்தாப் ஹுஸைன் ஹாலியின் கவிதைகள் பிரதிபலிக்கின்றன. ஹாலி அவரது 'முஸத்தஸ்' என்ற கவிதைத் தொகுதியை 1879ம் ஆண்டு வெளியிட்டார். (ஹாலியின் மறைவு இக்காலப் பிரிவிலேயே ஏற்பட்டது) அலிகார் பல்கலைக் கழகத்தை நிறுவிய ஸேர் ஸெய்யித் அஹ்மத் கானுடன் ஹாலி நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். ஆனால், அவரின் தீவிர நவீனத்துவக் கருத்தை (MODERNISM) ஹாலி ஆதரிக்கவில்லை.

ஹாலி தனது 'முஸத்தஸ்' என்ற கவிதைத் தொகுப்பில் முஸ்லிம்களின் கடந்தகால வரலாற்றுப் பாரம்பரியத்தின் பெரு மை, சிறப்பு பற்றிப் பாடி முஸ்லிம் சமூகத்தில் தன்னம்பிக்கை உணர்வை ஏற்படுத்தி இயக்கச் சக்தியைத் தோற்றுவித்தார். கால மாற்றத்துக்கு ஏற்ப நெகிழ்ந்து கொடுக்கும் ஆற்றலும், சக்தியும் இஸ்லாமியப் பண்பாட்டில் காணப்படுவதையும், முஸ் லிம்கள் தங்களது கடந்த காலப் பாரம்பரியத்தில் காலூன்றி, புதிய மாற்றங்களுக்கு ஏற்ப தங்களை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் அவரது கவிதைகள் வலியுறுத்தின. காலத்தின் குரலாக ஒலித்த அவரது கவிதைகள் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைப் பெற்றன. தங்களது வரலாற்றுப் பாரம்பரியத்தின் இழப்பை மக்கள் உணர்ந்தனர்.

இக்காலப் பிரிவிலேயே அக்பர் அலஹாபாதியின் இலக் கியப் பிரவேசம் நிகழ்கிறது. ஸேர். ஸெய்யித் அஹ்மத் கானின் நவீனத்துவ வாதத்தின் வெறுமையையும், அதன் பலவீனங்க ளையும் அவரது கவிதைகள் மூலம் அக்பர் வெளிப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹாலியும் அக்பர் அலகாபாதியும் இக்பாலின் இலக்கியப் பணிக்கு களம் அமைத்துக் கொடுத்தனர். ஹாலி, அக்பர், இக்பால் ஆகிய முப்பெருங் கவிஞர்களினதும் இலக்கியப் பங்களிப் பையும், சமூக புனர்நிர்மாணப் பணியில் அவர்களது பங்க ளிப்பையும் ஓர் அறிஞர் மிகச் சிறப்பாக விளக்குகின்றார்:

Hali longed to have the building, Akbar demolished the undesirable Portions and Iqbal has constructed the edifice. Hali diagnosed the ailment, Akbar ordained abstentions and Iqbal priorities efficacious treatment. Hali thus sang of the past, Akbar of the present and Iqbal sings of the future.

ஹாலி ஒரு கட்டடத்தைக் கட்டியெழுப்ப விரும்பினார். அக்பர் அக்கட்டடத்தின் பொருத்தமற்ற பகுதிகளை உடைத்தார். இக்பால் அக்கட்டடத்தைக் கட்டி எழுப்பினார். ஹாலி நோய்க்கான காரணத்தைக் கண்டறிந்தார்; அக்பர் நோய்க்கான பத்தியத்தைக் குறிப்பிட்டார்; இக்பால் அதற்கான நிவாரணத்தைக் கண்டுபிடித்தார். ஹாலி கடந்தகாலத்தைப் பற்றிப் பாட; அக் பார் நிகழ் காலத்தின் குரலாக விளங்க; இக்பால் வருங்கா லத்தைப் பற்றிப் பாடினார்.

( SHEIK AKBAR, ALI IQBAL His Poetry and massage, Lahore 1932 p 19)

பொதுவாக நோக்குமிடத்து காலிபும், ஹாலியும், அக்பரும் இந்திய முஸ்லிம்களை நோக்காகக் கொண்டு தமது கவிதைகளைப் படைத்தனர். ஆனால் இக்பால் முஸ்லிம் உலகிற் காகவும், அதனைத் தாண்டி முழு மனித இனத்தினதும் விமோசனத்தை நோக்காகக் கொண்டு தனது கவிதைகளைப் புனைந்தார்

## இளமைப் பருவம்

கலாநிதி ஸேர் முஹம்மத் இக்பால் 1876ம் ஆண்டு ஸியால் கோட்டில் சன்மார்க்கப் பற்று மிக்க ஒரு குடும்பத்தில் பிறந்தார். ஸியால் கோட்டில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்ற அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் கீழைத்தேய மொழிகள், இலக்கியத்திற்கான ஆர்வத்தை அவரது ஆசிரியர் ஷம்ஸுல் உலமா பீர் ஹஸன் தோற்றுவித்தார். அதனைத் தொடர்ந்து லாஹூர் அரசாங்கக் கல்லூரியில் தனது உயர் கல்வியைத் தொடர்ந்த இக்பால் அங்கு அவரது ஆசிரியராக விளங்கிய ஸேர் தோமஸ் ஆர்னல்ட்டின் அபிமானத்தைப் பெற்ற மாணவரானார்.

ஆர்னல்ட், இக்பாலுக்கு மேற்கத்திய இலக்கியத்திலும் சிந்தனையிலும் ஈடு பாட்டை ஏற்படுத்தினார். இக்பாலின் ஆரம்ப கால ஆளுமையை உருவாக்குவதில் மீர் ஹஸனும், தோமஸ் ஆர்னலட்டும் மிக முக்கிய பங்கை வகித்தனர். இக்பாலின் கிழக்கும் மேற்கும் இணைய இவர்கள் இருவரும் காரணமாக விளங்கினர்.

"மேற்கத்திய தத்துவஞானிகள் எனது அறிவை வளர்த்துப் போஷித்தனர். ஆத்மீக நோக்கு கொண்ட கீழைத்தேயத்தைச் சேர்ந்தவர்களின் தொடர்புஉள்ளத்தைஉயிர் பெறச் செய்தது."

(இக்பால்)

இக்பாலின் கவிதையாற்றல் இளமைக் காலத்திலேயே அவரில் வெளிப்பட ஆரம்பித்தது. அக்காலப் பிரிவில் லாகூரில் நடைபெற்ற "முஷாயரா" என்னும் கவியரங்குகளில் கலந்து கொண்டு தனது கவிதைகளை அழகிய குரலில் அவர் பாட ஆரம்பித்தார். வளர்ந்து வரும் ஒரு இளம் கவிஞர் என்ற வகையில் அவரது புகழ் படிப்படியாக வளர ஆரம்பித்தது. அவர் தனது கவிதைகளை அக்காலப் பிரிவில் புகழ்பெற்ற உர்துக் கவிஞராக விளங்கிய 'தாக்' (Dagh) என்னும் கவிஞருக்கு திருத் தங்கள் செய்வதற்காக அனுப்புவார். ஆனால், அதில் திருத்தத்திற்குரிய எதுவும் இல்லையென அவர் அதனைத் திருப்பி அனுப்பிவைப்பார்.

அக்கால புகழ்பெற்ற உர்து இலக்கிய சஞ்சிகையான 'மக்தன்' இக்பாலின் கவிதைகளைப் பிரசுரித்தது. லாகூரில் மிகப் பிரபல்யம் பெற்று விளங்கிய "அன்ஜுமன் ஹிமாயதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாம்" என்ற நிறுவனத்தில் பங்கு பற்றிய இக்பாலின் புகழ் இலக்கிய உலகில் படிப்படியாக வளர ஆரம்பித்தது.

இக்காலகட்டத்தில் இக்பால் பஞ்சாப் பல்கலைக் கழகத்தில் தத்துவ ஞானத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றார். அதனைத் தொடர்ந்து சில காலம் லாகூரிலுள்ள அரசாங்கக் கல்லூரியில் பேராசியராகப் பணிபுரிந்தார். அவரது ஆசிரியர் ஸேர் தோமஸ் ஆர்னல்ட்டின் தூண்டுதலின் பேரில் 1905ம் ஆண்டு இக்பால் தனது உயர் கல்வியைத் தொடர ஐரோப்பா சென்றார். இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் அதனைத் தொடர்ந்து ஜேர்மனியிலுள்ள மியுனிக் பல்கலைக் கழகத்திலும் ஆராய்ச்சிப் பட்டப் படிப்பை மேற்கொண்ட அவர் மியுனிக் பல்கலைக் கழகத்தில் தத்துவ ஞானத் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றார். அதனைத் தொடர்ந்து சட்டத்துறையில் பரிஸ்டர் பட்டமும் கிடைத்தது.

1908ம் ஆண்டு ஐரோப்பாவிலிருந்து நாடு திரும்பிய அவர் சில காலம் வழக்கறிஞராகப் பணியாற்றினார். நாட்டின் கல்வி, சமூக, அரசியல் விவகாரங்களில் மிக ஆர்வத்தோடு செயற்பட்டார்.

இக்பால் மேற்கில் கழித்த காலப் பிரிவு அவரது சிந்தனைப் போக்கில் பெரும் மாற்றத்தைத் தோற்றுவித்தது. மேற்கத்திய சிந்தனை, தத்துவம் ஆகியவற்றில் அவர் ஆழமான புலமை பெற்றார். ஷம்ஸுல் உலமா மீர் ஹஸன், கீழைத்தேய கலாசாரங்களின் வாயிலை அவருக்குத் திறந்துவிட, தோமஸ் ஆர்னல்ட் இக்பாலை மேற்கத்திய சிந்தனையோடு பரிச்சயமடையச் செய்தார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் அவரது தத்துவப் பேராசிரியாக விளங்கிய மக்டகார்ட் (Mc Taggart) மேற்கத்திய தத்துவஞானம் பற்றிய இக்பாலின் அறிவு விசாலத்திற்கு பெருமளவு காரணமாக அமைந்தார். தனது இறுதிக் காலம் வரை இக்பால் மக்டகார்ட்டுடன் கடிதத் தொடர்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்தார். தத்துவஞானம் பற்றிய பல விளக்கங்களைக் கொண்டிருந்த இக்கடிதங்களில் சிலவற்றை லாகூரிலுள்ள இக்பால் ஆய்வு நிலையம் அண்மையில் பிரசுரித்துள்ளது. மேற்கில் இக்பால் கழித்த காலப் பிரிவு மேற்கத்திய சிந்தனையில் ஆழமான புலமை பெறுவதற்கு மட்டுமன்றி, மேற்கத்திய நாகரிகத்தையும், அதன் தன்மைகளையும் நேரடியாக அவதானிக்கும் வாய்ப்பையும் அச்சூழலில் வாழ்ந்து அது பற்றிய அனுபவத்தைப் பெறும் சந்தர்ப்பத்தையும் அவருக்கு வழங்கியது. ஆத்மீக அடிப்படையற்ற மேற்கின் அறிவு, அந்நாகரீகத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்வதையும், கீழைத்தேய உலகம் அந்த அறிவை இழந்து ஆத்மீகத்தில் மட்டும் ஈடுபாடு செலுத்தி, அறிவுத் துறையில் தேக்க நிலையடைந்திருப்பதையும் இப்போது அவரால் தெளிவாக உணர முடிந்தது. கீழைத்தேயப் பண்பாட்டில் அவர் பெற்றிருந்த ஆழமான அறிவுப் பின்னணியில் காணப்பட்ட வெற்றிடத்தை மேற்கில் அவர் பெற்ற அறிவு நிரப்பியது. மேற்கின் அறிவு அவரது ஆத்மீகப் பார்வையை எள்ளளவும் பாதிக்கவில்லை என்பதையும் அவரது ஆத்மீக சிந்தனையையும், நோக்கையும் அது மேலும் வலுவடையச் செய்தது என்பதனையும் இக்பால் பின்வருமாறு விளக்குகின்றார்:

அறிவு எனது தலையில்

சிலைகளையுடைய ஒரு கோயிலைக் கட்டியெழுப்பியது.

ஆனால் இப்ராஹீமை ஒத்த அன்பு

அந்த சிலைகளின் வீட்டை ஒரு கஃபாவாக மாற்றியது.

இப்ராஹீம் (அலை) அவர்கள் சிலைகளை ஒழித்து ஏக இறைவணக்கத்திற்காக கஃபாவைக் கட்டி எழுப்பியது போன்று கீழைத்தேயப் பண்பாட்டின் ஆத்மீகத் தன்மை, மேற்கத்திய உலகின் சடவாத அறிவின் ஆதிக்கத்தை அவரை விட்டும் நீக்கிய நிலையினை இக்கவிதையின் அடிகள் மூலம் இக்பால் உணர்த்துகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1905ம் ஆண்டு இக்பால் ஐரோப்பாவிலிருந்து நாடுதிரும்பிய காலகட்டத்தில் முதலாம் உலகப் போருக்குப் பின்னர் முஸ்லிம் உலகம் அரசியல் துறையில் வீழ்ச்சியையும், சிந்தனைத் துறையில் தேக்க நிலையையும் எதிர்நோக்கியது. முதலாம் உலகப் போரின் பின்னர் துருக்கி அதன் சுதந்திரத்தை இழந்தது. துருக்கியின் இழப்போடு ஏனைய முஸ்லிம் நாடுகளும் படிப்படியாக மேற்கத்திய அரசியல் ஆதிக்கத்தின் பிடியில் சிக்கின. ஈராக்கும், பாலஸ்தீனமும் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்டன. சிரியாவைப் பிரஞ்சுக் காரர்கள் தங்களது ஆதிக்கத்திற்கு உட்படுத்தினர். ஈரான் ஏற்கனவே அதன் சுதந்திரத்தை இழந்திருந்தது. ஈரானில் வடக்குப் பகுதியில் ரஷ்யாவும் தெற்கில் பிரிட்டிஷாரும் ஆதிக்கம் செலுத்தினர். நீண்ட காலத்திற்கு முன்பே இந்தியாவில் மொகலாய ஆட்சி ஆட்டங்கண்டு பிரிட்டிஷார் ஆதிக்கம் செலுத்தினர். இந்தோனேஷியா டச்சுக் காரரின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. மலாயா, நைஜீரியா, எகிப்து, சூடான், ஏடன், யெமன் போன்ற நாடுகள் பிரிட்டனின் குடியேற்ற நாடுகளாக மாறின. லிபியா இத்தாலியப் பிரதேசமாகியது. சோமாலியாவுக்கும் இந்நிலையே ஏற்பட்டது. டியுனிஸியா, அல்ஜீரியா, சாட், மாலி, மொரிடானியா முதலியன பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளாயின. மொரோக்கோவின் ஒரு பகுதியில் பிரெஞ்சுக் காரரும் இன்னொரு பகுதியில் ஸ்பானியரும் ஆதிக்கம் செலுத்தினர். சுருங்கக் கூறின் இன்று சுதந்திர நாடுகளாக உலகப் படத்தில் காட்சியளிக்கின்ற அனைத்து நாடுகளும் முதலாம் உலகப் போரின் முடிவில் மேற்கத்திய ஏகாதிபத்திய அரசியல் பிடியில் சிக்கியிருந்தன. அரசியல் அடிமைத்துவம், முஸ்லிம் உலகில் அறிவுப் பின்னடைவையும் சிந்தனைத் தேக்க நிலையையும் எதிர் காலத்தைப் பற்றிய நம்பிக்கையின்மை யையும் தோற்றுவித்தது.

இந்த வரலாற்றுச் சூழ்நிலையிலேயே மேற்கின் அறிவும், கிழக்கின் ஆத்மீகப் பாரம்பரியமும் ஒன்றாக இணைந்த ஆளுமையுடன் அறிவுப் பின்னணியுடன் இக்பாலின் இலக்கியக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, கலாசாரப் பண்பாட்டுப் பணி நடைபெறுகிறது. உதுமானிய ஆட்சியில் மக்காவின் அதிபராக இருந்த ஷரீப் ஹுஸைன் பிரிட்டிஷாரின் கைப்பொம்மையாக மாறி துருக்கியருக்கு எதிராக அரபு மக்களைக் கிளர்ந்தெழச் செய்து உதுமானிய ஆட்சி துண்டாடப்படக் காரணமாக அமைந்ததையும் அதன் விளைவாக இஸ்லாமிய உலகம் எதிர்நோக்கிய அவல நிலையையும் இக்பால் பின்வருமாறு சித்தரிக்கிறார்:

''திரித்துவ வாதிகள், இப்ராஹிமின் பாரம்பரியத்தைச்
சூறையாடிச் சென்றுவிட்டனர்.
கிறிஸ்தவக் கோயில்களின் அடித்தளத்திற்கான
செங்கற்களாக மாறும் பணியினை 'ஹிஜாஸின்' களிமண்
புரிந்துள்ளது

தங்கத்தைத் துண்டாடச் செய்யும் 'காத்' போன்று
மேற்கத்திய ராஜதந்திரம் முஸ்லிம் உம்மத்தைத் துண்டாடி
விட்டது

முஸ்லிமின் இரத்தம் தண்ணீரைவிட பெறுமதியற்றதாக
ஆகிவிட்டது.''

## இலட்சிய கவி இக்பால்

முஸ்லிம் உலகில் இந்த அவலநிலை இக்பாலின் நம்பிக்கையற்ற நிலையை விரக்தி மனப்பான்மையைத் தோற்றுவிக்கவில்லை. இஸ்லாத்தில் உள்ளார்ந்து அமைந்துள்ள உயிர்ச் சக்தி, இயக்கம் பற்றி இக்பால் நன்கு அறிந்திருந்தார். அவரது உள்ளம் உறுதியான ஈமானினால் போஷிக்கப்பட்டது. அவரது பார்வை தீட்சண்யமானது. அவர் கடந்தகால வரலாற்றில் காலூன்றி, எதிர்காலத்தை நம்பிக்கையோடு நோக்கினார். முஸ்லிம் உலகிற்கு ஒரு மகத்தான செய்தியை விடுத்தல் வேண்டும்; முஸ்லிம்களில் நம்பிக்கை உணர்வையும், அவர்களது ஆளுமையில் விசுவாசத்தையும், அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதத்தினதும் பண்பாட்டினதும் நிலையான சக்தியில் உறுதியான பிடிப்பையும் தோற்றுவித்தல் வேண்டும் என்ற உணர்ச்சித் துடிப்பு அவரில் ஆவேசமாக ஆர்த்தெழுந்தது.

இஸ்லாமிய உலகிற்கு அவர் விடுத்த செய்தியும் அழைப்புமே அவரது கவிதைகளாகும். முஸ்லிம் உலகை நம்பிக்கையோடு நோக்கிய இக்பால் முஸ்லிம்களின் உள்ளங்களில் நம்பிக்கையை துளிர்விடச் செய்ய அவரது ஆத்மீக வழிகாட்டியான மௌலானா ரூமியின் வார்த்தைகளைப் பயன்படுத்தினார்.

'பழைய வீட்டை மீண்டும் மக்கள் வாழத் தகுதியடையச் செய்ய முந்தைய கட்டடம் இடிந்து நொறுக்கப்படல் வேண்டும்."

என ரூமி கூறுகின்றார் என இக்பால் குறிப்பிட்டு, முஸ்லிம் உலகின் ஒரு புதிய சமூக அமைப்பு தோன்றுவதற்கு, அதன் தற்போதைய அரசியல் கட்டுக்கோப்பு முற்றிலும் ஒழிக்கப்படல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். முதலில் நீண்ட ஆழ்ந்த தூக்கத்தில் அயர்ந்திருக்கும் முஸ்லிம்களை விழிப்படையச் செய்வதே அவரது முதல் பணி என அவர் கருதினார். இதனால் அவரது முதல் கவிதைத் தொகுதிக்கு "பாங்கே தாரா" என இக்பால் பெயரிட்டார். "பாங்கே தாரா" எனில் மணியோசை எனப் பொருள்படும்.

இக்பால் தனது முதல் கவிதை நூலை 'மணியோசை' என அழைத்ததில் ஓர் ஆழமான தத்துவம் மறைந்துள்ளது. பாலைவனத்தில் பயணம் செய்யும் கரவான் கூட்டத்தினர் ஓர் இடத்தில் கூடாரமடித்துத் தங்கி இரவைக் கழிப்பர். பொழுது விடிந்ததும் கரவான் கூட்டத்தின் பயணம் ஆரம்பிக்கப் போகிறது என்பதனையும், எனவே அதற்காக விழித்திருந்து பயணத்திற்கு ஆயத்தம் செய்தல் வேண்டும் என்பதையும் அறிவிக்க ஒருவர் மணியை அடிப்பார். அந்த மணியோசை கேட்டதும் அனைவரும் விழித்தெழுந்து பயணத்திற்கு ஆயத்தமாகுவார்கள். தனது கவிதைகள் கரவான் கூட்டத்தின் மணியோசை போன்று முஸ்லிம் உலகை அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயர்ந்த தூக்கத்திலிருந்து விழித்தெழச் செய்து, இஸ்லாத்தின் இழந்த மாண்பை மீண்டும் பெறும் முயற்சியின் ஓர் இலட்சியப் பயணத்திற்கு அவர்களை ஆயத்தம் செய்தல் வேண்டும் என அவர் ஆசித்தார்.

எனவே இக்பால் வெறுமனே கனவுலகில் சஞ்சரித்த கற்பனைக் கவிஞரன்று; தனக்கென ஓர் இலட்சியத்தை வகுத்துக்கொண்டு இந்த இலட்சியத்திற்கு இலக்கிய உருவமளித்த ஓர் இலட்சியக் கவிஞர். ஒரு மகத்தான செய்தியை முஸ்லிம் சமூகத்திற்குச் சிறப்பாகவும், மனித குலத்துக்குப் பொதுவாகவும் விடுக்க வந்த ஓர் அழைப்பாளர். அவரது அழைப்பே அவரது கவிதைகள். மனித இனத்தின் இழிநிலை கண்டு வெதும்பிய ஓர் உள்ளத்தின் அவலக்குரலே அவரது ஆக்கங்கள். அவர் தனக்கென ஒரு தத்துவத்தை வரித்துக் கொண்டு அந்தத் தத்துவக் கருவை இலக்கியத்தில் வடித்த ஒரு தத்துவக் கவி. முஸ்லிம் உலகின் மறுமலர்ச்சி காண விழைந்த ஒரு நம்பிக்கை நட்சத்திரம்.

இக்பாலின் சிந்தனையினதும், தத்துவத்தினதும் மூல ஊற்றாகக் குர்ஆனும், நபி (ஸல்) அவர்களின் சுன்னாவும், இஸ்லாமிய பாரம்பரியமும் விளங்கின. உண்மையில் நோக்கும்போது, அவரது கவிதைகளும், கருத்துக்களும் குர்ஆனின் கருத்துக்களை அவர் தனது நோக்கில் அணுகி விளக்கும் முயற்சிகளாகவே அமைந்தன். இக்பாலின் முக்கிய அறிவுப் பங்களிப்பு நிகழ்ந்த காலப் பிரிவாகவும் அவரது இலக்கிய ஆக்கங்கள் முழுமையான வளர்ச்சி கண்ட கால கட்டமாகவும், 1910க்கும் 1935க்கும் இடைப்பட்ட காலப் பிரிவை நாம் குறிப்பிடலாம். அவரது முக்கிய கவிதைத் தொகுதிகள் அனைத்தும் இக்காலப் பிரிவிலேயே வெளிவந்தன. இக்பால் தனது கவிதைகளின் வெளிப்பாட்டு மொழியாக உர்துவையும், பாரசீகத்தையும் கையாண்டார். ஆனால் அவரது தத்துவக் கருத்துக்களைப் புலப்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான மொழியாக பாரசீக மொழியையே அவர் கருதினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இக்பாலின் ஆக்கங்கள்.

இக்பாலின் முக்கிய கவிதைத் தொகுதிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

### பாங்கே தாரா (மணியோசை)

இது இக்பாலின் முதலாவது கவிதைத் தொகுப்பாகும். அவரது உர்துக் கவிதைகளின் தொகுப்பாக இது அமைந்தது. இவை ஒரு குறிப்பிட்ட பொருளைத் தழுவிப் பாடப்பட்ட கவிதைகளன்று. பெரும்பாலும் அவரது கல்லூரிக் காலப் பிரிவில் அவரால் இயற்றப்பட்ட உர்துக் கவிதைகளை இத்தொகுப்பு உள்ளடக்கியுள்ளது. பொதுவாக ஒரு பொருளைத் தழுவிப் பாடப்பட்ட கவிதைகளாக இவை அமையாவிட்டாலும் இதில் காணப்படும் ஒவ்வொரு கவிதையும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தைக் கொண்டுள்ளது. கவிஞர், மனிதனின் ஆளுமை பற்றியும், மனித வாழ்வு பற்றியும் பிற்காலப் பிரிவில் தனக்கென ஒரு கட்டுக் கோப்பில் வரித்துக்கொண்ட ஆழமான தத்துவங்களின் ஆரம்ப வித்துக்களை "பாங்கே தாராவின்" கவிதைகளில் நாம் அவதானிக்க முடிகிறது.

### அஸ்ராரே குதி (உள்ளத்தின் இரகசியங்கள்):

இக்பால்; மனித ஆளுமையின் மகத்துவம், மனித உள்ளத்தின் உள்ளார்ந்த ஆற்றல்கள் பற்றி விளக்கப் பயன்படுத்திய கோட்பாடுகள் அவரது 'குதி' என்ற நூலாக அமைந்தது. 'அஸ்ராரே குதி'யும் அதனைத் தொடர்ந்து வெளிவந்த "ரூமுஸே பிகுதி" (உள்ளத்தை இழந்ததன் மர்மங்கள்) என்னும் கவிதை நூலும் மேலெழுந்தவாரியாக நோக்குமிடத்து முஸ்லிம்களைக் கருத்திற்கொண்டு பாடப்பட்டவையாகத் தோற்றமளித்தாலும், அது முழு மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தையும் நோக்காகக் கொண்டே பாடப்பட்டுள்ளது. தனிமனிதன் குறித்தும், சமூகம் பற்றியும் நவீன சித்தாந்தங்கள் கொண்டுள்ள கருத்துக்களுக்கு எதிரான இக்பாலின் புரட்சிக்குரலை இக்கவிதைத் தொகுதியில் நாம் கேட்க முடிகின்றது. மனிதனின் ஆளுமை, அதன் தனித்துவம், வளர்ச்சி என்பன "அஸ்ராரே குதி"யின் முக்கிய கருப் பொருளாகும். மனிதனின் தனித்துவமான ஆளுமையானது, அதன் உள்ளார்ந்த மகத்தான ஆற்றலை வெளிப்படுத்தி பூரண வளர்ச்சியைக் காண்பதற்கான வழிகளை இக்பால் விளக்குகின்றார். மனிதனின் ஆளுமையின் உறுதி, தொடர்ச்சி, வளர்ச்சி ஆகியவற்றை நிர்ணயிக்கும் விதிகளை விளக்கும் அவர் தனிமனிதனின் ஆளுமையின் வளர்ச்சியில் இறுதியான இலட்சியம் அவனைச் சூழஉள்ள சட உலகினை வெற்றிகொண்டு அதில் பூரண ஆதிக்கம் செலுத்தி "இறைவனின் பிரதிநிதி- 'கலீபதுல்லாஹ்' என்ற பூரண நிலையை பூமியில் அடைவதாகும்" என இக்பால் கூறுகின்றார். சுருக்கமாகக் கூறின், இதுவே அவரது "அஸ்ராரே குதி'' என்னும் கவிதைத் தொகுதியில் காணப்படும் கவிதைகளின் கருப்பொருளாகும். இந்நூல் அவரின் தத்துவத்தினை மிகச் சிறப்பாக விளக்கும் நூலாகும். இந்நூலை கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக அரபு, பாரசீகத் துறைப் பேராசிரியராக இருந்த ஆர்.ஏ. நிகல்ஸன் "The Secret of the Self" என்னும் பெயரில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

## ரூமுஸே பிகுதி (உள்ளத்தை இழப்பதன் இரகசியங்கள்)

இந்நூல் இக்பாலின் அஸ்ராரே குதியில் வெளியிடப்பட்ட கருத்துக்களைப் பூரணப்படுத்தும் கவிதைத் தொகுதியாகும். அதாவது முன்னையது தனிமனிதனின் ஆளுமை பற்றி விளக்க இந்நூல் தனிமனிதனை சமூகத்துடன் தொடர்புபடுத்தி விளக்குகின்றது. இக்பால் கனவுகாணும் இலட்சிய முஸ்லிம் சமூகம், அதன் அடிப்படை நோக்கம், குறிக்கோள், அதனை அடைவதற்கான வழிகள் ஆகியவற்றை இதில் விளக்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில் இக்பால் நவீன தேசியவாதத்தை மிக வன்மையாகக் கண்டிப்பதுடன் ஓர் இலட்சிய சமூகத்தின் மூலமாகவே ஓர் இலட்சிய மனிதன் உருவாகின்றான் என்ற கருத்தையும் முன்வைக்கின்றார். இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பே இந்த இலட்சிய சமூகம் எனக் கருதும் அவர் காலம், இடம் என்ற வரம்புக்குள் குறுகி அடங்கியுள்ள நவீன தேசியவாதத்துக்கு முரணாக இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பானது சர்வதேசிய தன்மையைப் பெற்றுள்ளதை விளக்குகின்றார். நவீன தேசிய வாதமானது பலவீனனை ஒடுக்கி, தனிமனிதனைப் புறக்கணிக்க, இஸ்லாம் பலவீனனுக்கு வலுவூட்டி தனிமனிதனின் ஆளுமையை வளரச் செய்து மேண்மையடையச் செய்கின்றது. வாழ்க்கையில் நிலைபேறு உள்ளத்திற்கு சக்தியும், வலுவும் அளிப்பதிலேயே தங்கியுள்ளது. இவ்வாறு உள்ளத்திற்கு இந்த வலுவையும், ஆற்றலையும் வழங்கும் அம்சங்களாக "ஆவல்", "வேட்கை" என்பன உள்ளதாக இக்பால் கருதுகின்றார். எனவே ஆவயையும்,வேட்கையையும் உருவாக்கிக் கொள்வதே வாழ்வின் மூல ஊற்றாகும். வேட்கை, ஆவல் போன்றே அன்பும், உள்ளத்திற்கு பலத்தையும், சக்தியையும் வழங்கி இயக்கச் செய்கின்றது. இயக்கமும், அசைவுமே மனித ஆளுமையின் வளர்ச்சியின் இரகசியமாகும் என குறிப்பிடும் இக்பால் , மனிதன் பிறரிடம் இரப்பதன் மூலம் அவனது ஆளுமையை மாசுபடுத்திக் கொள்வதாகக் கருதுகின்றார்.

அல்லாஹ்வின் பிரதிநிதி ( கலீபா ) என்ற நிலையை அடையும் இலட்சியப் பயணத்தில் மனித ஆளுமை கடந்து செல்லும் பல்வேறு படித்தரங்களை 'அஸ்ரார்' விளக்க 'ரூமுஸே பிகுதி' மனித ஆளுமையின் பூரண வளர்ச்சிக்கு 'சமூகம்' என்றஅமைப்பின் அவசியம் பற்றி குறிபிடுகின்றது. மனித ஆளுமையானது 'சமூகம்' என்ற நிறுவனத்தின் மூலம் பூரணத்துவம் பெறும்பான்மையினை இக்கவிதை நூல் மிகச் சிறப்பாக இக்கவிதை நூல் மிகச் சிறப்பாக சித்தரிக்கின்றது. கேம்ப்ரிஜ் பல்கலைக்கழகத்தின் அறபுப் பேராசியராகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிபுரிந்த ஏ.ஜே . ஆர்பரி ( Arberry ) இந்நூலை The Mystries Of Selflessness என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் 1953ம் ஆண்டு மொழிபெயர்த்தார்.

## பயாம் மஷ்ரிக (கிழக்கின் செய்தி)

இக்பாலின் கால ஐரோப்பாவின் நிலையை இந்நூல் சித்தரிக்கின்றது. இக்கவிதை நூலில் கீழைத்தேய உலகின் கோட்பாடுகளை மேற்குலகிற்கும், மேற்குலகின் கருத்துக்களை கீழைத்தேய உலகிற்கும் அவர் சமர்ப்பிக்கின்றார். ஜெர்மனியக் கவிஞர் "கொய்தே" (Goethe) யின் West Ostlicher Divan என்னும் கவிதை நூலிற்குப் பதிலளிக்கும் வகையில் இக்பால் இந்நூலை ஆக்கினார். ஜெர்மனியக் கவி கொய்தே அவரது நூலில், மேற்குலகானது ஆத்மீக உயிரோட்டத்தை இழந்து ஓர் உயிரற்ற பிணம் போன்று காணப்படுவதைக் கண்டிக்கின்றார். இந்த நிலையில் தத்தளித்துத் தடுமாறும் மேற்குலகிற்கு ஆத்மீக வேட்கை, அன்பிற்கான தாகம், நம்பிக்கை, மனோஉறுதியை வழங்கி, அதில் உயிரோட்டத்தையும், அசைவையும், இயக்கத்தையும் தோற்றுவிக்கும்படி கிழக்குலகை தனது "திவான்" மூலம் 'கொய்தே' வேண்டினார்.

அதற்கு ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர் கொய்தேயின் வேண்டுதலைப் பூர்த்திசெய்யும் வகையில் மேற்குலகிற்கு கிழக்கின் ஆத்மீகச் செய்தியை விடுத்து மேற்குலகின் ஆத்மீக வெற்றிடத்தை நிரப்ப முனையும் முயற்சியாகவே "பயாம் மஷ்ரிக் - கிழக்கின் செய்தி" அமைந்தது. மேற்குலகின் ஆத்மீக அடிப்படையற்ற நாகரிகத்தின் நாசகார விளைவுகளைச் சித்தரிக்கும் இக்பால், அதன் தற்போதைய நிலையிலிருந்து அது விடுதலை பெற்று, அது பயணம் செய்ய வேண்டிய பாதையின் குறிக்கோளையும் இலட்சியத்தையும் மிக அழகாக விவரிக்கின்றார். இந்நூலில் இக்பால் தனக்கும் கொய்தேக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தையும், வேறுபாட்டையும் மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகாகச் சித்தரிக்கின்றார். இக்பாலைப் பொறுத்தளவில் கொய்தே ஒரு பூங்காவில் தோன்றி வளர்ந்தவர்; ஆனால் இவரோ ஓர் இறந்த பூமியிலிருந்து தோன்றியவர். 'கொய்தே பூங்காவின் பறவையாக விளங்க, தானோ பாலைவனத்துக் கரவன் கூட்டம் பயணத்தைத் தொடங்குவதற்காக ஒலிக்கும் மணி'' எனக் குறிப்பிடுகின்றார்.

மனிதனின் உள்ளார்ந்த ஆத்மாவை வளர்த்துக்கொள்வது, உணர்ச்சியுள்ள உள்ளத்தைப் பெற்றிருப்பது, இறைகாதல் ஆகிய அம்சங்கள் இக்கவிதை நூலில் இக்பாலினால் வலியுறுத்தப்படுகின்றன. மேற்கின் சடவாதமும் (Materialism) பகுத்தறிவு வாதமும் (Rationalism) வாழ்க்கையின் உயிர்த்துடிப்பை இழந்திருப்பதை இக்பால் சுட்டிக் காட்டுகின்றார்:

"மேற்குலகிடம் பயணம் செய்வதற்கான படகு உள்ளது. ஆனால் கரைசேரும் இடம் பற்றிய அறிவு அதனிடமில்லை.'' "அறிவை அன்போடு இணைப்பீராக" என்பதே இக்கவிதை நூல் மூலம் இக்பால் மேற்குலகிற்கு விடுக்கும் செய்தியாகும். புற உலகில் மட்டும் கவனம் செலுத்தாது தன்னை உள்ளார்ந்து நோக்கி தனக்குள் உள்ளார்ந்து அமைந்துள்ள உலகிலும் கவனம் செலுத்தும்படி இக்பால் மேற்குலகை அழைக்கின்றார்.

பேராசிரியர் நிக்கல்ஸன் The Message of the East எனும் பெயரில் இதன் சில பகுதிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். பாகிஸ்தானில் எகிப்தின் தூதுவராகக் கடமையாற்றிய கலாநிதி அப்துல் வஹ்ஹாப் அஸ்ஸாம் "பயாம் மஷ்ரிகை" அரபியில் மொழி பெயர்த்தார். இம்மொழிபெயர்ப்பு 1951ம் ஆண்டு வெளியாகியது.

## ஸபூ ரே அஜம (கிழக்கின் பாடல்கள்)

இது இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. முதலாவது பகுதியில் "கஸல்" எனும் கவிதை உருவைச் சார்ந்த பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. இரண்டாவது பகுதி "குல்ஷான் ராஸ்ஜதீத்" (புதிய ரோஜாப் பூங்காவின் இரகசியங்கள்) எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது பாரசீகக் கவிஞர் மஹ்மூத் ஷபிஸ்ரிதியின் ஷூபி கவிதைகளை உள்ளடக்கிய "குல்ஷானே ராஸ்" என்னும் கவிதை நூலின் அமைப்பைப் பின்பற்றி இயற்றப்பட்டுள்ளது. ஓர் ஆத்மஞானி அவரிடம் கேட்ட ஒன்பது வினாக்களுக்கு விடையாக இக்கவிதை நூலை ஷபிஸ்ரிதி இயற்றினார். இக்பால் தனது "குல்ஷான் ராஸ் ஜதீத்" என்னும் இந்நூலில் அதே வினாக்களுக்கு நவீன சிந்தனையின் வெளிச்சத்தில் விடை பகர்கின்றார். இக்கவிதை நூலில் வாழ்வின் நித்திய மர்மங்கள் பற்றியும் இறை காதல் பற்றியும் இக்பால் விளக்குவதுடன் ஆழ்ந்த தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து, இயக்கம், அசைவு என்பவற்றின் இரகசியங்களைக் கற்றுக்கொள்ளும்படி இக்பால் அழைக்கின்றார். "ஸபூரே அஜம்" என்னும் இந்நூலில் முதல் பகுதி மட்டும் Persian Psalms என்னும் பெயரில் பேராசிரியர் ஏ.ஜே. ஆர்பரியினால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு 1949ம் ஆண்டு பிரசுரமாகியது.

**ஜாவித் நாமா**

ஜாவித் நாமா இக்பால் பற்றிய ஒரு மகோன்னத காவியமாகக் கருதப்படுகின்றது. ஆங்கிலக் கவி மில்டனின் "சுவர்க்க நீக்கம்" (Paradise Lost) போன்ற ஒரு காவியத்தை ஆக்க வேண்டும் என்ற ஆர்வமும், வேட்கையும் இக்பாலில் காணப்பட்டது. இவரது இந்த இலட்சிய வேட்கையை 'ஜாவித் நாமா'வில் அவர் அடைந்தார் எனத் தயக்கமின்றி நாம் கூறலாம். இக்பாலின் இக்காவியத்தைச் சிலர் இத்தாலியக் கவிஞரான டாந்தே (dante) யின் "டிவைன் கொமடி" (Divina Comedia) என்னும் காவியத்துடன் ஒப்புநோக்கி ஆராய்ந்துள்ளனர்.

"ஜாவித்" என்பது இக்பாலின் இளைய புதல்வரது பெயராகும். "ஜாவித்" என்னும் பதம் பாரசீக மொழியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நித்தியத்துவம்" என்ற கருத்தைக் குறிக்கின்றது. இக்காவியத்தின் மூலக் கருப்பொருளாக "நித்தியத்துவம்" என்ற கோட்பாடே உள்ளது.

நபி (ஸல்) அவர்களின் வாழ்வில் நிகழ்ந்த மிஃராஜ் சம்பவமானது அரபிலக்கியத்திலும், பாரசீக இலக்கியத்திலும் மிக ஆழமான செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளது. ஸூபி கவிஞர்களில் பலர் தங்களது ஆத்மீக அனுபவங்களை விளக்க இந்த நிகழ்ச்சியின் புறவடிவை (Exrernal form) பயன்படுத்தி யுள்ளனர். இப்னு அரபி தனது "தர்ஜுமானுல் அஷ்வாக்" என்னும் நூலை இவ்வகையிலே ஆக்கியுள்ளார். தாந்தேயின் 'Divina Comedia' இலக்கிய வடிவத்தில் மிஃராஜின் செல்வாக்கு காணப்படுவதாக இத்தாலிய நாட்டின் அரபு அறிஞர், பேராசிரியர் ஆஸிஸ் பலாஸியோஸ் குறிப்பிடுகின்றார். தாந்தேயின் காவியத்தில் வெர்ஜில் (Virgil) என்னும் இத்தாலியக் கவி, தாந்தேயை பல்வேறு வானுலகக் கிரகங்களுக்கு வழி காட்டிச் செல்பவராக விளங்குகின்றார். இக்பால், ஜாவித் நாமாவில், பாரசீக ஸூபி மகானும், கவிஞருமான மௌலானா ஜலாலுத்தீன் ரூமியை, பல்வேறு கிரகங்களுக்குத் தன்னை அழைத்துச் செல்லும் வழிகாட்டியாகக் கொள்கின்றார். ரூமியைத் தனது தத்துவக் கருத்துக்களை வெளியிடுவதற்கு ஓர் ஊடகமாக அவர் பயன்படுத்துகின்றார். கிரேக்கத் தத்துவஞானி பிளேட்டோ தனது Republic என்னும் நூலில் அவரது தத்துவக் கருத்துக்களை வெளியிட சோக்ரடீஸை ஓர் ஊடகமாகக் கொள்வதற்கு இதனை நாம் ஒப்பிடலாம்.

ரூமி வழிகாட்ட இக்பால் சந்திரன், புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி ஆகிய கிரகங்களைத் தரிசிக்கின்றார். அங்கு பல சிந்தனையாளர்கள், கவிஞர்கள், தத்துவஞானிகள், சீர்திருத்த வாதிகள், அரசியல் தலைவர்கள் உட்பட பலரைச் சந்திக்கும் இக்பால் அவர்களுடன் உரையாடும் பாணியில், அவர்கள் மூலம் தனது கருத்துக்களை வெளியிடுகின்றார். சந்திரன் கிரகத்தில் அவர் இந்தியத் துறவியான விசுவாமித்திரரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திக்கிறார். மேற்குலகின் அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்று கிழக்குலகு எழுச்சியுறுவதற்கான அறிகுறிகள் தென்படும் நற்செய்தியை விசுவாமித்திரர் இக்பாலுக்கு அறிவிக்கின்றார். அங்கு யகமித் பள்ளத்தாக்கில் நான்கு பலகைகளில் பௌதர், ஸொரஸ்தர், ஈஸா (அலை), முஹம்மத் (ஸல்) அவர்களின் போதனைகள் பொறிக்கப்பட்டுள்ளதை இக்பால் அவதானிக்கின்றார். அதனைத் தொடர்ந்து அவர்களது போதனைகளின் முக்கிய அடிப்படைகளை அவர் விளக்குகின்றார்.

அதனைத் தொடர்ந்து ரூமி அவரைப் புதன் கிரகத்திற்கு அழைத்துச் செல்கின்றார். அங்கு கிழக்குலகின் இரு பெரும் தலைவர்களாக விளங்கிய ஜமாலுத்தீன் ஆப்கானியும், ஸெய்யித் ஹலீம் பாஷாவையும் அவர் சந்திக்கிறார். மதத்திற்கும் தேசிய வாதத்திற்கும் இடையிலான போராட்டம் நிகழ்வதையும், தேசிய வாதம் கிழக்குலகை துண்டாட முற்பட்டுள்ளதையும், இக்பால் ஆப்கானியிடம் கவலையுடன் முறையிட அவர் நவீன கோட்பாடுகளான தேசியவாதம், கம்யூனிஸம், ஏகாதிபத்திய வாதம் ஆகியவற்றைக் கண்டிக்கின்றார். கிழக்கையும், மேற்கையும் ஒப்பிட்டு அறிவும், அன்பும் இணைந்த ஒரு புத்துலகம் தோன்றுதல் வேண்டும் என்ற வேட்கையை ஸெய்யித் ஹலீம் பாஷா இக்பாலுக்கு வெளிப்படுத்துகின்றார். இவ்வாறு ஒவ்வொரு கிரகத்திலும் சிந்தனையாளர்கள், அரசியல்ஞானிகள், ஆட்சியாளர்கள், தத்துவஞானிகள், சமூக சீர்திருத்த வாதிகளைச் சந்தித்து உரையாடிய பின்னர் இக்பாலும் ரூமியும் பூமிக்குத் திரும்புகின்றனர்.

இக்பாலின் ஜாவித் நாமா மனித உள்ளத்தின் வேட்கையின் வெளிப்பாடாகும். எல்லையற்றுப் பரந்து வியாபித்துள்ள நித்தியமானது எல்லையையும், கட்டுப்பாட்டையும் கொண்ட மனிதனில் செயல்படுவதை அது விளக்குகின்றது. மனித உள்ளத்தின் ஆழத்தையும் நுட்பத்தையும் அதன் வேட்கைகளையும், அதில் புதைந்துள்ள மகத்தான ஆற்றல்களையும் அது சித்தரிக்கின்றது. ஷெய்க் மஹ்மூத் அஹ்மத் என்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாவித் நாமாவை 'Pilgrimage of Eternity என்ற பெயரில் ஆங்கிலத்தில் பெயர்த்தார். கலாநிதி அலெக்ஸான்ட்ரோ பௌஸானீ இதனை "Poema Celeste' என்னும் தலைப்பில் இத்தாலிய மொழியில் பெயர்த்தார்.

## பாலே ஜிப்ரீல (ஜிப்ரீலின் இறக்கைகள்)

இதன் முதல் பகுதி 61 கஸல் என்னும் பாக்களையும், சில நாலடிக் கவிதைகளையும் கொண்டுள்ளது. இரண்டாவது பகுதி ஸ்பெயினில் கொர்டோவா மஸ்ஜிதின் பிரார்த்தனையோடு ஆரம்பமாகிறது. இப்பகுதியில் கவிஞர் ஸ்பெயினைத் தரிசித்தபோது பாடிய பல கவிதைகள் உள்ளன. சமகால நிகழ்வுகளைத் தழுவிய பல கவிதைகளும் காணப்படுகின்றன. இதில் காணப்படும் 'மஸ்ஜித் குர்துபா' என்னும் கவிதை விக்டர் கியேர்னன் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

## ளர்பே கலீம்

தத்துவக் கவிஞரான இக்பால் நவீன வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை விமர்சிக்கும் கவிதைகளின் தொகுப்பாக இது உள்ளது. பனூ இஸ்ராயில்கள் பாலைவனத்தில் அலைந்து திரியும்போது, தாகத்தினால் தவித்த சூழ்நிலையில் மூஸா (அலை) அவர்கள் இறைவனின் கட்டளைப்படி தங்களது 'அஸா' என்னு தடியால் கற்பாறையில் அடிக்க அதிலிருந்து நீர் பிரவாகித்து ஊற்றெடுத்ததை குர்ஆன் பின்வருமாறு விளக்குகின்றது:

"மூஸா தம் கூட்டத்தவரக்குத் தண்ணீர் புகட்டத் தேடியபோது நாம் (அவரிடம்) "நீர் உம்முடைய (கைத்) தடியால் இக் கல்லை அடிப்பீராக!" எனக் கூறினோம். (அவர் அடித்தார்) உடனே அதிலிருந்து பன்னிரண்டு நீர் ஊற்றுக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீறிட்டோடின; ஒவ்வொரு கூட்டத்தினரும் தாங்கள் (அருந்தும்) (தண்ணீர்த்) துறையைத் திட்டமாக அறிந்துகொண்டார்கள். (அப்பொழுது) அல்லாஹ்வின் உணவிலிருந்து உண்ணுங்கள்; இன்னும் பருகுங்கள்; மேலும், பூமியில் குழப்பம் செய்பவர்களாக வரம்பு மீறி அலையாதீர்கள்" (என்று நாம் கூறினோம் என்பதையும் நினைவு கூருங்கள்)"

(அல்-குர்ஆன் 2:60)

குர்ஆனின் இத்திருவசனத்தின் அடிப்படையிலேயே இக்பால் இக்கவிதைத் தொகுதியை "ளர்பே கலீல்" அதாவது கலீமுல்லாஹ்வென்னும் "மூஸாவின் அடி" என அழைக்கின்றார். மூஸா (அலை) அவர்களின் கைத்தடியால் அடிக்கப்பட்டபோது கற்பாறையிலிருந்து நீரானது பீறிட்டுக் கிளம்பியது போன்று தமது கவிதை என்னும் தடியால் அடிக்கும் அடி முஸ்லிம்களது உள்ளங்களில் உணர்ச்சி என்னும் நீரூற்றை தோற்றுவித்தல் வேண்டும் என இக்பால் ஆசிக்கின்றார்.

## அர்முகானே ஹிஜாஷ் (ஹிஜாஸின் அன்பளிப்பு)

இக்பாலின் பாரசீக, உர்துக் கவிதைகளைக் கொண்டுள்ள இத்தொகுப்பு அவரது மறைவின் பின்னர் 1938ம் ஆண்டு பிரசுரிக்கப்பட்டது.

## இக்பாலின் தத்துவம்

இக்பாலின் கவிதைகள் அனைத்தும் அவரது தத்துவத்தின் வெளிப்பாடாகும். இக்பால், ஏற்கனவே குறிப்பிடப்பட்டவாறு கலையின் பணி, மனித ஆளுமையை உயிர் துடிப்போடு இயங்கச் செய்வதும், மனித சமூகத்தின் மேம்பாட்டுக்கு வழியமைத்துக் கொடுப்பதுமாகும் என்ற தத்துவத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். இக்பாலின் கவிதைகள் மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்விற்குப் பொதுமையான உணர்வுகள், பிரச்சினைகள் பற்றிப் பேசுகின்றன. அவரது கவிதைகள் அனைத்திலும் அவர் வரித்துக்கொண்ட தத்துவமே பிரதிபலிக்கின்றது. அவரது தத்துவத்தின் மூல ஊற்றாக குர்ஆனே விளங்குகின்றது. குர்ஆன் எப்படி மனித சமுதாயம் முழுவதற்கும் பொதுவானதோ, அதன் தூண்டுதலினால் உருவான இக்பாலின் கவிதைகளும் மனித இனம் முழுவதற்கும் பொதுவான கருத்துக்களையே உள்ளடக்கியுள்ளன.

குர்ஆனின் அடிப்படைக் கோட்பாடான, மையக் கருத்தான, "தௌஹீத்" என்னும் ஏகத்துவக் கோட்பாடு மனித ஆளுமையிலும் வாழ்விலும் ஏற்படுத்தும் ஆழமான செல்வாக்கை இக்பால் இப்படிக் கூறுகின்றார்:

> ''நூற்றுக்கணக்கான உள்ளங்களில் ஒரே மூச்சைத் தோற்றுவிப்பது எது? இதுவே தௌஹீதின் இரகசியமாகும்.
>
> எனவே ஒன்றுபடுங்கள் தௌஹீதைப் பிரத்தியட்சமாக வெளிப்படுத்துங்கள்..''
>
> அது செயல், அசைவு, இயக்கத்தின் மூலமே வெளிப்படு கின்றது.
>
> நம்பிக்கை, ஞானம், சட்டம் அனைத்தும் அதிலிருந்தே தோற்றமெடுக்கின்றன.
>
> ஆற்றல், சக்தி, உறுதி ஆகியவற்றின் மூலமும் இதுவே.
>
> அதன் சக்தி மனிதனின் ஆளுமையை உயர்த்துகின்றது.
>
> அவனைப் புதுமனிதனாக ஆக்குகின்றது.
>
> சந்தேகமும், சபல உள்ளமும் அதன் முன் சக்தி இழந்து விடுகின்றன.
>
> செயலார்வம் அதன் முன் துடிப்போடு இயங்குகின்றது.
>
> அதன் மூலம் மனிதனின் பார்வை பிரபஞ்சம் முழுவதையும் தரிசிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனைத் தவிர வேறு நாயன் இல்லை.

இதுவே எங்கள் வாழ்வின் மூலதனம். தௌஹீத் சிதறிய எங்கள் சிந்தனைகளை ஒன்றிணைக்கின்றது.."

(அஸ்ராரே குதி)

ஏகத்துவத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட சமூகம், அதன் பாரம்பரியத்தைப் பேணிவாழுவதன் அவசியத்தை இக பால் வலியுறுத்துகின்றார். ஒரு மனிதனுக்கு அவனது ஆளுமை போன்றதே ஒரு சமூகத்திற்கு மரபும், பாரம்பரியமுமாகும் என்ற இக்பாலின் கருத்தை "ஜாவித் நாமா"வில் பின்வருமாறு விளக்குகின்றார்:

"தனிமனிதன் அவனது ஆளுமை பற்றிய உணர்வைப் பெறும்போதே, அவன் தனிமனிதன் ஆகின்றான்.

ஒரு சமூகம், அதனது சட்டங்களுக்கும், மரபிற்கும் முரணான ஒன்றை மறுத்து தனது தனித்துவத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் போது தான் அது சமூகமாகின்றது.

அல்லாஹ் அல்லாத வேறு சக்திகள் பற்றிய பயமானது செயலின் பகைவனாகும் அது வாழ்வு என்னும் கரவானின் பயணத்தையே தடுத்து விடுகின்றது.."

தௌஹீத் எனும் இறை ஒருமைப்பாடு பற்றிய இஸ்லாமிய கோட்பாட்டிற்கு அடுத்து இஸ்லாத்தின் முக்கிய இடத்தைப் பெறுவது 'ரிஸாலத்' என்னும் இறைதூது பற்றிய கோட்பாடாகும். இந்த இறைதூதின் பூரணத்துவமாக இஸ்லாமும், இறைதூதர்களின் முற்றுப்பேறாக இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களும் விளங்குவதையும், அந்த இறுதித்தூதரே முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு கட்டுக்கோப்பையும் உறுதியையும் தலைமைத்துவத்தையும் வழங்கினார்கள் என்பதையும் இக்பால் தனக்கே உரிய சிறப்பான பாணியில் பின்வருமாறு விளக்குகின்றார்:

"இறைவன் முஸ்லிம் சமூகம் என்ற உடலைச் சிருஷ்டித்து, அதில் இறைத் தூதர் மூலம் உயிரைப் புகுத்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மூலமாகவே நாங்கள் எங்களது மார்க்கத்தைப் பெற்றோம்.

எங்கள் சட்டங்கள், அமைப்பு அனைத்தினதும் மூலம் அவர்களே.

அவர்கள் மூலமாகவே ஆயிரக்கணக்கான பிரிவுகளாக இருந்த நாங்கள் ஒன்றாகினோம்.

எங்கள் ஒவ்வொரு பகுதியும், ஏனைய பகுதிகளிலிருந்து பிரிக்க முடியாது பின்னிப் பிணைந்துள்ளதும் அவர்கள் மூலமே.

அவர்களுக்கு வழங்கப்பட்ட அருள் மறையாம் அல்குர்ஆன் தனி முஸ்லிமுக்கு வல்லமையையும், சக்தியையும் அளிக்கின்றது.

அவர்களது 'ஹதீஸ்' சமூகத்திற்கு ஒருமைப்பாட்டையும் உறுதியையும் வழங்குகின்றது.

தனிமனிதன் இறைவன் மூலம் வாழுகின்றான்.

சமூகம் அவர்கள் மூலம் வாழுகின்றதுளூ அவர்களது சூரிய ஒளியின் மூலம் பிரகாசிக்கின்றது.''

ஒரு தனிமனிதனுக்கும், சமூகத்திற்கும் ஒரு குறிக்கோள், இலட்சியம் அவசியம் எனக் கருதும் இக்பால், முஸ்லிமுக்கும், முஸ்லிம் சமூகத்திற்கும் 'தௌஹீத்' என்னும் ஏகத்துவக் கோட்பாடு ஒரு மகத்தான இலட்சியத்தை வழங்குவதாக குறிப்பிடுகின்றார். ஓர் இறைவிசுவாசி வரித்துக்கொண்ட அந்த உன்னதமான இலட்சியம் பற்றி பின்வருமாறு பாடுகின்றார்:

''விடியற் காலையின் ஒளியைப் போல பிரகாசிக்கும் தூய்மையான இலட்சியம்.

இறைவனல்லாத அனைத்தையும் சுட்டுப் பொசுக்கும் கொழுந்து விட்டெரியும் நெருப்பைப் போன்ற இலட்சியம்.

வானத்தைவிட உயர்ந்து, விசாலித்துப் பரந்த மக்களின் உள்ளங்களை ஆட்கொண்டு அடிமைப் படுத்துகின்ற மகத்தான இலட்சியம்.''

(அஸ்ராரே குதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மனிதன் எப்போதும் அந்த இலட்சியத்தை அடையும் வகையில் இயங்குதல் வேண்டும். அசைவும் இயக்கமும் துடிப்புமே வளர்ச்சியின், வெற்றியின் இரகசியம் என்பது அவரது கருத்தாகும். மனிதனின் வாழ்வை ஓர் இலட்சியப் பயணமாக நோக்கும் இக்பால், அந்த இலட்சியத்தை அடைவதில் மனிதன் மேற்கொள்ள வேண்டிய முயற்சியைப் பின்வரும் வகையில் விளக்குகின்றார்:

''வாழ்வு தேடுதலில் மறைந்துள்ளது – அதன் தோற்றம்,
ஆவலிலும் வேட்கையிலும் உள்ளது.

உனது உள்ளத்தில் ஆவலையும், வேட்கையையும்
தேடுதலையும் அமைத்துக்கொள்.

அப்படியில்லாவிடில் உனது புழுதி வெறும் மண்ணறையாக
மாறிவிடும்.

வேட்கையெனும் நெருப்பின் ஜுவாலையிலிருந்தே உள்ளம்
வாழ்வதற்கான சக்தியைப் பெற்றுக்கொள்கின்றது.''

(அஸ்ராரே குதி)

நாங்கள் இலட்சியங்களினாலேயே உயிர் வாழுகின்றோம். வேட்கையெனும் சூரியனின் வெளிச்சத்தினாலேயே ஒளி பெருக்குகின்றோம்.

மனித வாழ்விற்கு இயக்கமும் அசைவும் அவசியம் என்பதை வலியுறுத்தும் இக்பால், இந்த் இயக்கமும் அசைவும், மனிதனில் உருவாவதற்கு அவன் தன்னில் உள்ளார்ந்து மறைந்துள்ள சக்திகளை, அந்த உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிப்படுத்தப் போராட்டத்தில் ஓயாது ஈடுபடல் வேண்டும் எனக் கூறுகின்றார். இதுவே இக்பாலின் "குதி" பற்றிய தத்துவமாகும்.

கவிஞரது கவிதைகளில் மனித ஆளுமையோடும், வாழ்வோடும் தொடர்புடைய தீட்சண்யப் பார்வை பிரபஞ்சம் முழுவதையும் தழுவிய விசாலமான பார்வையாக அமைந்தது. ஆனால் அவரது கருத்துக்களினதும் தத்துவத்தினதும், அவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பாடாக அமைந்த கவிதைகளின்தும் மையக் கருத்தாக அமைந்தது அவரது "குதி" பற்றிய தத்துவமாகும். அவரது தத்துவம் "குதி"யைக் கருப் பொருளாகவும், குர்ஆனை மூல ஊற்றாகவும் கொண்டே சுற்றிச் சுழலுகின்றது. இக்பாலின் இந்த "குதி" பற்றிய கோட்பாடு அவரது முக்கிய ஆக்கமான "அஸ்ராரே குதி"யில் விளக்கப்படுகின்றது. மேற்குலகில் தாகூரின் புகழும், கீர்த்தியும் அவரது 'கீதாஞ்சலி' மூலம் பரவியது போன்று, இக்பாலின் "அஸ்ராரே குதி" மேற்குலகில் அவர் பிரபல்யம் பெறக் காரணமாக அமைந்தது.

"குதி" என்ற பதம் இக்பாலினால், அவருக்காக உரிய கோட்பாட்டைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே இதற்கு இணையான, அவரது இந்த தத்துவத்தை முழுமையாகப் புலப்படுத்தும் ஒரு வார்த்தையை எந்த ஒரு மொழியிலும் கையாளுதல் சிரமமானதாகும். இதனைப் பேராசிரியர் நிக்கல்ஸன் அவரது "அஸ்ராரே குதி" க்கான ஆங்கில மொழிபெயர்ப்பின் முன்னுரையில் மிகச் சிறப்பாக விளக்கியுள்ளார். ஆங்கிலத்தில் Self, Selfhood போன்ற பதங்கள் 'குதி'யைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. இதனைத் தமிழில் 'உள்ளம்' என நாம் பொதுவாகக் குறிக்கலாம். ஆனால் இது 'கல்ப்' என்ற கருத்தில் உள்ளதைக் குறிக்கவில்லை. மனிதனின் உள்ளத்தில் உள்ளார்ந்து மறைந்துள்ள மகத்தான ஆற்றல்களையே குறிக்கின்றது. மனித ஆளுமையின் சிறப்பு, மகத்துவம், மனிதனின் ஆளுமை வளர்ச்சியில் உள்ளத்தின் பங்கு, உள்ளத்தில் உள்ளார்ந்து மறைந்துள்ள மகத்தான ஆற்றல்கள், அவற்றை வளர்த்துப் போஷிக்கும் வழிமுறைகள் ஆகிய அம்சங்கள் 'குதி' பற்றிய விளக்கமாக அமைகின்றன. 'குதி'யை இக்பால் "எங்களது மண்ணின் கீழ் மறைந்துள்ள தீப்பொறி" என வர்ணிக்கின்றார்.

அவரது இடையறாத மனப்போராட்டம், சத்தியத்திற்கான தேடல், உழைப்பு என்பவற்றின் அறுவடையே அவரது 'குதி' என்னும் தத்துவம் என்பதனை இக்பால் குறிப்பிடுகின்றார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வீணையின் நரம்புகளிலிருந்து புறப்படும் இசை போன்று காதுகளுக்கு ஒரு சுவர்க்கத்தை ஆயத்தப்படுத்த நான் தோன்றினேன்.

உள்ளத்தின் மர்மத்தின் திரையை நான் நோக்கினேன்.

அதன் இரகசியத்தை நான் புலப்படுத்தினேன்.

எனது ஆளுமையானது சிற்பியின் கைவண்ணத்தினால் பூர்த்தி செய்யப்படாத ஒரு சிலை போன்று இருந்தது – அழகற்றதாக பெறுமதியும் மதிப்புமற்றதாக அது காட்சியளித்தது.

ஆனால் அன்பு என்னைச் செதுக்கியது – நான் மனிதன் ஆனேன; பிரபஞ்சத்தைப் பற்றி அறிவைப் பெற்றேன்.

வானத்தின் தசை நார்களின் அசைவை நான் கண்டுள்ளேன். சந்திரனின் நாளங்களில் இரத்தம் ஓடுவதை நான் பார்த்துள்ளேன்.

இயற்கையின் பரிசோதனைக் கூடத்திலிருந்து வாழ்க்கையின் இரகசியத்தை கண்டறிந்து, வாழ்க்கையின் மர்மத்தின் திரையைக் கிழித்தெறிந்து அதனைப் புலப்படுத்துவதற்காக மனிதனுக்காக பல இரவுகள் நான் அழுது புலம்பியுள்ளேன்."

(அஸ்ராரே குதி)

மனிதனின் ஆளுமையில், உள்ளத்தில் மகத்தான ஆற்றல்கள் உள்ளார்ந்து மறைந்துள்ளன. இவற்றை இனங்கண்டு, போஷித்து வளர்ப்பதன் மூலமே மனித ஆளுமை சிறப்படைகின்றது என இக்பால் கருதுகின்றார். ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுக்கே உரிய தனித் தன்மை -'குதி'- உள்ளது. அதனை அவன் வெளிக் கொண்டுவர முனைதல் வேண்டும் என்ற கருத்தை இக்பால் வலிறுத்துகின்றார்:

"உலகிலுள்ள ஒவ்வொன்றும் அதன் உணர்வுகளை வெளிப்படுத்தும் நிலையிலேயே உள்ளன.

ஒவ்வொரு அணுவும் உயர்ச்சியடையும் பணியில் தன்னை அழித்துக் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனது ஆற்றல்களை வெளிப்படுத்தாத வாழ்வு வாழ்வன்று.

தனது தனித்தன்மையை பூரணப்படுத்துவதன் மூலமே மனிதன் மேன்மையடைகின்றான்

தனது தனித்தன்மையைப் பாதுகாத்துக் கொள்வதன் மூலமே சிறு கடுகானது பிரமாண்டமான மலையின் உருவத்தைப் பெறுகின்றது.

'நீ' என்னும் உனது தனித்தன்மை மட்டும்தான் உலகில் உண்மையானது.

ஏனைய அனைத்தும் வெறும் கானல் நீரேயாகும்.''

(பாலே ஜிப்ரீல்)

மனிதனில் உள்ளார்ந்து மறைந்துள்ள இந்த ஆற்றல் களையும், தனது தனித்துவத்தையும் வளர்ப்பதற்கு இரண்டு வழிகளை இக்பால் குறிப்பிடுகின்றார் 'குதி' (உள்ளமானது) எப்போதும் இயங்கிக்கொண்டே இருத்தல் வேண்டும். இயக்கமும் அசைவுமே 'குதி'யை வளர்ச்சியடையச் செய்கின்றன. இவ்வாறு உள்ளத்தை இயங்கச் செய்வதற்கான இரு வழிகளாவன, மனிதன் தனக்கென உன்னதமான இலட்சியங்களை அமைத்துக்கொண்டு அவற்றை அடையும் வரையில் ஓயாது இயங்குவதும், அன்பை தன்னில் உருவாக்கிக் கொள்வதும் என இக்பால் குறிப்பிடுகின்றார்:

''வாழ்வு இலட்சியத்தினாலேயே பாதுகாக்கப்படுகின்றது.

இலட்சியம், நோக்கம் காரணமாகவே அதன் கரவான் மணி ஒலித்துக் கொண்டிருக்கிறது.

வாழ்வு என்பது தேடுதலில் மறைந்துள்ளது.

அதன் மூலமும், தோற்றமும் வேட்கையில் மறைந்துள்ளன.

இந்த வேட்கை மட்டும் இல்லாவிடில் எனது மண் புதைகுழியாக மாறிவிடும்.

இந்த உலகத்தின் ஆத்மா வேட்கையாகும்.

வேட்கையே நெஞ்சில் இதயத்தை துடிக்க வைக்கின்றது.''

( அஸ்ராரே குதி )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தின் வேட்கையை உருவாக்கிக் கொள்வதுடன், மனிதன் அதில் அன்பையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென இக்பால் கூறுகின்றார். அன்பைக் குறிக்க இக்பால் "இஷ்க்" என்னும் சொல்லைப் பயன்படுத்துகின்றார். இந்தச் சொல்லானது மிக விரிவான கருத்தில் இக்பாலினால் பயன்படுத்தப்படுகின்றது. 'ஒன்றை விரும்பி, நேசித்து, அதனைத் தன்னோடு இணைத்துக் கொள்ளலையே' இது குறிக்கின்றது. "இஷ்கின்" மிக உயர்ந்த நிலையானது மதிப்பீடுகள், இலட்சியங்களை உருவாக்கி அவற்றை அடைய முனைதலாகும். இத்தகைய (இஷ்க்) அன்பானது "குதி" என்னும் ஆளுமை உணர்விற்கு சக்தியும் ஊட்டமும் நல்கி வலுவூட்டுவதாக இக்பால் குறிப்பிடுகின்றார்:

> ''உள்ளார்ந்த ஆத்மா (குதி) என்பது எங்களது மண்ணின் கீழ் அமைந்துள்ள (உடல்)..
>
> அதற்கு உயிரளிக்கும் தீப்பொறியாகும்.
>
> அன்பு அதனை மேலும் எரிந்து, ஒளி பெறச் செய்கின்றது.
>
> அதன் ஒளி அன்பின் மூலம் தோற்றமெடுக்கின்றது.
>
> அன்பு வாளுக்கோ, ஈட்டிக்கோ அஞ்சுவதில்லை.
>
> அன்பின் பார்வையினால் மிக வன்மையான கற்பாறைகள் கூட நடுங்குகின்றன.
>
> அன்பு பாராட்டக் கற்றுக்கொள்வாயாக.
>
> ஒரு நேசனைத் தேடுவாயாக.
>
> நூஹ்வின் பார்வையையும், யஃகூபின் உள்ளத்தையும் தேடுவாயாக.
>
> கையளவுள்ள உனது மண்ணை (ஆளுமை) தங்கமாக மாற்றுவாயாக.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு வேட்கையும் அன்பும் உந்துதல் சக்திகளாக அமைந்து, மனிதன் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிப்படுத்தும் இலட்சியப் பயணம், இடையறாப் பயணமாக அமைதல் வேண்டும் என இக்பால் ஆசிக்கின்றார்:

''நான் பயணத்தால் எந்த அளவு ஆகர்ஷிக்கப் பட்டுள்ளேன் எனின் பயணத்தில் எல்லை என்பது

எனது பயணத்திற்கே தடையாக அமைவதை உணர்கிறேன்.''
(அஸ்ராரே குதி)

''வான் வெளியின் பால்வட்டப் பாதையின் ஆற்றில் நீந்தி, நீல வான்வெளியைக் கடப்பாயாக.

உனது பயணத்தில் எல்லை சந்திரனாக இருப்பினும் சரியே!

பயணத்தின் முடிவு இதயத்தின் சாவு மணியாகும்.''

மனிதனின் இலட்சியக் களத்தின் தொடு வானம் முடிவற்று விரிந்து கொண்டே செல்ல வேண்டும் என்பதையும், அவன் ஓர் இலட்சியத்தைத் தாண்டி, இன்னொரு இலட்சியத்தை அடைய ஈடுபடல் வேண்டுமெனவும், அப்படியில்லாத பட்சத்தில் அவனது வாழ்வு செயலிலழந்ததாக ஆகிவிடும் என்பதையும் இக்பால் மேற்குறிப்பிட்ட கவிதையடிகள் மூலம் விளக்குகின்றார்.

மனிதனின் குதியை வெளிப்படுத்துவதற்கும், அதனைப் போஷித்து வளர்ப்பதற்கும் தடையாக அமையும் அம்சங்களையும் இக்பால் குறிப்பிடுகின்றார். பிறரிடம் இரப்பதையும் யாசிப்பதையும் மனிதனின் உள்ளத்தின் உள்ளார்ந்த சக்தியின் வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கும் ஓர் அம்சமாக இக்பால் கருதுகின்றார். “ஒருவனின் சுய உழைபினாலன்றி பெறப்படும் அனைத்தும் “ஸுஆல்” என்னும் “இரத்தல்” என்ற பிரிவில் அடங்குவதாக அவர் கருதுகின்றார். பிறரிடம் இரப்பதை விட ஒன்றும் இல்லாமல் இருக்கும் மனிதனை அவர் போற்றுகின்றார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சூரியனின் வெம்மையின் கொடுமையால் தாகித்த நிலையிலும் ஹிள்ரிடம் —ஹிள்ர் (அலை) — ஒரு கிண்ணம் நீரையேனும் இரந்து நிற்காத மனிதனே மகிழ்ச்சியுடையவன்.

அவனது புருவம் இரப்பதன் வெட்கத்தால் நனைந்ததாக இல்லை.

அவன் இன்னும் மனிதனாகவே உள்ளான்.

அவன் ஒரு களிமண் பிண்டமன்று.''

பிறரிடம் இரந்து நிற்கும் இழிவான பண்பை வன்மையாகக் கண்டிக்கும் இக்பால், மனிதனை அவனது வாழ்க்கையை அவனது உழைப்பினாலேயே அமைத்துக் கொள்ளும்படி பணிக்கின்றார். கண்ணாடி போன்று பிறரின் நிழலை பிரதிபலிப்பனவாக அவன் வாழுதல் கூடாது. சந்தர்ப்பம், சூழ்நிலைக்கு அடிமையாகாது, பிரபஞ்சத்தை அவனது விருப்பத்திற்கு வளைந்து கொடுக்கச் செய்தல் வேண்டும் என மனித ஆத்மாவின் மகத்தவத்தைப் பாடுகின்றார்:

''விழித்தெழுந்து ஒரு புத்துலகைப் படைப்பாயாக.

உன்னை இப்றாஹீமின் நெருப்பால் போர்த்திக் கொள்.

இவ்வுலகோடு இணைந்து செல்லுதல் என்பது,

போர்க்களத்தில் போராயுதத்தை தூக்கி எறிதல் போன்றாகும்.

தனக்கே எஜமானனாக உள்ள சான்றோன்,

உலகம் அவனது சித்தத்திற்கு அடிபணியாவிடில் வானுலகோடு போர் தொடுப்பான்.

பிரபஞ்சத்தின் அத்திவாரத்தையே அவன் தோண்டி அதன் அணுக்களை ஒரு புதிய வார்ப்பில் உருவாக்குவான்.

காலத்தின் ஓட்டத்தை அவன் திசை திருப்புவான்.

வான்வெளியை உடைத்தெறிந்து, அவனது சக்தியால், அவனது சித்தத்திற்கு அடிபணியும் ஒரு புத்துலகைப் படைப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் தனது மகத்தான ஆளுமையை உணர்ந்த நிலையில் உலகில் வாழ முடியாவிடில் அவன் மரணித்து,

மண்ணோடு மண்ணாக மறைவதே அவனுக்கு உண்மையான வாழ்வாகும்.''

இவ்வாறு அவனது "தனித்துவத்தைப்" பேணிப் பாதுகாத்து, தனது மானிடத்தின் உள்ளார்ந்த ஆற்றலை பயன்படுத்தி, பிரபஞ்சத்தையே தனது விருப்பத்திற்கு இணைத்துச் செல்லும் வில்லாக வளைத்தல் வேண்டும் எனப் பிரகடனப்படுத்துகின்ற இக்பால், பிறரிடம் தன்னை இழக்காது, தன்னளவில் தனித்து, தனது ஆளுமைச் சிறப்பைப் பாதுகாத்து வாழ்பவன் சிறியவனாயினும், அவன் பெரியவனே என்கின்றார்:

''வெள்ளத்திற்கு எத்தகைய கடமைப்பாடும் இன்றி எங்களது ஓடையில் ஒரு சிறு அலை தோன்றினாலும், அந்த சிற்றலை, ஒக்ஸஸ் நதியைவிடச் சிறந்தது.''

(அஸ்ரார்)

''கடலில் கலந்து தனது தனித்துவத்தை இழக்காது பூமியின் ஆழத்தில் மண்ணில் மறைகின்ற சிற்றாறு எவ்வளவு மகிழ்ச்சியுடையது.''

(அஸ்ரார்)

அடிமை மனப்பான்மை மனிதனில் ஆளுமை வளர்ச்சியில் ஏற்படுத்தும் பாதிப்பையும், அந்த இழிவான உணர்வை நிர்மூலம் செய்வதால் மனிதன் அடையும் சிறப்பையும் இக்பால் விளக்குகின்றார்:

''அடிமைப்படுத்தப்பட்ட நிலையில் வாழ்வு சிற்றாறாக மாறுகின்றது.

ஆனால் சுதந்திர நிலையில் அது எல்லையற்ற சமுத்திரமாக வியாபித்துப் பரவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது கோடாரியினாலேயே உனது பாதையை
வெட்டிக்கொள்..

அடுத்தவர்களின் பாதையைப் பயன்படுத்துவது இழிவாகும்.''

(பயாம் மஷ்ரிக்)

''முத்துப்போன்று ஒளி பெருக்கும் ஓர் உண்மையினை நான்
வெளிப்படுத்துகின்றேன்.

அப்பொது நீ அடிமைக்கும் சுதந்திர புருஷனுக்கும்
இடையேயுள்ள வேற்றுமையை உணர்வாய்.

அடிமை...ஒன்றையே மீட்டி, மீட்டிச் செய்வதில் ஈடுபடுவான்.

அவன் செயலில் புதுமை இல்லை.

ஆனால் சுதந்திர புருஷனோ எப்போதும் புதுமை படைக்க
முயல்வான்.

அவனது வீணையின் தந்திகள் எப்போதும் புதிய
நாதங்களையே எழுப்பிக் கொண்டிருக்கும்.

அடிமையின் உதடுகள் எப்போதும் ஒரே வார்த்தையையே
முணுமுணுக்கும். அதுவே விதி என்னும் வார்த்தை.

ஆனால் சுதந்திர புருஷனிலே, அவனது மனோ வலிமை, விதியின்
ஆலோசகனாக மாறும்.''

(அஸ்ராரே குதி)

உழைப்பு, போராட்டத்தின் மூலமே மனித ஆளுமை, அதன் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிப்படுத்துகின்றது. இயக்கம், அசைவு, போராட்டமற்ற வாழ்வு உண்மையான வாழ்வன்று என்பது அவரது கருத்தாகும். 'முதலைகள் இல்லாத நதியில் எனது படகை ஓட்டிச் செல்ல நான் விரும்பவில்லை' என்கிறார் அவர். ஒரு மலரை நோக்கி இக்பால் பின்வருமாறு கூறுகின்றார்:

''உயிர் வாழ்க்கையில் புகழும் கீர்த்தியும் பெற நீ விரும்பினால்
முட்களுக்கிடையில் வாழும் பழக்கத்தை உன்னில்
ஏற்படுத்திக் கொள்வாயாக!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலைகள் நிறைந்த, அபாயகரமான, பயங்கரமான நதியில் செல்லும் படகு- முட்களுக்கிடையில் வாழும் நறுமலர் - இவை மூலம் இக்பால் மனிதன் போராட்ட வாழ்வில் ஈடுபடுவதிலேயே அவனது சிறப்பும் மேன்மையும் உள்ளது என்ற தத்துவத்தை விளக்குகின்றார்.

இப்போராட்ட வாழ்வே, மனிதனை அமைதியாக, ஒடுங்கியிருக்காது அசைந்து, இயங்கச் செய்கின்றது. அந்த அசைவும் இயக்கமுமே அவனது ஆளுமையை வளரச் செய்கின்றன.

இக்பால் கூறுகின்றார்:

> ''நான் அசைந்து இயங்கும்போது தான் நானாக உள்ளேன்.
>
> நான்அசையாவிட்டால், நான் எதுவும் இல்லாத வெறும் சூன்யமே.''

இக்பால் மனிதனுக்கு பின்வருமாறு ஆலோசனை பகர்கின்றார்:

> ''கருங் கற்களாலான, உறுதியான, அசைக்க முடியாத ஒரு கோட்டையைப் போன்று உனது கையளவு மண்ணினால் ஒரு உடலை அமைத்துக்கொள்.
>
> மலைகளிடையே இரைந்து, ஓசை உழுப்பிச் செல்லும் சிற்றாறு போன்று அமைதியற்ற, தேடுதல் வேட்கையும் துடிப்பும் மிக்க உனது உள்ளத்தை அதில் வை।''
>
> (அஸ்ராரே குதி)

'குதி' என்னும் ஆளுமையின் வளர்ச்சி பற்றி விளக்கும் இக்பால், ஒருவனின் இந்த ஆளுமை பூரணத்துவம் அடைவதற்கு அறிவும், பண்பாட்டுப் பயிற்சியும் அவசியம் எனக் குறிப்பிடுகின்றார். இந்தப் பூரணத்துவத்தைப் பெறுவதற்கான வளர்ச்சிப் படிவத்தில் ஒரு கட்டத்தினை பின்வருமாறு கூறுகின்றார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனக் கட்டுப்பாடும் இறைவனின் கட்டளைக்கு முற்றிலும் அடிபணிந்து வழிப்படுவதுமாகும். ஆரம்பத்தில் உள்ளமானது அடிபணிந்து வாழும் பண்பாட்டுப் பயிற்சியைப் பெறுதல் வேண்டும். அது ஒட்டகத்தைப் போன்று, சிரமத்தையும் கஷ்டத்தையும் மேற்கொண்டு பொறுமையோடு, கடமை என்னும் சுமையை முதுகில் சுமத்தல் வேண்டும் என்கிறார் அவர் ஒருவன் சட்டத்தின் அடிமையாக மாறுதல் வேண்டும். அதன் மூலமே உள்ளம் வலிமையும், சக்தியும் பெறுகின்றது. இதை எவ்வளவு உயிரோட்டத்துடன் இக்பால் விளக்குகின்றார் என்பதைப் பின்வரும் வரிகளில் அவதானிக்கலாம்:

''காற்றானது ரோஜாவின் கவர்ச்சியினால்
கட்டுப்படுத்தப்படும்போது மணமாக மாறுகின்றது.

சட்டத்தின் முன் தலைகுனிந்த நட்சத்திரமானது அதன்
எல்லையை நோக்கிப் பயணம் செய்கின்றது.

வளர்ச்சியின் நியதிக்கு அடிபணிந்த நிலையிலேயே பசும்புல்
தோற்றமெடுக்கின்றது.

அது அதனை மீறும்போது, கால்களினால் மிதிக்கப்படுகின்றது.

இணைதல் என்ற நியதி சட்டத்தின் மூலமே ஒரு துளி நீரானது
சமுத்திரமாக மாறுகின்றது.

மண்துணிக்கைகள் 'ஸஹாரா'வாக மாறுகின்றன.

சட்டம் ஒவ்வொரு பொருளையும் அதனளவில் சக்தியும்
வல்லமையும் மிக்கதாக ஆக்குகின்றதெனில்,

நீ ஏன் இந்த சக்தியின், ஆற்றலின் மூலத்தைப்
புறக்கணிக்கின்றாய்?

பாரம்பரியப் பழக்கவழக்கத்திலிருந்து விடுதலை
பெற்றவனே!

மீண்டும் உனது பாதங்களை அதே வெள்ளிச் சங்கிலிகளினால்
பிணைத்துக் கொள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தின் கடுமை பற்றி முறையிடாதே।

முஹம்மதின் பிரமாணங்கள், சட்டங்களை மீறிவிடாதே।''

கடந்தகால சமூகங்களுக்கு வலுவூட்டிய சிறந்த பண்டைய பாரம்பரிய பழக்க வழக்கங்களையும், 'இஸ்லாமிய ஷரீஆ'வையும், 'நவீனத்துவம்' என்ற பெயரால் புறக்கணிப்பதை இக்பால் மறைமுகமாக இக்கவிதையில் கண்டிக்கிறார்.

'குதி' என்னும் உள்ளத்தின் வளர்ச்சிப் படிவத்தில் இரண்டாவது கட்டமாக அமைவது மனக்கட்டுப்பாடாகும். இதனை இக்பால் பின்வரும் அடிகளில் விளக்குகின்றார்:

''தன்னை அடக்கி ஆளாத ஒருவன் பிறரினால்
அடக்கியாளப்படுவான்.''

மனித ஆளுமை வளர்ச்சியை நசுக்கி, நலிவடையச் செய்யும் பல்வேறு வகையான பயங்கள், அச்சங்கள் பற்றி இக்பால் விளக்குகின்றார். இவ்வுலகைப் பற்றிய பயம், மரணத்தைப் பற்றிய பயம், உலக வாழ்வின் துன்பங்கள் துயரங்கள் பற்றிய பயம் ஆகிய பயங்களும், செல்வம், அதிகாரம் ஆகியவற்றில் தீவிர பற்றும் ஒருவனின் ஆளுமை வளர்ச்சியின் எதிரிகள் எனக் குறிப்பிடும் அவர், இவற்றைப் பொறுத்தளவில் மனக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பதன் அவசியத்தை வலியுறுத்துகின்றார்:

''நீரும் மண்ணும் கலந்த மனிதன் சுகபோகத்தை
விரும்புகின்றான்.

பாவம் புரிதல், தீமை செய்தல் அவனுக்கு இசைவாக
உள்ளது.

உனது கையில், 'இறைவனைத் தவிர வேறு நாயன் இல்லை'
என்ற கைத்தடி இருக்கும் வரை, எல்லாப் பயங்களையும் நீ
உடைத்தெறிவாய்.

அப்போது அவனது தலை கர்வத்தின் முன் குனிவதில்லை.

அச்சம் அவனது உள்ளத்தில் நுழைவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது உள்ளமானது, இறைவனைத் தவிர வேறு எதற்கும் அஞ்சுவதில்லை.''

சட்டத்திற்கு அடிபணிதல், மனக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தல் ஆகிய இந்த இரண்டு படித்தரங்களையும் கடந்த மனிதன், உலகில் இறைவனின் பிரதிநிதியாக பணிபுரியத் தகுதி படைத்த 'அதி மனிதனாக'- 'மகா புருஷனாக' (Super man) மாறுகின்றான். இந்த 'அதி மனிதனை' இக்பால் அறிமுகப்படுத்துகின்றார்:

''உலகில் இறைவனின் பிரதிநிதியாக அமைவது எவ்வளவு இனிமையானது!

அவன் உலகில் இறை கட்டளைகளைச் செயல்படுத்துகின்றான்.

இவன் இந்த பழைய கம்பளத்தைச் சுருட்டி வைத்துவிட்டு ஒரு புத்துலகைப் படைப்பான்.

இவ்வுலகைப் போன்று நூற்றுக் கணக்கான உலகங்கள்,

மலரும் ரோஜாக்கள் போன்று அவனது கற்பனையில் இதழ் விரிக்கும்.

அவன் இறைவனுக்காகவே தூங்கி அவனுக்காகவே விழித்தெழுகின்றான்.

அவன் வாழ்க்கைக்குப் புதுவிளக்கம் அளிக்கின்றான்.

இந்தக் கனவிற்குப் புது அர்த்தம் கற்பிக்கின்றான்.

அவன் வாழ்க்கையின் வீணையிலிருந்து இதுவரை கேட்டிராத நாதங்களை எழுப்புகின்றான்.''

(அஸ்ராரே குதி)

இவ்வாறு தங்களுள் உள்ளார்ந்து மறைந்துள்ள ஆற்றல்கள், திறமைகளை வளர்த்துப் போஷித்து, தங்களது தத்துவத்தைப் புலப்படுத்தும் அதி மனிதர்களாக ஒவ்வொரு மனிதனும் மாறும்போது, அத்தகைய தனிமனிதர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பாலும், கூட்டுச் சேர்க்கையாளும் ஓர் உன்னத சமூகம் உருவாகிறது. தனது 'அஸ்ராரே குதி'யில் தனி மனிதனின் ஆளுமை பற்றியும், ஒவ்வொரு தனிமனிதனும் அவனது உள்ளார்ந்த மகத்தான ஆற்றல்களைப் போஷித்து, வளர்த்து, வெளிப்படுத்துவதன் அவசியம் பற்றியும் விளக்கிய இக்பால், மனிதன் தனது தனித்தவத்தைப் பாதுகாக்கும் அதே நேரத்தில் சமூகம் என்ற அமைப்பில் தனது தனித்துவத்தை இணைத்து, தன்னலமற்ற நிலையில் செயல்படுவதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றார்.

இக்பாலின் இத்தத்துவம் அவரது 'ரமூஸே பிகுதி' என்னும் கவிதைத் தொகுதியில் விளக்கப்படுகின்றது. இந்த வகையில் அவரது 'அஸ்ராரே குதி' இக்பாலின் தனிமனிதனின் ஆளுமை பற்றிய கோட்பாட்டையும், 'ருமூஸே பிகுதி' சமூகம் பற்றிய அவரது தத்துவத்தையும் விளக்குகின்றது. தனிமனிதனின் ஆளுமை வளர்ச்சிக்கு சமூகம் என்ற அமைப்பு அவசியம் என இக்பால் கருதுகின்றார்:

''தனிமனிதன் சமூகத்தின் மூலமாகவே அவனது
இயக்கத்தைப் பெறுகின்றான்.

ஓர் அலையானது சமுத்திரத்திலேயே அலையாக உள்ளது.

ஒரு கவிதையிலிருந்து ஒரு சொல்லைப்
பிரித்தெடுக்கும்போது கவிதையின் கருத்து
சிதைக்கப்படுகின்றது.

கிளையிலிருந்து உதிர்ந்த பசுமையான இலையானது

வசந்தத்தின் பூரிப்பை அனுபவிக்கும் பேற்றை இழந்து
விடுகின்றது.

சமூகம் என்ற நீர்ச்சுனையிலிருந்து நீர் அருந்தாதவனின் நா
வரண்டு, அவனது உணர்ச்சி நாளங்கள் செயலிழந்து
விடுகின்றன.''

(ருமூஸே பிகுதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் என்ற நிறுவனத்தின் நிலைபேற்றிற்கு சிந்தனை ஒருமைப்பாடு அவசியம் என இக்பால் கருதுகின்றார்:

"சமூகம் ஒரே சிந்தனையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அதன் மனச்சாட்சி ஒரே நோக்குடையதாக இருத்தல் வேண்டும்.

அதன் உள்ளம் ஒரே உணர்வைப் பெற்றிருத்தல் வேண்டும்.

நன்மையும் தீமையும் நிர்ணயிப்பதற்கு அதற்கு ஒரே அளவுகோல் இருத்தல் வேண்டும்.

உள்ளங்களின் ஒருமைப்பாட்டிலேயே சமூகம் கட்டியெழுப்பப்படுகின்றது.

இந்த 'சினாய்' ஒரு வெளிச்சத்தால் தான் ஒளி பெறுகின்றது."

மனித சமூகத்தை இனங்கள், நாடுகளாகப் பாகுபாடு செய்து, பிளவுபடுத்துவதையும், குறுகிய இன உணர்வையும் கண்டிக்கும் இக்பால், குறுகிய தேசிய உணர்வையும் சாடுகின்றார்:

'உடலை வெறும் பிணமாக ஆக்கிவிட்டு, அதனை விட்டும் அதன் ஆத்மா பிரிந்து விட்டது.

மனித இனம், தேசங்களுக்கு இடமளித்து விட்டது.

இனத்தைப் பற்றிய பெருமை ஒரு மாயையாகும்.

அழிகின்ற உடலையே 'இனம்' தழுவியுள்ளது.

ஒரு சமூகத்தின் மூலத்தை ஏன் பிறந்த நாட்டில் தேடுதல் வேண்டும்?

காற்று, நீர், மண் போன்ற பஞ்சபூதங்களை ஏன் வணங்குதல் வேண்டும்?"

சமூகத்தின் கட்டுக்கோப்பைப் பேணி மனித இனத்தின் ஒருமைப்பாட்டைப் பேணிப் பாதுகாத்த இஸ்லாத்தின் திருத்தூதரை இக்பால் போற்றுகின்றார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''புலன்களுக்கு அப்பாற்பட்ட ஒன்றுடன் தன்னைப் பிணைத்துக்கொண்ட அவர்கள் புலன்களுக்குப் புலப்படுவதை உடைத்தெறிந்தார்கள்.

பின்னையதன் சிலையை அவர்களது 'அற்புதம்' நொறிக்கிவிட்டது.

அவர்களால் போதிக்கப்பட்ட மதம், இனம், நாடு என்ற பேதங்கள் நிர்மூலமாக்கி விட்டது.

குறைஷிகளினதும் அரபிகளினதும் மேன்மையை அவர்கள் கண்டித்தார்கள்.

ஆண்டானும் அடிமையும் அவர்களுக்குச் சமமே;

தனதடிமையுடன் சமமாக அமர்ந்து அவர்கள் உணவருந்தினார்கள்.''

சமூகம் என்ற நிறுவனத்தின் நிலைபேற்றிற்கும், உறுதிப்பாட்டிற்கும் 'சட்டம்' என்ற கட்டுக்கோப்பு மிக அவசியம் எனக்கருதும் இக்பால் அவரது இக்கருத்தை பின்வரும் வகையில் மிக அழகாகப் புலப்படுத்துகின்றார்:

''ஒரு சமூகம் சட்டத்தைத் துறக்கும்போது புழுதியைப் போன்று அது சிதறி மறைந்து வீடுகின்றது.

இதழ்கள் ஒன்றோடொன்று இணைந்திருக்கும் போதே மலராக மாறுகின்றது.

மலர்கள் ஒன்றாக இணையும்போது மலர் செண்டாக மாறுகின்றது.

குரலைக் கட்டுப்படுத்தும்போது அழகிய தொனி தோற்றம் பெறுகின்றது.

அந்தக் கட்டுப்பாட்டை இழந்ததும், அது வெறும் ஓசையாக மாறிவிடுகின்றது.

மூச்சு என்பது எங்கள் குரல்வளைகளிலிருந்து புறப்படும் வெறும் ஒலி அலையே! ஆனால் அம்மூச்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாங்குழலுக்கு இசைந்ததாக புலப்படுத்தும்போது அது இனிய நாதமாக மாறுகின்றது.''

சட்டம் என்ற அமைப்பின் மூலம் ஒரு சமூகம் ஒழுங்கையும், அழகையும், பொலிவையும் பெறும் தன்மையினை இக்பால் மேற்குறிப்பிட்ட கவிதையடிகளில மிக அழகாகக் சித்தரித்துள்ளார்.

ஒரு சமூகம் அதன் பாரம்பரியங்களைப் பேணி வாழுதல் அவசியம் என்பதனையும் 'புதுமை', 'நவீனத்துவம்' என்ற மோகத்தில் அதன் பாரம்பரியங்களைப் புறக்கணித்தலாகாது எனவும் இக்பால் கருதுகின்றார்:

'' வாழ்க்கையின் உறுதியும் ஸ்திரமும் தளர்ச்சியடையும் போது
சமூகம் பாரம்பரியங்களைப் பின்பற்றுவதால்
உறுதியடைகின்றது.

உமது மூதாதையர்களின் வழியைப் பின்பற்றுவீராக! அது
ஒருமைப்பாட்டிற்கு வழியாகும்.

அது பூரண கட்டுக்கோப்பையும், ஒழுங்கையும் வழங்கும்.

இலையுதிர் காலத்தில், இலைகளையும் பழங்களையும்
இழந்திருப்பவனே!

வசந்தத்தை எதிர்பார்த்து மரத்துடன் உனது உறவைத்
துண்டித்து விடாதே!

'நவீனத்துவம்', 'புதுமை' என்பது உண்மையில் வீழ்ச்சியாகும்.

அது சமூகத்தைப் பின்னடையச் செய்கின்றது.

சமூகம் தேக்க நிலையடைந்துள்ள காலப் பிரிவில் கடந்த
கால பாரம்பரியங்களைப் பின்பற்றுவது

குறுகிய அறிவு படைத்தோரின் 'புதுமைகளை' விடச்
சிறந்ததாகும்.''

சமூகத்தில் தொடர்ச்சியான நிலைபேற்றிற்கு வரலாறு பற்றிய உணர்வு அவசியம் என இக்பால் கருதுகின்றார். ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகமானது அதன் கடந்தகால வரலாற்றின் மூலமாகவே சக்தியையும், உணர்வு பூர்வமான வாழ்வையும் பெறுகின்றது. அதன் கடந்தகால வரலாறு மறக்கப்பட்டால் அது ஒன்றுமில்லாத வெறுமையோடு இணைந்துவிடும் என 'ரமூஸே பிகுதி'யில் இக்பால் குறிப்பிடுகின்றார்:

''உனது நிகழ்காலம் கடந்த காலத்தினடியாகவே தோன்றுகின்றது.

உனது எதிர்காலம் நிகழ்காலத்திலிருந்தே உருவாக்கப்படுகின்றது.

நீ நித்திய வாழ்வினை ஆசித்தால் எதிர்காலத்தின் தொடர்பை அறுத்துவிடாதே!

நிகழ்காலத்தைக் கடந்த காலத்திலிருந்து துண்டித்து விடாதே!''

(ருமூஸே பிகுதி)

வரலாறு என்பது மனிதனுடன் நிகழ்வுகளைப் பின்னிப் பிணைந்துள்ள நிகழ்வுகளின் போராட்டம் என்ற தத்துவம் அவரால் பின்வரும் வகையில் சித்திரிக்கப்படுகின்றது:

''காலம் என்பது ஒன்று – வாழ்வும் ஒன்று – பிரபஞ்சமும் ஒன்றே!

பழமை, புதுமை பற்றிய கதை குறுகிய கண்ணோட்டத்தின் விளைவே.

அனைத்தினதும் மெய்ப்பொருள் – ஹகீகத் – ஒன்றே அது

வெறும் களி மண்ணாயினும், பேரொளியாயினும் சரியே.

அணுவைப் பிளந்து பார். அங்கு சூரியனின் இரத்தம் ஓடுவதைக் காண்பாய்.''

சமூகத்தின் நிலைபேற்றிற்கும், ஸ்திரத் தன்மைக்கும், உறுதிக்கும் அதன் பாரம்பரியங்கள் பேணப்படல், வரலாற்றுணர்வு ஆகிய அம்சங்களை வலியுறுத்தும் இக்பால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய சமூகக் கோட்பாட்டை மட்டுமன்றி, கீழைத்தேய சமூகப் பாரம்பரியங்கள், மரபுகள், விழுமியங்கள், மதிப்பீடு களையே சீர்குலைக்க முற்படும் ஒரு சக்தியாக மேற்கத்திய நாகரிகத்தின் ஊடுருவலைக் கருதினார்.

மேற்கத்திய சிந்தனை, வரலாறு, தத்துவம், நாகரிகம் பற்றிய இக்பாலின் அறிவு, வெறும் கோட்பாட்டு ரீதியான அறிவன்று. ஹியும், காண்ட், ஹெகல், நீட்ஸே, பெர்க்ஸன் போன்ற மேற்கத்திய சிந்தனையாளர்கள், தத்துவஞானிகளின் கருத்துக்களை மிக ஆழமாகக் கற்றறிந்தது மட்டுமன்றி, மேற்குலகில் வாழ்ந்த காலப் பிரிவானது, மேற்கத்திய உள்ளம், சிந்தனைப்பாங்கு, சமூக அடிப்படை பற்றிய நிதர்சனமான அறிவையும் அனுபவத்தையும் அவருக்கு வழங்கியது. இக்பால் மேற்கத்திய நாகரிகத்தின் பலவீனங்களையும், அதன் உலோகாயத அடிப்படையையும், இறை நிராகரிப்பையும் அவரது கவிதைகளில் மிக வன்மையாக விமர்சிக்கின்றார்:

''இறை வீசுவாசமற்ற இந்த நாகரிகம் குறித்து
எச்சரிக்கையாக இருங்கள்.

அது சத்தியத்தையும் உண்மையையுமுடைய மனிதர்களுக்கு
எதிராகப் போர் தொடுக்கின்றது.

உலகில் குழப்பத்தை உருவாக்குவதே அதன் பணியாகும்.

புனித 'ஹரமில்' 'லாத்தையும்', 'மனாத்தையும்' அது மீண்டும்
அரியாசனம் ஏற்றுகின்றது.

அதன் சூன்யம் காரணமாக உள்ளத்தின் கண் குருடாகியுள்ளது.

அதன் வரட்சி காரணமாக, ஆத்மா தாகித்துள்ளது.

உள்ளத்தின் உயிர்த் துடிப்பை அது கொன்றொழித்து
விடுகின்றது.

இல்லை அது உள்ளத்தையே நிர்மூலமாக்குகின்றது.''

(ளர்பே கலீம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு எத்தகைய ஆத்மீக அடிப்படையுமற்று, வெறுமனே சடவாதக் கோட்பாடு, உலக வேட்கை, ஆத்மீக பரிமாணமற்ற வாழ்வு ஆகியவற்றின் அடிப்படையில் எழுதப்பட்ட மேற்கத்திய நாகரிகமானது இயற்கை இறப்பை எதிர்கொள்ளாததென்றும், அதன் வாளினாலேயே அது தற்கொலை செய்துகொள்ளுமென்றும் இக்பால் கூறுகின்றார்:

"உனது நாகரிகம், அதன் வாளாலேயே தன்னை அழித்துக் கொள்ளும்.

மெல்லிய கிளையில் கட்டப்பட்ட கூடு பலவீனமானதாகும்."

ஆனால் இவ்வாறு சடவாதம், சுரண்டல், சமூக அநீதியின் அடிப்படையில் எழுப்பப்பட்ட இந்நாகரிகம் மிக வேகமாக அழிவை நோக்கிப் பயணம் செய்துகொண்டிருக்கிறதென்றும் அந்த வெற்றிடத்தை நிரப்ப ஒரு புது உலகம் உருவாகிக் கொண்டிருக்கின்றது எனவும் இக்பால் நம்பிக்கை தெரிவிக்கின்றார்:

"பழைய உலகம் இறந்துகொண்டிருக்கின்றது.

ஒரு புது உலகம் உதயமாகிக்கொண்டிருக்கின்றது."

மேற்குலகில் அறிவே அடிப்படையாக உள்ளதென்றும் அது ஆத்மீகத்தின் அடிப்படையில் அமைந்த அன்பை இழந்துள்ளதென்றும், எனவே அறிவும் அன்பும் இணைந்த ஒரு புத்துலகம் தோன்றுதல் வேண்டுமெனவும் இக்பால் ஆசிக்கின்றார்:

"மேற்கில் அறிவே வாழ்வின் அடிப்படையாக உள்ளது.

கிழக்கிலோ அன்பே வாழ்வின் ஆதாரமாக உள்ளது.

விழித்தெழுங்கள்! அறிவை அன்போடு இணைத்து

ஒரு புது உலகிற்கான அடித்தளத்தைக்

கட்டியெழுப்புங்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தனது ஆழமான அறிவின் அடிப்படையிலும் அனுபவத்தின் சாயலிலும், தான் 'நூல்களின் தாய்' என வர்ணிக்கும் குர்ஆனின் அடித்தளத்தில், தனக்கேயுரிய தனித்துவம் வாய்ந்த ஒரு தத்துவக் கோட்பாட்டை நிறுவிய இக்பால் அவரின் தத்துவத்தின் ஊடகமாக கவிதையைக் கையாண்டார்.

இக்பால் கனவுலகக் கவியல்ல; மனித சமூகத்தின் உறவுகளிலிருந்து தன்னை முற்றிலும் துண்டித்து கற்பனை வானில் சிறகடித்துப் பறந்த கற்பனைக் கவியுமன்று. அவர் ஒரு தத்துவக் கவி; மனித சமூகத்திற்கு ஒரு செய்தியை விடுக்க வந்த மகாகவி; அவர் வெறுமனே பொழுது போக்கிற்காக கவி பாடியவரன்று; அவர் தனது கருத்துக்களை மனித சமுதாயத்திற்குத் தெரியப்படுத்தவே கவி புனைந்தார். மனித சமுதாயத்தைப் பாதிக்கும் பல்வேறு விடயங்கள், பிரச்சினைகள் குறித்து பல தீர்க்கமான ஆழமான சிந்தனையில் உதித்த நிச்சயமான கருத்துக்கள் அவரிடமிருந்தன. ஆனால் தனது கருத்துக்கள் தான் இறுதியானவை; முடிவானவை என்ற உணர்வு அவரில் காணப்படவில்லை. அவரது கருத்துக்கள் பற்றி அவரே பின்வருமாறு குறிப்பிடகின்றார்:

"தத்துவச் சிந்தனையில் இறுதியானது என ஒன்றில்லை. அறிவு வளர்ச்சியடைந்து, புதிய சிந்தனைகள் உருவாக வழிகள் பிறக்கும்போது, தற்பொதைய கருத்துக்களல்லாத சிலவேளை அவற்றைவிடச் சிறந்த கருத்துக்கள் தோன்ற இடமுண்டு. மனித சிந்தனையின் வளர்ச்சியை மிகக் கவனமாக அவதானித்து, அதைப் பொறுத்தளவில் சுதந்திரமான விமர்சன ரீதியான ஒரு அணுகுதலைக் கடைப்பிடிப்பதே எமது கடமையாகும்."

இக்பாலின் இந்த அடிகள் தான் விட்டுச் செல்லும் சிந்தனைப் பாரம்பரியத்தைத் தன்னைத் தொடர்ந்து வரும் சமூகம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதனையும், அறிவின் வட்டம், ஆய்வின் களம் விரிவடையும் போதெல்லாம் அதற்கு ஈடுகொடுத்து அவர்களும் முன்னேறிச் செல்லல் வேண்டுமென்பதையும் அவர் ஆசித்தார் என்பதனையே குறிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவேதான் எதிர்காலச் சமுதாயத்தை நிர்மாணிக்கப்போகும் இளைஞர்களுக்காக இறைவனிடம் அவர் பின்வருமாறு பிரார்த்திக்கின்றார்:

''உள்ளத்தின் சோகப் பெருமூச்சின் வேதனையை
இளைஞர்களுக்கு அளிப்பாயாக।

எனது அன்பையும், ஆழமான, தீட்சண்யப் பார்வையையும்
அவர்களுக்குக் கொடுப்பாயாக।

எனது அதிகாலைப் புலம்பலை இளைஞர்களுக்குக்
கொடுப்பாயாக।

இளம் ராஜாளிக் குஞ்சுகளுக்கு மீண்டும் இறக்கையைக்
கொடு।

இறைவா। எனக்கு ஒரே ஒரு ஆவல், எல்லோருக்கும் எனது
தீட்சண்யப் பார்வையைக் கொடு।''

அல்லாமா இக்பால் 1938 ஏப்ரல் 21ம் திகதி அவ்வுலகை விட்டுப் பிரிந்தார்கள். அவரது உயிர் பிரிவதற்கு சில நேரங்களுக்கு முன்னர் அவரது உதடுகள் பின்வருமாறு கவிதையை முணுமுணுத்தன:

''வீணையிலிருந்து பிரிந்த நாதம் மீண்டும் தோன்றினாலும்
தோன்றாவிட்டாலும்,

ஹிஜாஸிலிருந்து இளம் தென்றல் மீண்டும் வீசினாலும்
வீசாவிட்டாலும்,

இன்னொரு தூரநோக்காளன் தோன்றினாலும்
தோன்றாவிட்டாலும் இந்த 'பகீரின்' வாழ்நாள் முடிவடைந்து
விட்டது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இக்பாலின் கலை இலக்கியக் கோட்பாடு

தனி மனிதனதும் சமூகத்தினதும் அழகுணர்வின் அனுபவத்தின் பிரதிபலிப்பே கலை, இலக்கிய முயற்சிகளாகும். அழகைத் தரிசிப்பதும், அந்த அழகின் அனுபவத்தில் தோற்றும் உணர்வுகளைக் கலைவடிவங்கள் மூலமாகப் புலப்படுத்த விழைவதும் மனிதனில் இயற்கையாகவே அமைந்துள்ள உடன்பிறந்த பண்பாகும்.

எனவேதான் மனித இனத்தின் தோற்றத்தோடும் வளர்ச்சியோடும், அவனது கலையுணர்வும் தோற்றமெடுத்து வளர்ச்சியடைவதை மனிதப் பண்பாட்டின் வளர்ச்சி எமக்கு உணர்த்துகின்றது. நாகரிக முதிர்ச்சியற்ற புராதன இனங்களில் கூட கலையுணர்வு தொழிற்பட்ட தன்மையினை அவர்கள் வாழ்வு நடாத்திய குகைகளில் காணப்படும் சுவர்ச் சித்திரங்கள் மூலம் நாம் அறிய முடிகின்றது.

கலை என்றால் என்ன? அதன் பயன்பாடு என்ன? மனித பண்பாட்டு வளர்ச்சிக்கு அதன் பங்களிப்பு என்ன? என்பன போன்ற அடிப்படை வினாக்களுக்கு விடைகாண பலர் முற்பட்டனர். அதன் விளைவாக கலை பற்றிய பல்வேறு கோட்பாடுகள், தத்துவங்கள், கொள்கைகள் தோன்றி வளர்ச்சியடைந்துள்ளன. இக் கோட்பாடுகளுக்குள் மிக முக்கியமானதொரு கலைக் கொள்கையாக வரலாற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றிய ஒரு கோட்பாடு 'கலை கலைக்காகவே' என்னும் கோட்பாடாகும்.

கலை என்பது ஒரு குறிப்பிட்ட நோக்குடன், குறிப்பாக மனித சமூகத்திற்குப் பயன்படும் இலட்சியத்துடன் செயல்படல் வேண்டும் என்ற கலை பற்றிய பயன்பாட்டுக் கொள்கை வரலாற்றில் ஒரு காலப்பிரிவில் மிகப் பலமாகச் செல்வாக்குச் செலுத்தியது. மதப் பிரசாரகர்களும் ஏனைய கொள்கைவாதிகளும் தங்களது பிரச்சாரப் பணிக்காகக் கலையையும் கவிதையையும் பயன்படுத்தினர். கலை அவர்களது கொள்கைப் பிரசாரத்திற்கு ஓர் ஊடகமாகப் பயன்படுத்தப்பட்டது. இதன் காரணமாக கலையின் ஒரே பணி, ஒழுக்கப் பிரசாரத்திற்கும் மதப் பிரசாரத்திற்கும் ஓர் ஊடகமாகத் தொழிற்படுவதே என்ற தவறான முடிவிற்கு சிலர் வந்தனர்.

கலை பற்றிய இத்தவறான கருத்து கலையையும் கலைஞனின் ஆளுமையையும் மிக இழிவுபடுத்தும் ஒரு கருத்தாகக் கருதப்பட்டது. இந்த நிலையில் கலையும் கலைஞனையும் வெறுமனே ஒரு பிரசாரக் கருவியாகச் சித்தரிக்கும் கலை பற்றிய இந்தப் பண்பாட்டுக் கொள்கைக்கு எதிராகத் தோன்றிய சிந்தனைப் போக்கே 'கலை பயன்பாட்டுக் காகவன்று, கலை, கலைக்காகவே' என்ற கோட்பாடாகும்.

ஆனால் நாம் நிதானமாக நோக்கி இப்பிரச்சினையை அணுகும்போது இவ்விரு கோட்பாடுகளும் கலை பற்றிய முழுமையான, சரியான கருத்தைப் பிரதிபலிக்கவில்லை என்பதைத் தெளிவாக உணரலாம். இவ்விரு கோட்பாடுகளும் கலையோடு தொடர்புடைய இரண்டு அடிப்படை அம்சங்களில், ஒன்றைவிட மற்றொன்றிற்கு அழுத்தம் கொடுப்பதையும் நாம் இனங்கண்டு கொள்ளலாம்.

ஒரு கலைஞன் அல்லது கவிஞன், ஒரு குறிப்பிட்ட கருத்தை அல்லது தத்துவத்தை வெளிப்படுத்துவதற்காக மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையை அல்லது கவிதையை ஓர் ஊடகமாகப் பயன்படுத்துவதில்லை. ஒருவன் பல்வேறு சந்தர்ப்பங்களில் வாழ்க்கையின் வித்தியாசமான அனுபவங்களை எதிர்நோக்கும் போது, அந்த அனுபவங்களைப் பொறுத்தவரையில் அவனது அன்றாட எதிர்த் தாக்கத்தைப் புலப்படுத்தும் தனிப்பட்ட அனுபவ வெளிப்பாடாகவே கலைச் சிருஷ்டிகள் அமைகின்றன.

இந்த வகையில் நோக்கும்போது கலை கலைக்காகவே என்ற கோட்பாடு ஓரளவு உடன்பாடான தேயாகும். ஆனால் அது கலை அனுபவம் பற்றிய முழு உண்மையன்று. ஏனெனில் ஒரு சமூகத்தின் ஓர் அங்கமாக உயிர் வாழுபவன் என்ற வகையில் மனித வாழ்வோடு தொடர்புடைய, சமூக வாழ்வின் அடியாக எழுகின்ற பல்வேறு விடயங்கள் பற்றிய சில உறுதியான கருத்துக்கள், நிலைப்பாடுகள் நிச்சயம் ஒரு கலைஞனில் இருத்தல் வேண்டும். அதே போன்று அவனது உணர்வுபூர்வமான, அல்லது உணர்வு பூர்வமற்ற வாழ்வானது அவனது இயற்கைத் தன்மை, தனிப்பட்ட குணவியல்புகள், கல்வி, சமூகச் சூழல் ஆகியவற்றிற்கு ஏற்ப சில தனிப்பட்ட பண்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும். இந்தப் பண்புகளும் அவற்றினடியாக அவனில் காணப்படும் கருத்துக்கள், நிலைபாடுகள் என்பனவும் நிச்சயம் அவனது கலையுணர்வின் வெளிப்பாட்டில் அவற்றின் தாக்கத்தை ஏற்படுத்துவதில் எவ்வகையிலும் தவிர்க்க முடியாததாகும்.

எனவே சமூக நிகழ்வுகளினால் பாதிக்கப்பட்டு சமூகத்தின் ஓர் அங்கமாக வாழ்ந்து கலைச் சிருஷ்டியில் ஈடுபடும் கலைஞன், அவனது கலையாக்கங்கள் மூலமாக அவனது அழகியல் அனுபவங்களை மட்டுமன்றி, அவனது தனிப்பட்ட கருத்துக்களையும் புலப்படுத்துகிறான். இவ்வகையில் நோக்கும்போது அவனின் கலைச் சிருஷ்டியின் மதிப்பும் தரமும் அவனது அனுபவத்தின் வெளிப்பாட்டில் மட்டும் தங்கியிருக்க வில்லை. வாழ்க்கையின் பிரச்சினைகளை அவனுக்கே உரிய முறையில் அணுகி புலப்படுத்தும் முறையில் தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் நோக்கும்போது ஒரு கலையின் பெறுமதி அது வாழ்க்கையிலிருந்து விடுபட்டு இயங்குவதில் தங்கியிருக்கவில்லை. வாழ்க்கைக்கு அர்ப்பணமாவதிலேயே தங்கியுள்ளது. வாழ்வில் உயிரற்று, உணர்வற்று, காத்திரமற்றுக் காணப்படும் பொருட்களுக்கு, கலையானது உயிரையும் உணர்வையும் காத்திரத்தையும் பெறுமதியையும் வழங்குகின்றது. எனவே கலையின் பணி வெறுமனே அழகுணர்வின் பிரதிபலிப்பாக மட்டுமன்றி, வாழ்க்கைக்குப் பயனுடையதாக அமைவதுமாகும்.

அல்லாமா இக்பாலின் கலைக் கோட்பாட்டின் சிறப்பம்சமாக அமைவது அவரது கலை பற்றிய கொள்கையில் கலையின் அழகியற் கோட்பாடாகும். பயன்பாட்டுக் கோட்பாடும் மிகச் சிறப்பாக இணைந்து செயல்படுவதேயாகும்.

இக்பாலின் கலைக் கொள்கையில் ஒரு முக்கிய பண்பை நாம் இங்கு குறிப்பிட்டு ஆகுதல் வேண்டும். அவர் எல்லா வகையான கலைஞர்களின் படைப்பாற்றலையும் மதிக்கிறார். ஆனால் அவரது நோக்கில் சில கலைகள், ஏனைய கலைகளை விடச் சிறப்பிடம் பெறுகின்றன. கவிதை, இலக்கியம் என்பன அவரது பார்வையில் இசை, சிற்பம், கட்டடக் கலை என்பனவற்றை விட முன்னுரிமை பெறுகின்றன. கவிதையும் இலக்கியமும் மனித சிந்தனை, அறிவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தோற்றமெடுப்பதே இதற்கு முக்கிய காரணமாகும். இதனை அவரது 'அஸ்ராரே குதி'யில் காணப்படும் பின்வரும் கவிதையடி சிறப்பாகப் புலப்படுத்துகிறது:

> ''நவீன யுகத்தின் ஒளியானது புதுமையான சிந்தனையி லிருந்தே தோற்றமெடுக்கின்றது.
>
> கற்களும் செங்கற்களும் உலகை உருவாக்கவில்லை
> மனிதனின் உள்ளார்ந்த ஆளுமையில் மூழ்கியோரின்
> துணிவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நீர் ஊற்றிலிருந்து எல்லையற்ற சமுத்திரங்களைத் தோற்றுவித்துள்ளது.

காலத்தின் சோதனைகளை அவனே வெற்றி கொள்கிறான்.

அவனது ஒவ்வொரு மூச்சும் நித்திய வாழ்க்கையை உருவாக்குகின்றது.''

இக்கவிதையில் இக்பால், உலகம் வெறுமனே கல்லாலும் செங்கற்களாலும் ஆக்கப்பட்டதன்று. மனிதனின் சிந்தனையும் உணர்வுகளுமே அதன் இயக்கத்தின் அடிப்படை என்று உணர்த்துகின்றார். எனவே கற்களால் அழகும் பொலிவும் ததும்பும் கலைச் சிறப்புமிக்க கட்டடங்களை உருவாக்கு வோர்களைவிட, கருத்துக்களால் சிந்தனைக் கோட்பாடுகளைக் கட்டியெழுப்பி, அவற்றிற்கு இலக்கிய ஆக்கங்கள் மூலம் உயிரும் உணர்வும் வழங்குபவர்களே மனித சமூகத்திற்கு மேலான பங்களிப்பைச் செய்கிறார்கள் என்பது அவரது கருத்தாகும்.

## கட்டடக் கலை

இசை, சிற்பம் ஆகிய இரண்டு கலைகளையும் விட கட்டடக் கலை அவரின் மதிப்பையும் ஈடுபாட்டையும் பெற்றது. இதில் கூட ஒரு குறிப்பிட்ட கருத்தைப் புலப்படுத்துகின்ற, இன்னும் தெளிவாகக் கூறின், மனித சமூகத்திற்கு ஒரு குறிப்பிட்ட செய்தியை விடுக்கின்ற கட்டடக்கலை சின்னங்களே அவரது உள்ளத்தை சிறப்பாகக் கவர்ந்தன. இக்பாலின் நோக்கில் அக்கட்டடங்கள் வெறுமனே கலைச் சின்னங்கள் மட்டுமன்று, "கல்லும் கதை சொல்லும் வகையில் அவை மனித சமூகத்திற்கு அமைதியாக ஒரு செய்தியையும் விடுகின்றன."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்பால் ஸ்பெயினைத் தரிசித்தபோது, கிரனாடாவின் கட்டடக் கலைச் சின்னமான "அல்-ஹம்ரா"வைத் தரிசித்தார். ஆனால் அது அவரது உள்ளத்தில் மிகக் குறைந்த ஒரு பாதிப்பையே ஏற்படுத்தியது. ஆனால் கொர்டோவாவின் பள்ளிவாசல் அவரது உள்ளத்தில் மிக ஆழமான உணர்வை ஏற்படுத்தியது. இதற்குக் காரணம் முன்னையது வெறுமனே ஒரு மாளிகையாகவும் பின்னையது ஓர் இறை இல்லமாகவும் அமைந்திருப்பது மட்டுமன்று.

கொர்டோவாப் பள்ளிவாசலின் ஒவ்வொரு தூண்களும், ஸ்பெயினில் இஸ்லாமிய நாகரிகத்தின் பாரம்பரியக் கதைகளைக் கூறுவதை அவரால் கேட்க முடிந்தது. அப்பள்ளிவாசலில் கல்லும்- கருத்தும், அழகும்- பயனும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாதவாறு பிணைந்திருப்பதை இக்பால் மானசீகமாக உணர்ந்தார். இதேபோன்று இந்தியாவில் குதுபுத்தீன் அய்பக், ஷேர்ஷாஹ்,ஷாஜஹான் ஆகியோர் கட்டிய பிரமாண்டான கட்டடங்கள் அவரை ஆகர்ஷித்தன.

அக்கட்டடங்களில், அவற்றைக் கட்டியவர்களின் 'தனித்துவம்' பிரதிபலிப்பதை அவரால் அவதானிக்க முடிந்தது. அதனைக் கட்டியோர் ஒரு யுகத்தை ஒரு கணத்துள் உள்ளடக்கி விட்டனர் என இக்பால் குறிப்பிடுகிறார். அக்கட்டடங்களை நோக்குவோர் அவற்றின் பிரமாண்டத் தன்மையை தங்களது ஆளுமையோடு இணைத்துக் கொள்வதன் மூலம், உளத்திண்ம, மனோ உறுதி ஆகிய பண்புகளை அக்கட்டடங்களின் கற்களும் செங்கற்களும் பொதிந்திருப்பதை உணர்வர் எனக் குறிப்பிடுகின்றார். உலகப் புகழ்பெற்ற தாஜ்மஹால் இக்பாலின் கவிதையில் இவ்வாறு சித்திரிக்கப் படுகின்றது.

> ''பூரணச் சந்திரனின் ஒளியில் தாஜ்மஹாலின் பளிங்குக் கற்கள், நீரில் மிதப்பது போன்று காட்சியளித்தன.
>
> இங்கு ஒரு கணம் கழிப்பதானது, நித்தியத்தை விட அதிகமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு 'அன்பானது அதன் இரகசியங்களை கற்கள் ஊடாகப் புலப்படுத்துகின்றது. அன்பானது அதன் கண்ணிமைகள் மூலம் அவற்றைத் துளைத்துவிட்டது.

சுவர்க்கத்து இசைகள் இதிலிருந்து எழுகின்றன. காலத்தையும் நேரத்தையும் கடந்து அன்பானது இங்கு நித்தியத்தை எய்துவிட்டது.

அன்பே மனிதனுக்கு இறக்கைகளை வழங்குகின்றது. அதுவே அவனுக்கு ஒளிமிக்க, உயிர்த்துடிப்புள்ள உணர்வுகளை வழங்குகின்றது.

அது அறிவைப் பசுமையாக்குகின்றது. வெறும் கல்லை கண்ணாடியாக மாற்றுகின்றது.

அன்பின் மூலம் உணர்ச்சியுள்ள மனிதர்களின் உள்ளங்கள் 'சினாய்' வெளிபோல் தெய்வீக ஒளியின் பிரகாசத்தைப் பெறுகின்றன. கலைஞர்கள் மூஸாவின் வெண்கரத்தைப் பெறுகிறார்கள்.''

## அன்பு

ஆழமான தத்துவமும் உயிர்த்துடிப்புமுள்ள இக் கவிதையில் அல்லாமா இக்பால் அவரது 'இஷ்க்' என்னும் அன்பு பற்றிய தத்துவத்தின் சின்னமாக தாஜ்மஹால் விளங்குவதைக் காணுகின்றார். இது அன்பின் எல்லையற்ற தத்துவத்தையும் வியாபகத்தையும் அமரத்துவத்தையும் உலகுக்கு உணர்த்தி நிற்பதாக இக்பால் கருதுகின்றார். எனவே இக்பாலின் நோக்கில் கட்டடக்கலை என்பது வெறும் கலைப் பொருளாக மட்டுமன்றி, மனித சமுதாயத்திற்குப் பயனுள்ள ஒரு செய்தியையும் விடுக்கும் போதுதான் உயிர்த்துடிப்புள்ள ஓர் அம்சமாக மாற்றமடைகின்றது. அடிப்படையில்லாத நிலையில் கட்டடக்கலை என்பது வெறுமனே கற்களினதும் மண்ணினதும் கூட்டுச் சேர்க்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசையும் நுண்கலையும்

மனிதனுக்கு வெறுமனே களிப்பையும் ஆனந்தத்தையும் அளிப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட இசையை இக்பால் கண்டிக்கிறார். அதை 'அடிமைகளின் நுண்கலை' என அவர் வர்ணிக்கிறார். மனிதனின் ஆற்றல்களை நசுக்கி யதார்த்தமான வாழ்க்கையின் போராட்ட நிலைகளிலிருந்து அவனை விடுபடச் செய்து வெறுமனே சுகானந்த உலகில் திளைக்கச் செய்கின்ற இசையை அவர் வெறுத்தார். இத்தகைய இசையானது உள்ளத்தின் மென்மைத் தன்மையை மிக இழிவடையச் செய்து வாழ்க்கையைப் பற்றி ஒருவித அலுப்பையும் ஆர்வமின்மையையும் துயர நிலையையும் மனிதனில் தோற்றுவிப்பதாக அவர் கருதுகின்றார்.

இசையின் உண்மையான பணி பற்றி இக்பால் பின்வருமாறு விளக்குகின்றார்ஹ

" இசை சமுத்திரத்தில் பிரவாகித்து எழும் பேரலை போன்று

அமைதல் வேண்டும். அது மனிதனின் துயரத்தையும் நம்பிக்கையற்ற நிலையையும் போக்குதல் வேண்டும்.

அது அன்பின் இனிமையான பைத்தியத்தினால் போஷிக்கப்படல் வேண்டும்.

அது இதயத்தின் இரத்தத்தில் தோய்ந்து புறப்படல் வேண்டும்.

இசையின் மகத்துவம் எதில் தங்கியுள்ளது என்றால்

அது ஓசையையும் இராகங்களையும் கடந்து எல்லையற்ற பெரு வெளியில் பிரவேசிப்பதிலாகும்."

எனவே பொதுவாக நோக்குமிடத்து நுண்கலைகள் வெறுமனே மனிதனின் அழகுணர்வின் தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்யாது, மனித வாழ்விற்கு ஒரு மகத்தான செய்தியை விடுத்து, மனித ஆளுமைக்கு சக்தியும் உணர்வும் வழங்குதல் வேண்டுமென இக்பால் கருதுகின்றார். இந்த வகையிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்கலை பற்றிய அவரது கோட்பாடு அமைகின்றது. எனவே கலைஞனின் பணி வெறுமனே இயற்கையைப் பிரதிபலிப்பதன்று. மனிதனின் இயற்கையை மிகைக்கும் வகையில் அமைந்துள்ள உள்ளார்ந்த சக்திகளின் துணைகொண்டு, இயற்கையை மாற்றியமைத்து ஒரு புது சிருஷ்டியை தோற்றுவிப்பதாகும். அவனது ஆத்மாவைக் கொண்டு வாழ்க்கையின் வெற்றிடத்தை நிரப்புவதாகும். எனவே இக்பாலின் கருத்துப்படி இயற்கை என்பது ஒரு கலைஞன் தனது உள்ளார்ந்த உணர்வுகளையும் ஆளுமையையும் புலப்படுத்துவதற்கு பயன்படுத்த வேண்டிய மூலப் பொருளாகும். இக்கோட்பாட்டை எகிப்திலுள்ள உலகின் அதிசயங்களுள் ஒன்றான பிரமிட்டுகளோடு தொடர்புபடுத்தி இக்பால் விளக்குகிறார்,

## பிரமிட்டு

"இயற்கையானது ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு, நேரத்திற்கு நேரம் மாறி, மறுகணம் மறையும் மணல் திட்டுகளை மட்டுமே சிருஷ்டித்தது. ஆனால் பிரமாண்டமான வானமும் வெட்கித் தலைகுனியும் நித்திய பிரமிட்டுகளோ, படைப்பாற்றல் மிக்க ஒரு கலைச் சிருஷ்டிகர்த்தாவின் ஆற்றலின் வெளிப்பாடாகும். எனவே உண்மையான கலைஞன் இயற்கையின் அடிமையன்று. அவன அதன் எஜமானன். அவன் தனது ஆளுமையின் வெளிப்பாட்டிற்காக அதனைப் பயன்படுத்துகின்றான்."

இக்பாலின் கலை பற்றிய கருத்துக்கள் மூலம் கலை உத்திகள், கவிதை பற்றி அவர் மிகக் குறைவாக மதிப்பிடுகின்றார் என நாம் கருத இடமளிக்கலாகாது. ஏனெனில் ஒருவன் வெறுமனே நுண்ணிய உணர்வுகளைப் பெற்றிருப்பதால் மட்டும் ஒரு கலைஞனாகவோ அல்லது கவிஞனாகவோ ஆகிவிடல் முடியாது. மேற்கு வானில் அந்திப்பொழுது சாயும் ஓர் அழகிய காட்சி, உள்ளத்தைத் தொடும் ஒரு பழைய கதை அல்லது மிக அபூர்வமான ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சி ஒரு கலைஞனின் உள்ளத்தில் கற்பனை உணர்வைத் தோற்றுவித்து, உணர்வும் அழகும் மிக்க கலையுலகில் சஞ்சரிக்க வைக்கலாம்.

ஆனால் ஒரு கவிஞனாக அவன் ஆகுவதற்கு அவனது தனிப்பட்ட அனுபவங்களை, அவன் உணர்ந்த வகையிலேயே பிறரும் அனுபவிக்கும் வகையில் அழகிய உணர்ச்சிபூர்வமான சொற்களின் துணைகொண்டு வெளிப்படுத்தும் ஆற்றலை அவன் பெற்றிருத்தல் வேண்டும். இந்த கலை உத்தியின் துணையின்றி ஒரு கலைஞனோ அவனது கலைப்பணியை ஆற்றுதல் முடியாது. ஒரு கலைஞனின் பணிக்கும் வெற்றிக்கும் "கலை உத்தி" எந்த வகையில் துணைபுரிகின்றது என்பதை "பாலே ஜிப்ராஈல்" என்னும் கவிதையில் இக்பால் பின்வருமாறு விளக்குகிறார்:

'ஒரு கலைஞனின் சிருஷ்டிக்கான மூலப்பொருள் பல்வேறு வர்ணங்களாகவோ அல்லது கற்களாகவோ, செங்கற்களாகவோ அமையலாம். அவை சொற்களாகவோ ஓசைகளாகவோ அல்லது இசைக் கருவிகளாகவோ அமையலாம். ஆனால் இந்த ஒவ்வொரு துறையிலும் இரத்தத்தின் போஷிப்பே கலையின் அற்புதமாக அமைகின்றது. உள்ளத்தின் இரத்தத்தின் துளியே ஒரு வெறும் கல்லை 'உள்ளமாக' மாற்றுகின்றது அது இசையையும் இராகத்தையும் ஒத்திசையையும் தோற்றுவிக்கின்றது.'

கலைச் சிருஷ்டிகள் என்பன கலைஞர்கள் பெறும் உணர்வுகளினடியாகவே தோற்றமெடுக்கின்றன. ஒரு சமூகத்தின் ஆத்மீக ஆரோக்கியமானது அச்சமூகத்தின் கலைஞர்களும் கவிஞர்களும் எத்தகைய உணர்வைப் பெறுகிறார்கள் என்பதிலேயே தங்கியுள்ளது. ஆனால் கலைச் சிருஷ்டிகளின் தோற்றத்திற்கு அடிப்படையான காரணமாக அமையும் இந்த உணர்வை அவனில் தானாகவே சுயமாகத் தோற்றுவித்துக் கொள்ளல் முடியாது. அது ஒருவனின் சக்தியையும் ஆற்றலையும் மீறி அவனில் தோற்றமெடுக்கின்றது. இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக இந்த உணர்வைப் பெறுகின்ற கலைஞனின் ஆளுமை முக்கியத்துவம் பெறுகின்றது.

எனவே ஒருவன் அவனில் தோன்றும் உணர்வுகளைப் பாகுபாடு செய்து, சமூகத்திற்குப் பயனுள்ளவற்றை, பயன்படும் வகையில் வழங்கல் வேண்டும். ஒரு கலைஞனின் தோன்றும் மனித வாழ்வின் ஒழுக்க, ஆன்மீக வாழ்விற்கு ஊறு விளைவிக்கும் உணர்வுகள் கலைவடிவம் அளிக்கப்பட்டு சமூகத்திற்கு வழங்கப்படுவதால் ஏற்படும் பேரழிவானது, மனித நாகரிகத்திற்கு செங்கிஸ்கான் போன்ற இரக்க உணர்வற்ற, மிருக வெறிபிடித்தவர் களின் படையெடுப்பினால் நிகழ்ந்த பயங்கரமான பேரழிவுகளை விட ஆபத்தானதென இக்பால் குறிப்பிடுகிறார்.

## இயற்கையின் நிலை

இயற்கைக்கும், ஒரு கலைஞனின் கலைச் சிருஷ்டிக்கும் இடையேயுள்ள தொடர்பை இக்பால் ஒரு புது நோக்கில் அணுகுகின்றார். இயற்கையோடு இணைந்து கலைச் சிருஷ்டிகளை உருவாக்கும் ஒரு கலைஞன் இயற்கையிலிருந்தே தனது கலை வெளிப்பாட்டிற்கான உணர்வையும் உந்துதலையும் பெறுகிறான் எனப் பொதுவாகக் கொள்ளப்படுகின்றது. ஆனால் இக்பாலின் நோக்கில் இயற்கை என்பது தேக்கநிலையுடையது; அழகற்றது; இறந்தது. எத்தகைய மதிப்பீடுகளையும் கொண்டிராது.

ஒரு கலைஞனின் மகத்தான ஆளுமையே இயற்கைக்கு உயிரையும் அசைவையும் இயக்கத்தையும் அழகையும் பொலிவையும் மதிப்பீட்டையும் வழங்குகின்றது. உண்மையில் கூறப்போனால் ஒரு கலைஞனின் விழுமிய ஆளுமையின் உயர்ந்த வெளிப்பாட்டிற்கு நித்தியமான தடையாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை அமைகின்றது. ஓர் உண்மையான கலைஞன் என்பவன் தனது உணர்வின் வெளிப்பாட்டிற்கு தடையாக அமையும் இயற்கையில் தனது ஆளுமையின் ஆதிக்கத்தைப் பலமாக நிலைகொள்ளச் செய்து, இயற்கை தன்னை மிகைக்காதவாறு அந்த இயற்கையையே வெற்றி கொள்பவனாகும். இயற்கையை அவன் தன்னிலிருந்து புறம்பான ஒன்றாக நோக்கி, அதனை முற்றிலும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர அவன் முற்படுகிறான். அவன் எந்த அளவு இந்த முயற்சியில் ஈடுபடுகிறானோ அந்தளவிற்கு அவனது ஆளுமை பூரணத்துவம் பெறுகிறது.

கலை எவ்வாறு மனித உள்ளத்தின் ஆக்கப்படைப்பின் வெளிப்பாடாக அமைகின்றதோ அதே போன்று இயற்கை என்பது இறைவனின் ஆக்கப்படைப்பாகும். இறைவனின் இந்தப் படைப்பிற்கு மனிதன் அவனது மகத்தான ஆளுமையின் மூலம் அழகும் பொலிவும் உயிரும் உணர்வும் அசைவும் இயக்கமும் அளிக்கின்றான். இந்தத் தத்துவத்தை இக்பால் அவரது 'பயாம் மஷ்ரிக்' என்னும் கவிதைத் தொகுதியில் 'இறைவனுக்கும் மனிதனுக்குமிடையில் ஓர் உரையாடல்' என்ற கவிதையில் பின்வரமாறு விளக்குகிறார்:

இறைவன் மனிதனை நோக்கிப் பின்வரும் வகையில் முறையிடுகிறான்-

> " நான் அதே மண்ணாலும் நீராலும் உலகைப் படைத்தேன்.
>
> ஆனால் நீ அதனைப் பல பல பிரதேசங்களாகப் பிரித்தாய்.
>
> நான் இரும்பைப் படைத்தேன். நீயோ அம்பையும் வாளையும் படைத்தாய்.
>
> நான் பூங்காக்களையும் பசுஞ் செடிகளையும் படைத்தேன் நீயோ கோடரியைப் படைத்து அதனை அழிக்கின்றாய்.
>
> நான் கானம் பாடும் பறவை இனங்களைப் படைத்தேன் நீயோ அவற்றைக் கூடுகளில் அடைக்கிறாய்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் இறைவனுக்கு இவ்வாறு பதில் பகர்கிறான்.

''உனது சிருஷ்டி எனக்குப் போதியதாக அமையவில்லை. எனது உள்ளார்ந்த ஆற்றலானது எனது உலகினை அழகுபடுத்த அதே போன்ற ஒரு சிருஷ்டித் தொழிலை வேண்டி நின்றது.

எனது சிருஷ்டியா? உனது சிருஷ்டியா சிறந்தது?

நீ இரவைப் படைத்தாய் நான் விளக்கைப் படைத்தேன்.

நீ மணலைப் படைத்தாய் நான் அதனால் கிண்ணம் செய்தேன்.

நீ காடுகளையும் பாலைவனங்களையும் மலைகளையும் படைத்தாய் நான் பூங்காகக்களை அமைத்தேன்.

நீ கற்களைப் படைத்தாய் நான் கண்ணாடி அமைத்தேன்.

நீ நஞ்சைப் படைத்தாய்ளூ நான் அதற்கு மாற்று மருந்து செய்தேன்.''

எனவே இக்பாலின் நோக்கில் இயற்கை என்பது அசைவும் இயக்கமும் அற்றது. மனிதனே அதற்கு அசைவையும் இயக்கத்தையும் அழகையும் பொலிவையும் வழங்குகிறான்.

கலையும் இலக்கியமும் மனித வாழ்வை அழகுபடுத்தி, மனிதனின் ஆளுமையை மேலோங்கச் செய்தல் வேண்டுமென இக்பால் கருதுகின்றார். 'அஸ்ராரே குதி' என்னும் தனது கவிதைத் தொகுதியின் முன்னுரையில் இக்பால் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"மனிதனின் செயல்பாடுகள் அனைத்தினதும் இறுதி நோக்கம், ஆற்றல் பொதிந்த, சக்திமிக்க உயிர்த்துடிப்பும் இயக்கமும் மிக்க வாழ்வேயாகும். மனிதனின் எல்லாக் கலைகளும் இந்த இறுதி இலட்சியத்திற்கு அர்ப்பணமாகுதல் வேண்டும். இந்த நோக்கத்தை எந்தளவிற்கு அவை பூர்த்தி செய்கின்றன என்பதை அடிப்படையாக வைத்தே அவை மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னதமான கலை என்பது எங்களில் மறைந்துள்ள, தேங்கிக் கிடக்கின்ற மகத்தான ஆற்றல்களை விழித்தெழச் செய்து, இயங்கச் செய்யும் கலையாகும். வாழ்க்கையின் போராட்டத்தை எதிர்கொள்ளச் செய்யும் கலையாகும். எங்களுக்கு அயர்ச்சியையும் துக்கத்தையும் தோற்றுவித்து சுற்றியுள்ள யதார்த்த உலகை நோக்கவிடாது எங்கள் கண்களை மூடச் செய்கின்ற கலைகள் அனைத்தும் எங்களில் தேக்க நிலையையும் இறுதியில் அழிவையுமே தோற்றுவிக்கும். 'அபின்' போன்ற மயக்க நிலையைத் தோற்றுவிக்கும் கலை எங்கும் இருத்தல் கூடாது. கலை கலைக்காகவே என்ற கோட்பாடு, எங்களை வாழ்வின் ஓட்டத்திலிருந்து விடுபடச் செய்து, எங்கள் ஆற்றல்களையும் சக்திகளையும் முடமாக்க வந்த ஒரு தந்திர முயற்சியாகும்."

(அஸ்ராரே குதி)

மேலும் ,

எப்போதும் கலையானது இயற்கையோடு உள்ள
தொடர்பைத் துண்டித்துக் கொள்கின்றதோ,

அக்கணம்முதல் அந்த இனம்' தேக்க நிலையடைகிறது.

என 'ளர்பே கலீம்' என்னும் தொகுப்பில் அவர் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய மதச் சிந்தனையின் புனர்நிர்மாணம் பற்றிய இக்பாலின் கருத்துக்கள்

சமூக மாற்றம் என்பது சமூக வளர்ச்சியின் தவிர்க்க முடியாத ஓர் அம்சமாகும். அது சமூக பரிணாமத்தின் பிரிக்கமுடியாத ஒரு அங்கமாகும். இஸ்லாம் மனித சமூகத்தின் நேர்வழிக்கான இறுதி வழிகாட்டுதலைப் பொதிந்த ஒரு மார்க்கம் என்ற வகையில் சமூக வளர்ச்சியையும், சமூக மாற்றத்தையும் அங்கீகரிக்கின்றது. சமூக வளர்ச்சி, மாற்றத்திற்கேற்ப தோன்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு சமூகமாற்றத் திற்கேற்ப இசைவாக்கம் பெறும் தன்மையை "இஜ்திஹாத்" இஸ்லாமிய சட்டத்திற்கு வழங்குகின்றது. சமூக மாற்றம், வளர்ச்சிக்கு ஏற்ப சட்டம் மட்டுமன்றி, கருத்துகளும் சிந்தனைகளும் இசைவாக்கம் பெறுதல் அவசியமாகும். இதன் மூலம் இஸ்லாமிய சட்டம் இயக்க சக்தியை (dynamism) பெறுவது போன்று இஸ்லாமிய சிந்தனையும் இயக்க சக்தியைப் பெறுகின்றது.

இஸ்லாமிய கலைகளின்- குறிப்பாக சன்மார்க்க கலைகளின்- புனர் நிர்மாணத்திற்கு மிகப் பெரும் பங்களிப்புச் செய்தவராக இமாம் கஸ்ஸாலி (றஹ்) விளங்குகின்றார்கள். அவர்களது "இஹ்யா உலூமுத்தீன்" (சன்மார்க்கக் கலைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்துயிர்ப்பு) என்னும் நூல் இஸ்லாமிய சன்மார்க்கக் கலைகளை, கால வளர்ச்சி, மாற்றங்களின் பகைப்புலனில் அணுகி விளக்கி, அக்கலைகளுக்கு மறுவிளக்கம் அளிக்கும் ஒரு காத்திரமான முயற்சியாகும்.

இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர்கள் இஸ்லாமிய கலைகளுக்குப் புத்துயிரளிக்கும் முயற்சியில் ஈடுபட்டது போன்றே, நவீன காலப் பிரிவில் அல்லாமா இக்பால் இஸ்லாமிய சிந்தனையை காலவளர்ச்சி, மாற்றங்களின் பகைப்புலனில் புனர்நிர்மாணம் செய்தல் பற்றி சிந்தித்தார்.

இக்பால் கவிதை, தத்துவம் ஆகிய துறைகளுக்கு ஆற்றிய பங்களிப்பு போன்று இஸ்லாமிய மார்க்க சிந்தனைக்கும் மிகக் காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ளார். இஸ்லாமிய சிந்தனைத்துறையில் மிக முக்கியமான ஓர் இடத்தை அவர் வகிக்க இது காரணமாக விளங்குகின்றது.

இக்பால் மத்ராஸ், ஹைதராபாத், அலிகார் ஆகிய இடங்களில் ஒரு விரிவுரைத் தொடரை நிகழ்த்துவதற்காக அழைக்கப்பட்டார். அவர் ஆற்றிய இந்த விரிவுரைகளில் இஸ்லாமிய மார்க்க சிந்தனையைப் புனர் நிர்மாணம் செய்தல் பற்றிய அவரது மிக ஆழமான கருத்துக்களை வெளிப்படுத்தினார். இந்த விரிவுரைத் தொடர். 'The Reconstruction of Religious Thought in Islam' 'இஸ்லாத்தில் மதச் சிந்தனையின் புனர் நிர்மாணம்' என்ற பெயரில் நூலுருவில் வெளியிடப்பட்டது. இந்த விரிவுரைகளில் இஸ்லாத்தின் கோட்பாடுகளை நவீன சிந்தனையினதும் அறிவியல் அறிவினதும் அடிப்படையில் விளக்கும் முயற்சியை மேற்கொண்டார்.

இக்பால் பின்வருமாறு கூறுகிறார:

நவீன முஸ்லிமின் முன்னால் உள்ள பணி மிகப் பெரியது. கடந்த காலத்துடன் துண்டித்துக் கொள்ளாமல் இஸ்லாத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பு முழுவதையும் மீள் சிந்தனை செய்யும் பணி அவனுக்கு உள்ளது. இஸ்லாத்தைப் பொறுத்தளவில் அது வேண்டி நிற்கும் இந்த புதிய உயிரோட்டத்தை உணர்ந்த முதல் முஸ்லிம் ஷாஹ் வலியுல்லாஹ் திஹ்லவி (றஹ்) ஆவர். இந்தப் பணியின் முக்கியத் துவத்தை மிகச் சிறந்த முறையில் ஜமாலுத்தீன் ஆப்காானி (றஹ்) விளங்கியிருந்தார்.

இஸ்லாமிய சிந்தனை வரலாற்றின் உள்ளார்ந்த கருத்து பற்றிய அவரது ஆழமான அறிவும், புரிதலும், மக்களுடனும் மனித விவகாரங்களோடும் உறவாடி அவர் பெற்ற அனுபவங்களும், அவரது பரந்த நோக்கோடும், கண்ணோட்டத் தோடும் இணைந்து முஸ்லிம் சமூகத்தின் கடந்த காலத்திற்கும் நிகழ் காலத்திற்குமிடையில் மிகப் பொருத்தமான இணைப்பைக் காணக்கூடிய ஒருவராக அவர்(ஆப்காானி) ஆகியிருப்பார். அவரது மாபெரும் சக்தியும், ஆற்றலும் இஸ்லாத்தின் நம்பிக்கைக் கோட்பாடு, நடைமுறை பற்றிய விடயங்களில் முழுமையாக செலுத்தப்பட்டிருந்தால், இஸ்லாமிய உலகு அறிவு ரீதியாக இன்று மிக உறுதியான நிலையைப் பெற்றிருக்கும். ஆனால் அவரது ஆற்றலும், திறமையும், சக்தியும், உத்வேகமும் துடிப்பும் இத்துறையில் ஒருமுகப்படுத்தப்படாமல் வேறு பல துறைகளில் சிதறடிக்கப்பட்ட நிலையில் செயல்பட்டதால் இது சாத்தியமாக வில்லை.[(1)]

எங்களுக்கு இன்றுள்ள ஒரே வழி நவீன அறிவை மதித்து, ஆனால் அதே நேரத்தில் அதனைச் சுதந்திரமாக அணுகி-இஸ்லாமியப் போதனைகளை அந்த அறிவின் வெளிச்சத்தில் அணுகுவதாகும். சிலபோது இது எங்களுக்கு முன் வாழ்ந்தவர்களிலிருந்து வித்தியாசமான வகையில் எங்களை சிந்திக்க வைக்கலாம்.[(2)]

நவீன வரலாற்றில் இஸ்லாத்தில் மேற்கின் செல்வாக்கு, தாக்கம் பற்றி இக்பால் பின்வருமாறு விளக்குகின்றார்: "நவீன வரலாற்றில் நாம் அவதானிக்கக்கூடிய மிகக் குறிப்பிடத்தக்க ஓர் அம்சம், இஸ்லாமிய உலகு மிக வேகமாக மேற்கை நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரும் போக்காகும். இதில் எத்தகைய தவறும் இல்லை. ஏனெனில் ஐரோப்பியப் பண்பாடும் நாகரிகமும் அதன் அறிவுத்துறையைப் பொறுத்தளவில் இஸ்லாமியரது பண்பாட்டின் வளர்ச்சிப் படிவத்தின் ஒரு முக்கிய வளர்ச்சிக் கட்டங்களினடியாகத் தோன்றிய ஒரு வளர்ச்சியாகும். ஆனால் இது தொடர்பாக ஏற்படும் அச்சமும் பயமும் என்னவெனில், ஐரோப்பிய கலாசாரத்தின் வெளிக் கவர்ச்சியானது மேற்கின் அறிவியல் பாரம்பரியத்தை நோக்கி நகரும் முஸ்லிம் உலகின் இயக்கத்தைத் தடைசெய்து, மேற்கின் அறிவுப் பாரம்பரியத்தின் உள்ளார்ந்த தன்மையை நாங்கள் அடைய முடியாமல் போகலாம் என்பதாகும்." (3)

கடந்த பல நூற்றாண்டுகளாக முஸ்லிம் உலகம் அறிவுத்துறையில் தேக்க நிலையடைந்து உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. முஸ்லிம்களின் வரலாற்றின் அறிவியல் வளர்ச்சி மிகச் சிறப்பாகக் காணப்பட்ட காலகட்டத்தில், முஸ்லிம் தத்துவஞானிகள், அறிவியலாளர்கள் ஆர்வங்காட்டிய அறிவுரீதியான, ஆய்வு ரீதியான விடயங்கள் குறித்து, இந்த காலகட்டத்தில் ஐரோப்பா மிகத் தீவிரமாக ஈடுபாடு காட்டவும், சிந்திக்கவும் ஆரம்பித்தது. முஸ்லிம்கள் அறிவு நிலையில் தேக்க நிலையடைந்த காலம் முதல், ஐரோப்பா அறிவுத்துறையில் காட்டிய ஆர்வம் காரணமாக, மனித சிந்தனையிலும், அனுபவத்திலும் வியத்தகு, விசாலமான வளர்ச்சி காணப்பட்டது.

இயற்கையின் மீது மனிதன் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்ததானது அவனுக்கு ஒரு புதிய நம்பிக்கையை வழங்கியதோடு, அவனது பௌதீகச் சூழலை மிகைத்து நிற்கும் ஓர் உயர்வு மனப்பான்மையை அவனில் தோற்றுவித்தது. புதிய கண்ணோட்டங்கள் அணுகுமுறைகள் உருவாகின. புதிய அனுபவங்களின் வெளிச்சத்தில் பழைய பிரச்சினைகள் மீள் வாசிப்புக்கு உட்படுத்தப்பட்டன. இவற்றோடு புதிய பிரச்சினைகளும் தோன்றின.

மனித அறிவானது அதன் அடிப்படைப் பரிமாணங்களான நேரம் (Time), இடம் (Space), காரண-காரியம் (Causualty)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றைக் கடந்த நிலையில் வளர்ச்சி யடையும் நிலை தோன்றுவது போன்ற ஒரு நிலை ஏற்பட்டது. நேரம், இடம் ஆகியவற்றோடு தொடர்புடைய ஐன்ஸ்டீனின் சார்புக் கோட்பாடு (Theory of Relativity) பிரபஞ்சத்தை ஒரு புதிய நோக்கில் அணுகும் தன்மையையும், மதத்திற்கும் தத்துவத்திற்கும் பொதுவான பிரச்சினைகளை புதிய கண்ணோட்டத்தில் பார்க்கும் நிலையையும் உருவாக்கியது. இச் சூழ்நிலையில் ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் வாழும் முஸ்லிம் இளைஞர்கள் அவர்களது மதக் கோட்பாடுகள் பற்றிய ஒரு புதிய நோக்கை, கண்ணோட்டத்தை வேண்டி நிற்பதில் எத்தகைய ஆச்சரியமும் இல்லை.[4]

எனவே இஸ்லாத்தின் மீள் எழுச்சியோடு நாங்கள் ஐரோப்பிய சிந்தனையையும், அதன் அறிவு வளர்ச்சியால் அது பெற்றுள்ள முடிவுகளையும், சுதந்திரமான கண்ணோட்டத்தில் அணுகுவதும் அவை எவ்வளவு தூரம் எங்களது மதச் சிந்தனையை புனர்நிர்மாணம் செய்ய துணைபுரிய முடியும் என்பதனைப் பற்றிச் சிந்தித்தலும், ஆராய்தலும் அவசியமாகும்.[5]

இஸ்லாமிய உலகம் அறிவுத் துறையில் தேக்க நிலையிலிருந்த காலப் பிரிவில், முஸ்லிம் ஸ்பெயின் மூலமாக ஐரோப்பா பெற்றுக்கொண்ட முஸ்லிம்களது அறிவியல் பாரம்பரியம் காரணமாக ஐரோப்பாவில் மகத்தான அறிவு வளர்ச்சி ஏற்பட்டது. அதன் காரணமாக பிரபஞ்சம், காலம், இடம் ஆகியவற்றைப் புதிய அறிவியல் நோக்கில் அணுகும் நிலை தோன்றியது. புதிய வினாக்கள் எழுப்பப்பட்டு புதிய விடைகள் பெறப்பட்டன. மனித சிந்தனை வளர்ச்சியில் வியத்தகு மாற்றங்கள் ஏற்பட்டன. முஸ்லிம்கள் இந்த மாற்றங்களுக்கு ஏற்ப தங்களது பாரம்பரிய சிந்தனையை, தங்களது தனித்துவத்தைப் பேணிய நிலையில் புனர்நிர்மாணம் செய்தல் வேண்டும் என்ற கருத்தையே இக்பாலின் மேற்குறிப்பிட்ட கருத்து விளக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதச் சிந்தனையின் புனர்நிர்மாணம் தொடர்பான இக்பால் தனது விரிவுரைத் தொடரில் குறிப்பிடும் கருத்துகள் மிக ஆழமானவை; மதம், தத்துவம், அறிவியல் ஆகிய மூன்றையும் ஊடறுத்துச் செல்பவை; மனித சிந்தனையின் பல்வேறு பரிமாணங் களோடு தொடர்புடையவை. இஸ்லாமிய அறிவுப் பாரம்பரியத்தின் முக்கிய அங்கங்களான 'இல்முல் கலாம்', 'தஸவ்வுப்', 'பல்ஸபா' ஆகியன பற்றி ஆழமான விசாரணைகளை அது உள்ளடக்கியுள்ளது. இமாம் கஸ்ஸாலி, இப்னு ருஷ்த், இப்னு தைமியா, ஷாஹ் வலியுல்லாஹ் போன்ற முஸ்லிம் சிந்தனையாளர்களின் கருத்துகள், கான்ட்(Kant), பெர்க்ஸன் (Bergson), வைட் ஹெட் (White head) போன்ற மேற்கத்திய தத்துவ ஞானிகளின் கோட்பாடுகளின் ஆழம், அகலத்தை மிக நுட்பமாக அவர் விளக்குகின்றார்.

அல்-குர்ஆனின் முக்கிய நோக்கம் பிரபஞ்சத்துடனும் இறைவனுடனுமான மனிதனின் தொடர்பைப் பொறுத்தளவில் அவனது உணர்வினை விழிப்படையச் செய்வதாகும் என இக்பால் குறிப்பிடுகின்றார். நாம் வாழும் இப்பிரபஞ்சமானது வீணுக்காகவோ, விளையாட்டுக்காகவோ படைக்கப்படவில்லை எனக்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

"வானங்களையும் பூமியையும்,அவ்விரண்டுக்கு மத்தியிலுள்ள வைகளையும் விளையாட்டாய நாம் படைக்கவில்லை. (நிச்சயமாக) அவ்விரண்டையும் உண்மையைக் கொண்டே தவிர நாம் படைக்கவில்லை; எனினும், அவர்களில் பெரும்பாலோர் (இதனை) அறிய மாட்டார்கள்"

(அல்-குர்ஆன் 44: 38:39)

"வானங்கள், மற்றும் பூமியின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது. இன்னும் அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையவன்" (அல்-குர்ஆன். 3: 189)

"நிச்சயமாக, வானங்கள், மற்றும் பூமியைப் படைத்திருப்பதிலும், இரவும் பகலும் மாறி மாறி வருவதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுடை யோர்க்குப் பல அத்தாட்சிகள இருக்கின் றன (அறிவுடைய) அத்தகையோர், நின்ற நிலையிலும், இருந்த இருப்பிலும், தங்கள் விலாப் புறங்களின் மீது (சாய்ந்து)ம் அல்லாஹ்வையே நினைத்து, வானங்கள் மற்றும் பூமியின் படைப்பைப் பற்றியும் சிந்திதது, "எங்கள் இரட்சகனே! நீ இவற்றை வீணுக்காகப் படைத்துவிடவில்லை; நீ மிகத் தூயவன்; (நரக) நெருப்பின் வேதனை யிலிருந்து எங்களை நீ காத்தருள்வாயாக!" (என்று கூறுவார்கள்) (அல்-குர்ஆன் 3:190-191)

எனவே இப் பிரபஞ்சத்தில் ஒரு நோக்கும் குறிக்கோளும் பொதிந்துள்ளது என்ற உண்மையை இத்திருவசனங்கள் குறிப்பிடு கின்றன. இது தவிர இப் பிரபஞ்சமானது விரிவுக்கும் வளர்ச்சிக்கும் இடமளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது என்பதையும் அல் குர்ஆன் கூறுகின்றது.

"அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும். அவன் வானங் களையும், பூமியையும் ஆரம்பமாகப் படைத்தவன்; இரண்டிரண்டும், மும்மூன்றும், நன்நான்கும் இறக்கை களுடைய மலக்குகளைத் தூதர்களாக ஆக்கியவன்; அவன் நாடியதை(த் தன்) படைப்பில் (பின்னும்) அதிகப்படுத்துவான்; நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையோன்" (அல்-குர்ஆன் 35:1)

இக்பாலின் நோக்கில், இப்பிரபஞ்சத்தின் சூட்சுமமான அசைவும், ஓசையோ, இரைச்சலோ அற்ற காலத்தின் (Time) நீட்சியும், மனிதர்களின் பிரத்தியட்சப் பார்வைக்கு இரவும் பகலும் மாறி மாறி வரும் ஓர் அசைவாக, இயக்கமாகத் தோற்றமளிக் கின்றது. இதனை குர்ஆன் இறைவனின் மகத்தான அத்தாட்சிகளில் ஒன்றாகக் கருதுகின்றது.

"இரவையும் பகலையும் அல்லாஹ்வே (திருப்பித் திருப்பி) மாற்றிக்கொண்டு இருக்கிறான். பார்வைகள் உடையோருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயமாக இதில் ஒரு (நல்ல) படிப்பினை உண்டு"

(அல்-குர்ஆன் 24:44)

இதன் காரணமாகவே றஸூல் (ஸல்) அவர்கள் "காலத்தைச் சபிக்காதீர்கள். நான் காலமாக உள்ளேன்!" என இறைவன் கூறுவதாகக் குறிப்பிட்டார்கள். இந்த பிரமாண்ட மான இடமும் (Space), காலமும் (Time) மனிதனுக்கு இப் பிரபஞ்சத்தை பூரணமாகத் தனது ஆதிக்கத்திற்கு உட்படுத்தும் வாக்குறுதி யைச் சுமந்துள்ளது. எனவே பிரபஞ்சத்தில் இறைவனின் அத்தாட்சிகள் பற்றிச் சிந்தித்து, இயற்கையை எதிர்கொள்வதற் கான வழிகளைக் கண்டறிந்து, அதனை யதார்த்தமாக்கல் மனிதனின் கடமையாகும்.(6)

பிரபஞ்சத்தின் இயற்கைத் தன்மையும், அது மனிதனுக்கு பொதிந்துள்ள வாக்குறுதியும் இதுவெனில், சுற்றிலும் இயற்கையினால் சூழப்பட்டுள்ள மனிதனின் நிலை என்ன? என வினா எழுப்பும் இக்பால் மனித ஆளுமையின் மகத்துவம் பற்றி பின்வருமாறு விளக்குகின்றார்: "மனிதன் பலவீனமானவன்; ஆனால் அவனது அனைத்துப் பலவீனங்களுக்கு மத்தியிலும், அவன் இயற்கையை மிகைத்த ஆளுமை உடையவன். ஏனெனில் வானங்கள், பூமி, மலைகள் சுமக்கத் தயங்கி மறுத்த பொறுப்பை அவன் சுமந்துள்ளான்.

"நிச்சயமாக நாம் அமானிதத்தை வானங்கள், பூமி, மலைகள் ஆகியவற்றின் மீது (அதைச் சுமந்துகொள்ளுமாறு) எடுத்துக் காட்டினோம்; அப்போது அதைச் சுமந்து கொள்வதிலிருந்து அவை விலகிக் கொண்டன; இன்னும், அ(தைச் சுமப்ப) திலிருந்து அவை பயந்தன; (ஆனால்) மனிதனோ அதனைச் சுமந்துகொண்டான்; நிச்சயமாக அவன் (அமானிதத்தை நிறைவேற்றும் விஷயத்தில்) பெரும் அநியாயக்காரனாக (அதன் கடமையை) அறியாதவனாக இருக்கிறான்." (அல்-குர்ஆன் 33:72)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைச் சூழஉள்ள சக்திகளினால் மனிதன் கவரப்படும்போது அவற்றை நெறிப்படுத்தும் ஆற்றல் அவனுக்கு உள்ளது. சில சக்திகள் அவனை தடுக்கும்போது, அவன் காணும் புற உலகை விட மிக விசாலமான ஒரு உலகை அவனுக்குள் படைக்கும் ஆற்றலும் மனிதனுக்கு உண்டு. மனிதனின் முன்னால் உள்ள பணி கஷ்டமும் சிரமமும் நிறைந்தது. அவன் ஒரு ரோஜா இதழைப் போன்று பலவீனமானவன். ஆனால் அதே நேரத்தில் மனிதனின் ஆத்மாவைப் போன்று பலம் மிக்க, அழகான, உணர்வூட்டும் எதுவும் இல்லை. குர்ஆனின் நோக்கில் மனிதன் இயக்கமுடையவன்; படைப்பாற்றல் பெற்றவன்; ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு உயர்ந்து முன்னேறிச் செல்பவன்.(7)

" சந்திரன் மீதும்- அது பூரணமாகி விட்ட போது(ம் சத்தியம் செய்கிறேன்) (ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு) நிச்சயமாக நீங்கள் படிப்படியாக ஏறிச் செல்வீர்கள்."
*(அல்-குர்ஆன் 84: 18-19)*

மனிதன் அவனது ஆற்றல்கள், சக்திகளைப் பயன்படுத்தி பிரபஞ்சத்தின் சக்திகளை அவனது நோக்கத்தை அடையப் பயன்படுத்தல் வேண்டும். இந்த முன்னேற்றத்திற்கான முயற்சியில், மனிதன் அவனது முயற்சியை ஆரம்பித்தால் இறைவன் அவனுடன் இணைந்து செயல்படுகின்றான் எனக்குர்ஆன் குறிப்பிடுகின்றது:

மனிதன் இந்த முயற்சியை ஆரம்பிக்கா விட்டாலோ, அவனில் உள்ளார்ந்து அமைந்துள்ள ஆற்றல்களை வளர்க்க முற்படா விட்டாலோ, அல்லது அவனை முன்னேறிச் செல்லத் தூண்டும் உந்துதல் சக்தியை இழந்து விட்டாலோ, அவனுள் உள்ளார்ந்து அமைந்துள்ள ஆத்மா ஒரு வன்மையான கல்போன்று மாற்றமடைந்து, அவன் வெறுமனே இறந்த இயக்கமற்ற ஒரு சடமாக ஆகிவிடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் வாழ்வும் அவனது உயர்ச்சியும் அவனைச் சூழ்ந்துள்ள உலகோடு அவன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதில் தங்கியுள்ளது. இந்தத் தொடர்பை அவன் ஏற்படுத்திக் கொள்ள அறிவே அவனுக்குத் துணைபுரிகின்றது. அறிவு என்பது புலன்களைப் பயன்படுத்தலும், அவ்வாறு புலன்கள் மூலம் பெற்ற அறிவை, பகுத்தறிவைப் பயன்படுத்தி விரிவுபடுத்திக் கொள்ளலுமாகும்.

"(மனிதர்களே!) அல்லாஹ்வை எவ்வாறு நீங்கள் நிராகரிக்கிறீர்கள்? நீங்களோ உயிரற்றவர்களாக இருந்தீர் கள்; பின்னர் உங்களை அவன் உயிர்ப்பித்தான்; பின்னும் அவனே உங்களை மரணிக்கச் செய்வான்; பின்னும் அவனே உங்களை உயிர்ப்பிப்பான். (அதன்) பின்னும் நீங்கள் (உங்கள் வினையின் பலனை அடைவதற்காக) அவன் பக்கமே மீட்கப்படுவீர்கள்."

"அவன் எத்தகையவனென்றால், பூமியிலுள்ள யாவற்றையும் உங்களுக்காக படைத்தான்; பின்னர் அவன் வானத்தின்பால் நாட்டங்கொண்டான்; (அவ்வாறு நாடிய அவன்) அவைகளை ஏழு வானங்களாக ஒழுங்கு படுத்தினான். மேலும் அவன் ஒவ்வொரு பொருளையும் நன்கறிவான்."

"(நபியே!) இன்னும் உமதிரட்சகன் மலக்குகளிடம்: 'நான் பூமியில (என்னுடைய) பிரதிநிதியை (ஆதமை) நிச்சய மாக ஆக்கப் போகிறேன்', எனக் கூறிய சமயத்தில அ(தற்கு)வர்கள், '(இரட்சகா!) அதில் விஷமம் செய்து இரத்தம் சிந்தக் கூடியவரையா நீ ஆக்கப் போகிறாய்? நாங்களோ உன்னுடைய புகழைக் கொண்டு உன்னைத் துதிக்கின்றோம்; உன்னுடைய பரிசுத்தத் தன்மையைப் போற்றுகிறோம்' எனக் கூறினர்; (அதற்கு) நீங்கள் அறியாதவற்றை நிச்சயமாக நான் நன்கறிகிறேன்' என (அல்லாஹ்வாகிய) அவன் கூறினான் (என்பதை நினைவுகூர்வீராக!)"

"(ஆதமைப் படைத்து) ஆதமுக்கு (பொருட்களின்) பெயர்களை அவை அனைத்தையும் கற்றுக்கொடுத்து, பின்னர் அவற்றை (அந்த) வானவர்களின் மீது எடுத்துக் காட்டினான்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பால் "(வானவர்களே! உங்களது கூற்றில்) நீங்கள் உண்மையாளர்களாயிருப்பின், இவற்றின் பெயர்களை நீங்கள் எனக்குத் தெரிவியுங்கள்" எனக்கூறினான்."

(அல் குர்ஆன் 2: 28-31)

இந்த திருவசனம் மனிதன் ஒவ்வொரு பொருளையும் இனம் கண்டு அடையாளப்படுத்தும் ஒரு ஆற்றலைப் பெற்றுள்ளான் என்பதை விளக்குகின்றது. அதாவது ஒவ்வொரு பொருளையும் பற்றி ஒரு கருத்தை உருவாக்கும் ஆற்றல் அவனுக்கு உள்ளது. மனிதனின் அறிவின் பண்பு அது கருத்தியல் சார்ந்த தன்மையை (conceptual) பெற்றிருப்பதாகும். இந்த கருத்து சார்ந்த அறிவு என்னும் ஆயுதத்தை தாங்கிய மனிதன் அவனைச் சூழ உள்ள பிரத்தியட்ச உலகை அணுகுகின்றான்.

குர்ஆனின் சிறப்பம்சங்களில் ஒன்றாகக் காணப்படுவது என்னவெனில், அது மனிதனின் புறக் கண்களுக்குப் புலப்படும் யதார்த்த உலகு பற்றி அவனது அவதானத்தைச் செலுத்துவதாகும். பின்வரும் குர்ஆனின் திருவசனங்கள் இதனைச் சிறப்பாக விளக்குகின்றன:

"தெளிவான அத்தாட்சிகளிலிருந்தும், நேர்வழியிலிருந்தும் நாம் இறக்கி வைத்துள்ளதை- அதனை நாம் மனிதர்களுக்காக வேதத்தில் விளக்கிய பின்னர், நிச்சயமாக எவா மறைக்கின்றார்களே அத்தகையோர் - அவர்களை அல்லாஹ் சபிக்கிறான். (மனித இனம், ஜின், மலக்குகள் ஆகியோரில்) சபிப்பவர்களும் அவர்களைச் சபிக்கின்றனர்"

(அல் குர்ஆன் 2: 159)

"இன்னும் அவன் எத்தகையவனென்றால், அவனே உங்களை ஓர் ஆத்மாவிலிருந்து உண்டாக்கினான்; பின்னர் (மனிதர்களே! ஒவ்வொருவருக்கும் தாயின் வயிற்றில்) தங்குமிடமும் (கப்ரில்) ஒப்படைக்கப்படும் இடமும் உண்டு;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கிக்கொள்கிற சமூகத்தினருக்கு, (நம்முடைய) வசனங்களை நிச்சயமாக விவரிக்கின்றோம்."

" மேலும் அவன் எத்தகையவனென்றால், வானத்தி லிருந்து மழையை இறக்கி வைக்கின்றான்; பின்னர் அதைக் கொண்டே ஒவ்வொரு பொருளின் புற்பூண்டுகளையும் நாம் (முளைக்க வைத்து,) வெளிப்படுத்தினோம். பின்னர் அதிலிருந்து பசுமையான (பயிர்கள் உள்ள)தை நாம் வெளிப்படுத்தினோம்; பின்னர் அதிலிருந்து ஒன்றின் மேல் ஒன்றாக அமைந்துள்ள (கதிர்களைப் போன்று) வித்துக் க்ளை வெளிப்படுத்துகிறோம்.

பேரீச்ச மரத்திலிருந்து அதன் பாளையிலிருந்து (பறிப்பவர் களுக்கு வளைந்து) அருகில் தொங்கும் பழக்குலைகளு மிருக்கின்றன; (அவற்றையும் நாமே வெளிப்படுத்துகின்றோம்.) திராட்சைத் தோட்டங்களையும், (பார்வைக்கு) ஒன்று போலும் (ரசனையில்) வெவ்வேறாகவும் உள்ள ஜைதூன்(ஒலிவ்) மாதுளை, ஆகியவற்றையும் நாமே (வெளிப்படுத்துகின்றோம்,) அவற்றின் கனிகளை அவை (பூத்துக்) காய்க்கும்போதும், பின்னர் அது கனிந்து பழமாகும் விதத்தையும் நோக்குவீர்களாக! விசுவாசங்கொள்ளும் சமூகத்தினர்க்கு, நிச்சயமாக இவற்றில் (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன"

" இன்னும் அவர்கள், ஜின்களில் (பலரை) அல்லாஹ்வுக்கு இணையாளர்களாக ஆக்குகின்றனர். (ஜின்களான) அவர்களையும் அவனே சிருஷ்டித்திருக்கின்றான்; இன்னும் அவர்கள் எவ்வித அறிவுமின்றி ஆண் மக்களையும், பெண் மக்களையும் அவனுக்கு (இணையாளர்களாகக்) கற்பனை செய்துவிட்டார்கள்; அவன் (மகா) தூயவன்; அவர்கள் (இவ்வாறு) வர்ணிப்பவைகளை விட்டும் அவன் பரிசுத்தமடைந்துவிட்டான்." (அல்-குர்ஆன் 6: 98-100)

" (நபியே!) உம் இரட்சகனின் பக்கம் - நிழலை அவன் எவ்வாறு நீட்டுகிறான் என்பதை நீர் பார்க்கவில்லையா? அவன் நாடியிருந்தால் அதனை நிலைபெற்றதாகவும் ஆக்கிவிடுவான்; சூரியனை (நிழலாகிய) அதற்கு ஆதாரமாக நாம் ஆக்கினோம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பின்னர், நாம் அதனைச் சிறுகச் சிறுகக் குறைத்து நம்மளவில் அதைக் கைப்பற்றிக் கொள்கிறோம்."

(அல்-குர்ஆன் 25 : 45-46)

"(நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய உங்கள்) மனைவிகளை நீங்கள் அவர்களிடம் மன நிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்து, உங்களுக்கிடையில் அன்பையும், கிருபையையும ஆக்கியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்தித்து உணரக்கூடிய சமூகத்தாருக்கு இதில் நிச்சயமாக(ப்பல) அத்தாட்சிகளிருக்கின்றன."

(அல்-குர்ஆன் 30 : 21)

இவ்வாறு அல் குர்ஆன் மனிதனைச் சூழ உள்ள, அவனது புலன்களுக்குப் பிரத்தியட்சமாகப் புலப்படும் உலகை நோக்கி மனிதனின் அவதானத்தைச் செலுத்தியதே அதன் போதனைகளைப் பின்பற்றி முஸ்லிம்களை நவீன அறிவியலின் முன்னோடிகளாக ஆக்கியது. இறைவனைப் பற்றி அறிய முனையும் பாதையில் பிரத்தியட்ச உலகிற்கு எத்தகைய பெறுமானத்தையும் வழங்காத ஒரு காலப் பிரிவில் அல் குர்ஆன் பிரத்தியட்ச உலகை நோக்கி மனிதனின் அவதானத்தையும் சிந்தனையையும் செலுத்தத் தூண்டியமை மிகப் புரட்சிகரமானதாகும்.

குர்ஆன் எங்களது கண்களை பொதுப் புலன்களுக்குப் புலப்படும் உலகை நோக்கி அகல விரிக்கச் செய்கின்றது. இந்த உலகை விளங்கி, அதனை மனிதனின் ஆதிக்கத்திற்கு உட்படுத்துவதன் மூலமாகவே நிலையான ஒரு நாகரிகத்தைக் கட்டி எழுப்ப முடியும்.[8]

குர்ஆனின் நோக்கில் மனிதன் அவனது சூழ உள்ள இயற்கை உலகோடு தொடர்புடையவன். இந்தத் தொடர்பும், அவன் பிரபஞ்சம் பற்றி பெறும் அறிவும் வெறுமனே அதில் ஆதிக்கம் செலுத்துவதற்கன்றி அவனது ஆத்மீக வாழ்வின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பயன்படுத்தப்படல் வேண்டும். எனவே மனிதன் புலன்கள் மூலம் பெறும் அறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குர்ஆன் குறிப்பிடும் "புஆத்" அல்லது "கல்ப்" மூலம் பெறப்படும் அறிவோடு இணைதல் வேண்டும்.

" (அவன்) எத்தகையவனென்றால், எதனை அவன் படைத்தானோ அந்த ஒவ்வொரு பொருளையும், (அதன் வடிவமைப்பையும்) மிக்க அழகாக்கி வைத்தான்; மேலும், அவன் மனிதனின் படைப்பைக் களிமண்ணிலிருந்து ஆரம்பித்தான்."

"பின்னர் வடிகட்டி எடுக்கப்பட்ட அற்ப நீரில் (இந்திரியத்தில்) இருந்து அவனுடைய சந்ததியை (உருவகித்து) உண்டாக்கினான்."

" பின்னர், அதனைச் சரியாக உருவாக்கி, தன்னுடைய 'ரூஹ்' (ஆன்மா) விலிருந்து அதில் ஊதி (மனிதனை உண்டாக்கி)னான்; இன்னும் உங்களுக்குச் செவிப்புலனையும், பார்வை(ப் புலன்) களையும், இதயங்களையும் அவனே அமைத்தான். (இவற்றிலிருந்தும்) நீங்கள் மிகக் குறைவாகவே நன்றி செலுத்துகின்றீர்கள்"

(அல்-குர்ஆன் 32: 7-9)

"கல்ப்" அல்லது உள்ளம் என்பது மனிதனை, அவனது புலன்களுக்கு உட்படாத உண்மைகளோடு தொடர்பு படுத்துகின்றது.

இஸ்லாமிய வரலாற்றில் கிரேக்க சிந்தனை ஒரு சக்தியாக விளங்கியது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் கிரேக்க சிந்தனையின் தாக்கத்தின் தூண்டுதல் காரணமாக இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய சிந்தனைப் பிரிவுகள் ஓர் உண்மையை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. அதாவது கிரேக்க தத்துவம் முஸ்லிம் சிந்தனையாளர்களின் கண்ணோட்டத்தை விரிவடையச் செய்தாலும் ஒட்டு மொத்தமாக நோக்குமிடத்து அது குர்ஆனிய பார்வையை மழுங்கச் செய்தது. கிரேக்கத் தத்துவஞானி சோக்ரடீஸ் அவரது அவதானத்தை மனிதனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தை நோக்கி மட்டும் செலுத்தினார். அவரைப் பொறுத்தளவில் மனிதனைப் பற்றிப் படிப்பதற்குப் பொருத்த மானவன் மனிதன் மட்டுமே. தாவரங்கள், ஏனைய உயிரினங்கள், நட்சத்திரங்கள் போன்ற இயற்கையின் படைப்பினங்கள் இதற்குத் துணைபுரிய முடியாது என அவர் கருதினார்.

இது குர்ஆனின் நோக்கத்திலிருந்து முற்றிலும் வித்தியாசமானது. குர்ஆன் ஓர் அற்பத்தேணியில் கூட இறைவனிடமிருந்து உள்ளுணர் வைப் பெறக்கூடிய அற்புதத் தன்மையைக் காண்கின்றது. அல்குர்ஆன் நிரந்தரமாக மாறி மாறி வீசும் காற்றுக்கள், இரவு பகல் மாறி மாறி வருதல், மேகங்கள், நட்சத்திரங்கள், பொலிவுற்றுப் பிரகாசிக்கும் வான் வெளி, அதில் நீந்திச் செல்லும் கிரகங்கள் ஆகிய படைப்புகளை நோக்கி மனிதனின் அவதானத்தையும் கவனத்தையுமு செலுத்துகின்றது. சோக்ரடீஸின் மாணவனான பிளேட்டோ புலன்களால் பெறப்படும் அறிவை வெறுத்தார். அவரைப் பொறுத்தளவில் புலன்கள் வெறுமனே கருத்துக்களை வழங்குவனவேயன்றி, அறிவை வழங்கவில்லை.

இது குர்ஆனியப் பார்வைக்கு முற்றிலும் எதிரானது. ஏனெனில் குர்ஆன் "பார்வை"(பஸர்), "கேள்வி" (ஸம்உ) ஆகிய புலன்களை மிகப்பெரும் தெய்வீக அருள்களாகவும், அதன் செயல்பாட்டிற்காக மனிதன் மறுமையில் இறைவனுக்குப் பதில் சொல்லும் பொறுப்பு உள்ளது எனவும் கூறுகின்றது. கிரேக்க சிந்தனையின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட ஆரம்பகால முஸ்லிம்கள் குர்ஆனின் இந்தப் பார்வையை முற்றிலும் இழந்தனர். குர்ஆனின் ஆத்மா முற்றிலும் கிரேக்க சிந்தனையின் போக்கிற்கு எதிரானது என்ற உண்மையை அவர்கள் உணர 200 ஆண்டுகள் சென்றன. இந்த தெளிவும், உணர்வும் ஓர் அறிவுப் புரட்சியாக வெளிப்பட்டது. இந்த அறிவுப் புரட்சியின் முக்கிய பிரதிநிதியாக கிரேக்கத் தத்துவத்திற்கு எதிராக குரல் எழுப்பிய இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர்கள் விளங்கினார்கள் என அல்லாமா இக்பால் குறிப்பிடுகின்றார்.[9]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித இனத்தின் வழிகாட்டுதலுக்கான இறைவனின் இறுதி வேதம் என்ற வகையில், அந்த வேதத்தின் அடித்தளத்தில் கட்டி எழுப்பப்பட்ட முஸ்லிம் சமூகம், வாழ்க்கையின் நித்தியமானவை - மாற்றத்திற்கு உட்பட்டவை எனும் இரண்டிற்குமிடையில் ஒருமைப்பாடு காணுதல் அவசியமாகிறது. ஏனெனில் பிரபஞ்சம் இயக்கமற்றது என்ற பழைய கோட்பாட்டை- நாம் ஏலவே நோக்கியவாறு - இஸ்லாம் நிராகரிக்கின்றது. வளர்ச்சியும், மாற்றமும் மனித வாழ்வையும், சமூகத்தையும் பொருத்தளவில் தவிர்க்க முடியாததாகும்.

ஆனால் மாற்றத்திற்கு உட்படாத அடிப்படை நித்திய அம்சங்களும் சமூகத்தில் உள்ளன. எனவே இறுதி வேதமான இஸ்லாம் சமூகத்தின் கூட்டு வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்தும் நித்திய கோட்பாடுகளைக் கொண்டிருத்தல் அவசிய மாகின்றது. ஆனால் நித்தியமானவை எனக் கருதப்படக் கூடியவை மாற்றத்தை சாத்தியமாக்கும் அனைத்தையும் தவிர்க்கக்கூடிய வகையில் அமைந்தவை என நாம் பொருள் கொண்டால் அது இயற்கையாகவே அசைவையும் இயக்கத் தையும் கொண்டவற்றை இயங்கவிடாமல் தடுத்து சிந்தனையிலும் சமூக வாழ்விலும் தேக்க நிலையை ஏற்படுத்திவிடும்.

அரசியல் துறையிலும், சமூக விஞ்ஞானத் துறையிலும் மத்திய காலப் பிரிவில் ஐரோப்பா எதிர்கொண்ட தோல்வியும், கடந்த ஐநூறு ஆண்டுகால இஸ்லாமிய சிந்தனையின் இயக்கமும் அசைவும் அற்ற நிலையும் இதனைப் பிரதிபலிக்கின்றன. அப்படியாயின் இஸ்லாமியக் கட்டுக்கோப்பைப் பொறுத்தளவில் மாற்றத்தை விளைவிக்கும் காரணி யாது? என்ற வினாவை எழுப்பும் இக்பால் இஸ்லாமிய சிந்தனை, சட்டம் சமூகம் ஆகியவற்றை தேக்கமும் அசைவுமற்ற நிலையிலிருந்து விடுவித்து, அவற்றை இயங்கச் செய்யும் உந்துதல் சக்தியாக 'இஜ்திஹாதை' அடையாளப்படுத்துகின்றார்[10]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஜ்திஹாத் என்ற பதம் 'முயற்சித்தல்' என்ற கருத்தை மொழி ரீதியாகக் கொண்டுள்ளது. இஸ்லாமிய சட்ட வழக்கின் சொற்பிரயோகத்தில் ஒரு சட்டப் பிரச்சினையைப் பொருத்தள வில் சுதந்திரமான ஒரு முடிவை அல்லது தீர்ப்பைப் பெற முயற்சித்தலை அது குறிக்கின்றது. இக்கருத்து,

"மேலும், நம்முடைய வழியில்(செல்ல) முயற்சிப்போரை நிச்சயமாக நாம் நம்முடைய (நேரான) வழியில் செலுத்துகின்றோம்; மேலும், நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்வோர்களுடன் இருக்கிறான்." (அல் குர்ஆன் 29:69)

என்ற திருக் குர்ஆன் வசனத்திலிருந்து பெறப்பட்டுள்ளது என இக்பால் கருதுகிறார். குர்ஆனின் இக்கருத்து நபி (ஸல்) அவர்களின் ஒரு ஹதீஸினால் மேலும் உறுதிப்படுத்தப்பட் டுள்ளது. முஆத் இப்னு ஜபல் (றழி) அவர்கள் யெமனுக்கு மாகாண அதிபதியாக நியமிக்கப்பட்டபோது நபி (ஸல்) அவர்கள் முஆதை நோக்கி "நீர் உமக்கு எதிர்ப்படும் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பீர்?" எனக் கேட்க 'குர்ஆனிலும், ஹதீஸிலும் அப்பிரச்சினைக்கான தீர்வைக் காண முயற்சிப்பேன். அவற்றிற்கான தீர்வை குர்ஆன், ஹதீஸின் அடிப்படையில் பெற முடியாவிட்டால், நான் முயற்சித்து எனது அறிவைப் பயன்படுத்தி அதற்கான தீர்வைப் பெற்றுக்கொள்வேன்' எனக் குறிப்பிட்டார்.[11]

இஸ்லாத்தின் ஆட்சிப் பரவலோடு ஒழுங்காக வகுக்கப்பட்ட ஓர் சட்ட அமைப்பு மிக அவசியமாகியது. இப்பணியில் இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் தொடர்ச்சியான உழைப்பை யும் முயற்சியையும் மேற்கொண்டனர். அவர்கள் (ஆரம்பகால) வரலாற்றின் பல்வேறு கால கட்டங்களில், படித்தரங்களில் உருவாக்கிய சட்ட மரபுகளின் கூட்டமைப்பின் அடியாக முஸ்லிம் உலகில் மத்ஹபுகள் தோற்றம் பெற்றன. காலஓட்டத்தில் இஜ்திஹாத் அதன் முக்கியத்துவத்தை இழந்து, இஸ்லாமிய சட்ட வளர்ச்சி தேக்க நிலையை அடைந்தது. இதற்குப் பின்வருவன காரணங்களாக அமைந்தன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய 'குர்ஆன் படைக்கப்பட்டதா? அல்லது நித்தியமானதா?' என்ற கருத்து மோதல் அனைவரும் அறிந்ததேயாகும். குர்ஆன் நித்தியமானது என்ற கருத்து பாரம்பர்யமாக முஸ்லிம் உலகில் நிலவியது. ஆனால் பகுத்தறிவுவாதிகளான முஃதஸிலாக்கள் குர்ஆன் படைக்கப்பட்டது என்ற கருத்தை முன்வைத்தனர். குர்ஆனின் நித்தியத் தன்மையை மறுப்பதன் மூலமாக பகுத்தறிவு வாதிகள் இஸ்லாத்தின் அடிப்படைகளையே பாதிக்கும் வகையில் செயற்படுவதை பாரம்பர்ய சிந்தனை கொண்டோர் உணர்ந்தனர். பகுத்தறிவு வாதத்தின் சில அரசியல் விளைவுகளையும் அவதானித்த அப்பாஸிய ஆட்சியாளர்கள் சிலரும் இது தொடர்பான பாரம்பர்ய சிந்தனைக்கு ஆதரவளித்தனர்.

உதாரணமாக முஃதஸிலா பகுத்தறிவு இயக்கத்தைச் சார்ந்த அந்- நஸ்ஸாம் ஹதீஸ்களை நிராகரித்ததோடு ஹதீஸ் அறிவிப்பாளர்களில் ஓர் முக்கிய நபித்தோழரான அபூஹுரைரா நம்பகமற்ற அறிவிப்பாளர் எனக் கூறினார். பகுத்தறிவாளர்களது இத்தகைய கட்டுப்பாடும் வரம்புமற்ற சிந்தனையானது இஸ்லாமிய சமூகத்தின் உறுதிப்பாட்டுக்கு ஆபத்தாக அமைந்து சமூகக் கட்டுக்கோப்பையே சிதறடிக்கக்கூடும் என்ற அச்சமும் பயமும் சமூகத்தில் தோன்றிய நிலையில், சமூகக் கட்டுக்கோப்பையும் உறுதியையும் பேணிப் பாதுகாப்பதற்கு ஷரீஆவின் கட்டுப்பாட்டை பயன்படுத்தி சட்ட அமைப்பை மிக வன்மையும், உறுதியுமானதுமாக ஆக்குவதே ஒரே வழியாக விளங்கியது. எனவே சட்டங்கள் உறுதியும் இறுக்கமும் அடைந்த அந்நிலையில் இஜ்திஹாத் அதன் முக்கியத்துவத்தை இழக்க ஆரம்பித்தது.

2. தஸவ்வுப், கால ஓட்டத்தில் அதன் இயக்க சக்தியை இழந்து தத்துவ சாயலைப் பெற்றது. ஒரு சமூக அமைப்பு என்ற வகையில் இஸ்லாத்தை நோக்கும் பார்வையை அது மழுங்கச் செய்தது. தத்துவச் சாயலைப் பெற்ற தஸவ்வுப், முஸ்லிம்களில் மிக விவேகமும் அறிவும் புத்திக் கூர்மையும் மிக்கவர்களைத் தனக்குள் இணைத்துக் கொண்டாலும், முஸ்லிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் அறிவும், தூரநோக்கும், ஆழமான சிந்தனையுமற்றவர்கள் கையிலும் சிக்கியது. இந்நிலையிலும் சிந்திக்கும் சக்தியற்ற பொதுமக்கள், பாரம்பர்ய மதஹுப்களைப் பின்பற்றுவதே பாதுகாப்பானதெனக் கருதி அவற்றை நோக்கித் திரும்பினர்.

3. இவை அனைத்துக்கும் மேலாக முஸ்லிம்களின் அறிவுப் பணியின் மத்திய நிலையமாக விளங்கிய பக்தாத் கி.பி 13ஆம் நூற்றாண்டளவில் மங்கோலியர்களின் படையெடுப்புக்கு ஆளாகி பேரழிவை எதிர்கொண்டது. இஸ்லாமிய ஆட்சியும், கட்டுக்கோப்பும் சீர்குலைந்து காணப்பட்ட அச்சூழலில், அந்நிலை மேலும் சீர்கெட்டு சமூகக் கட்டுக் கோப்பு மேலும் சிதறிச் சின்னாபின்னமடையும் ஆபத்து காணப்பட்டது. இந்நிலையில் பழமைசார்ந்த முஸ்லிம் சிந்தனையாளர்கள் தங்கள் முழுக் கவனத்தையும், அவதானத்தையும் மக்களின் நலன் கருதி சமூக ஒருமைப்பாட்டைப் பேணிப் பாதுகாப்பதில் முழுமையாக ஈடுபடுத்தினர். ஆரம்பகால சட்ட அறிஞர்கள் உருவாக்கிய சட்டத்தில் எத்தகைய புதுமையையும் புகுத்துவதை முற்றிலும் தடுப்பதன் மூலம், சமூகத்தின் கட்டுக்கோப்பையும் பேணிப் பாதுகாக்க முயற்சித்தனர்.

அவர்களது முழு நோக்கமும் சமூகக் கட்டுக்கோப்பை சிதறாமல் பாதுகாப்பதாகவே காணப்பட்டது. இவ்விடயத்தில் அவர்களை ஒருவகையில் நோக்கும்போது சரியாகவே செயல்பட்டனர். ஏனெனில் எந்த ஓர் அமைப்பிலும் கட்டுக்கோப்பு உறுதியாக அமையும்போது அது வீழ்ச்சியைத் தடுத்துப் பாதுகாக்கின்றது. ஆனால், இந்தவகையில் செயல்பட்டவர்கள் ஓர் உண்மையை மறந்துவிட்டனர் என இக்பால் கருதுகின்றார். அதாவது மிக வண்மையான, இறுக்கமான ஓர் சமூகக் கட்டுக்கோப்பில் தனி மனிதன் முற்றிலும் நசுக்கப்பட்டு அவனது தனித்துவத்தை இழந்துவிடுகின்றான்.

இஸ்லாமிய ஒருமைப்பாட்டு இயக்கம் (Pan- Islam) ஆகியன இதற்குச் சிறந்த உதாரணங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இஜ்திஹாத்" இஸ்லாமிய சட்டத்திற்கு இயங்கு சக்தியை வழங்குகிறது என்ற கருத்தை வலியுறுத்தும் இக்பால், இஸ்லாமிய உலகில் அவரது காலப்பிரிவில் பாரம்பரிய இஸ்லாமிய சட்டத்தில் நவீன தேவைகளுக்கு ஏற்ப மாற்றங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும் என்ற சிந்தனைப் பாங்கில் செயல்பட்ட நவீனத்துவ இயக்கங்கள் பற்றிய தனது கருத்தைப் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார்:

"நவீன இஸ்லாத்தில் தாராள சிந்தனையுடைய (Liberal movements) ஒரு போக்கை நான் வரவேற்கிறேன். ஆனால் ஒன்றைப் பற்றி நாம் மிக அவதானத்துடன் இருத்தல் வேண்டும். இந்த தாராள, சுதந்திர சிந்தனை உணர்வுகளும் கருத்துகளும் இஸ்லாமிய வரலாற்றில் மிக சோதனை மிக்க காலகட்டத்திலேயே தோன்றி யுள்ளன என்பதை நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும். ஏனெனில் சுதந்திர, தாராளவாத மனப்பான்மையும் செயல்பாடும் கட்டுக்கோப்பைச் சீர்குலைக்கும் தன்மை யுடையதாக மாறும் நிலைமையும் தோன்ற இடமுள்ளது.

சீர்திருத்தம், மாற்றம் என்ற உற்சாக உணர்வில் வரம்பையும் எல்லையையும் மீறும் மனப்பான்மையுடன் சீர்திருத்தவாதிகள் செயல்பட வாய்ப்புள்ளது. நாங்கள் இன்று எமது காலப் பிரிவில் ஐரோப்பாவில் புரட்டஸ்தாந்திய புரட்சி நடைபெற்ற காலப் பிரிவைப் போன்ற ஒரு காலகட்டத்தில் உள்ளோம். புரட்டஸ்தாந்துப் புரட்சியைத தோற்றுவித்த மார்டின் லூதரின் இயக்கத்தின் தோற்றமும், விளைவுகளும் எங்களுக்குப் போதிக்கும் பாடங் களை நாங்கள் மறக்கக்கூடாது. வரலாற்றை நாம் மிகக் கவனமாக அவதானித்தால் புரட்டஸ்தாந்து சீர்திருத்தம் என்பது அடிப்படையில் ஓர் அரசியல் இயக்கம் என்பதைக் கண்டுகொள்வோம். ஐரோப்பாவில் இந்த இயக்கத்தின் மொத்த விளைவு என்ன என்பதை நாம் நோக்கினால் கிறிஸ்தவ மதத்தின் உலகப் பொதுமையான ஒழுக்கக் கோட்பாட்டை (UNIVERSAL ETHICS) படிப்படியாக நீக்கி தேசிய ஒழுக்கத்தை ( NATIONAL ETHICS) அந்த இடத்தில் அறிமுகப்படுத்தியமையாகும். இந்தப் போக்கின் ஆபத்தான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவை ஐரோப்பாவில் நடைபெற்ற மகாயுத்தத்தில் நாம் காண முடிந்தது.

எனவே இஸ்லாமிய உலகின் தலைவர்கள் ஐரோப்பாவில் நடைபெற்ற நிகழ்வின் உண்மையான கருத்தை அறிந்து மனக் கட்டுப்பாட்டுடனும் தூரநோக்குடனும் இஸ்லாமிய சமூக மாற்றம், புனருத்தாரணத்தை நோக்கி அவதானத்துடன் நகர்தல் வேண்டும்.(13)

இங்கு நாம் இது தொடர்பான ஒரு முக்கியமான வினாவிற்கு விடை காணுதல் வேண்டும். இஸ்லாமிய சட்டத்தைப் பொருத்தளவில் அது வளர்ச்சிக்கும், மாற்றத்திற்கும் இடமளிக்கின்றதா என்பதே அதுவாகும். இது இஸ்லாமிய சட்டத்திற்கு மட்டுமன்றி சிந்தனைக்கும் பொருத்தமான வினாவாகும். இதற்கு விடைகாணும் முயற்சியில் நாம் இஸ்லாமிய வரலாற்றையும், அதில் முஸ்லிம் சிந்தனையாளர் களின் பங்களிப்பையும் நோக்கினால், இஸ்லாமிய வரலாறு நெடுகிலும் முஸ்லிம்கள் தங்களது மதக் கண்ணோட்டத்தை அவர்கள் வாழ்ந்த சூழ்நிலைக்கு ஏற்ப விளங்கிச் செயல்பட்டுள் ளதை நாம் அவதானிக் முடிகிறது. இஸ்லாமிய சிந்தனையின் வரலாற்றில் பல்வேறு சிந்தனைப் பிரிவுகள், கருத்துகள் தோன்றியுள்ளமை இஸ்லாமிய சிந்தனையின் நெகிழ்வுத் தன்மையையும், முஸ்லிம் சிந்தனையாளர்களின் தொடர்ச்சியான செயல்பாட்டையும் எடுத்துக் காட்டுகின்றது. இது தொடர்பாக இக்பால் புகழ் மிக்க கீழைத்தேய ஆய்வாளரான ஹோர்டன் (HORTON) என்பாரின் கருத்தை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"இஸ்லாத்தின் உட்பொருளும் உள்ளார்ந்த சக்தியும் எத்துணை விசாலமானது எனில் அது நாத்திகவாதத்தைத் தவிர தனது சூழலில் வாழ்ந்த மக்களின் கருத்துக்களில் தனக்குள் இணைத்துக் கொள்ள முடியுமான அனைத்தையும் உள்வாங்கி, அதனை இஸ்லாமிய மயப்படுத்தி தனது சிந்தனையை வழங்கியுள்ளது."

பிற கருத்துக்களை தனக்குள் இணைத்து இசைவாக்கம் பெறச் செய்யும் இஸ்லாத்தின் இந்தப் பண்பு இஸ்லாமிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையின் வளர்ச்சியில் மட்டுமன்றி, இஸ்லாமிய சட்ட வளர்ச்சியிலும் பிரதிபலிக்கின்றது. இஸ்லாமிய சட்டத்தின் வரலாற்றையும் அதன் வளர்ச்சிப் படிவங்களையும் ஆராயும் எவரும் கால வளர்ச்சி, மாற்றத்திற்கு ஏற்ப அது நெகிழ்ந்து கொடுத்து, இசைவாக்கம் பெற்று வளர்ச்சியடைந்துள்ளதை அவதானிக்க முடியும். ஆனால் துரதிஷ்டவசமாக முஸ்லிம்களின் பாரம்பரியச் சிந்தனையைச் சார்ந்தவர்கள், பிக்ஹ் என்னும் இஸ்லாமிய சட்டக் கலையை விமர்சன ரீதியாக ஆராயத் தயங்குகின்றனர். இந்த முயற்சியை மேற் கொண்டால் அது பெரும்பான்மை மக்களின் அதிருப்தியைப் பெற்றுத்தரும் எனவும், தீவிர கருத்து வேறுபாடுகளுக்கு வழிவகுக்கும் எனவும் அவர்கள் சிந்திக்கின்றனர்.

இஸ்லாமிய சட்டம் அதன் வளர்ச்சியின் ஆரம்ப நூற்றாண்டிலிருந்து நான்காம் நூற்றாண்டு வரை பத்தொன்பது சட்ட மரபுகளை உள்ளடக்கியிருந்தது. எமது சான்றோர்களான சட்ட அறிஞர்கள் சமூக மாற்றங்களை அனுசரித்து சட்ட விளக்கங்களை வழங்குவதில் எவ்வளவு முனைப்புடன் செயல்பட்டுள்ளனர் என்பதனை இதன் மூலம் நாம் அறிய முடிகின்றது.

இஸ்லாமிய சட்டத்தை நவீன காலத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் விளக்க முனைவோர் எமது மூதாதையர்கள் உருவாக்கிய சட்டப் பாரம்பரியத்தை முற்றிலும் புறக்கணித்து செயல்படல் முடியாது. ஏனெனில் வாழ்வு அதன் பழைய காலத்தின் சுமையை முதுகில் சுமந்து கொண்டே எதிர்காலத்தை நோக்கி நகர்ந்து செல்கின்றது. எந்த ஒரு சமூகமும் அதன் கடந்த காலத்தை ஒதுக்கிவிட முடியாது. ஏனெனில் கடந்த காலமே அவர்களது நிகழ் காலத்தை உருவாக்கியுள்ளது. எனவே இஸ்லாத்தைப் பொருத்தளவில் பழைய பாரம்பரிய நிறுவனங்கள், மரபுகள் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் பணி மிகக் கவனமாக மேற்கொள்ளப்படல வேண்டும் இவ்விடயத்தில் சமூக சிந்தனையை புனர்நிர்மாணம் செய்ய முனையும் ஒரு சீர்திருத்தவாதியின் பணியும், பொறுப்பும் மிகப் பாரதூரமானது.(14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமான சிந்தனையோடும், தூர நோக்கோடும் முஸ்லிம் சிந்தனையாளர்கள் இஸ்லாமிய சிந்தனையைப் புனர்நிர்மாணம் செய்யும் பணியை மேற்கொள்ளுதல் வேண்டும். இதன் மூலம் மனித சமூகத்திற்கே மகத்தான பங்களிப்பைச் செய்யமுடியும். எனெனில் இன்று மனித சமூகம் மூன்று விடயங்களை வேண்டி நிற்கின்றது. பிரபஞ்சம் பற்றிய ஆத்மீக விளக்கம், தனி மனிதனின் ஆத்மீக விடுதலை, மனித சமூகத்தை ஆத்மீக அடிப்படையில் நெறிப்படுத்தி வழிகாட்டத்தக்க உலகப் பொதுமையான கோட்பாடுகள் ஆகிய மூன்றுமே அவையாகும் என இக்பால் கூறுகிறார்.[15]

## உசாத்துணைகள்


1. ALLAMA IQBAL : THE RECONSTRUCTION OF RELIGiOUS THOUGHT IN ISLAM - LAHORE 1977.
2. Ibid : P- 92
3. Ibid : P- 07
4. Ibid : P- 08
5. Ibid : P- 07
6. Ibid : P- 13
7. Ibid : P- 13
8. Ibid : P- 14
9. Ibid : P- 04

10,11,12,13,14,15- Iqbal- Reconstruction, P.143





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இக்பாலும் பாரதியும் ஓர் ஒப்பு நோக்கு

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியத் துணைக் கண்டத்தில் ஆர்த்தெழுந்த அரசியல், சமூக, பண்பாட்டு மறுமலர்ச்சியினை இலக்கியத்தில் பிரதிநிதித்துவப்படுத்திய முப்பெரும் மகா கவிகளாக பாரதியும் இக்பாலும் தாகூரும் விளங்குகின்றனர். கங்கை நதிப் பள்ளத்தாக்கில் தாகூர் தமது உள்ளத்தின் உணர்வுகளுக்கு, உருக் கொடுக்கும் வகையில் "கீதாஞ்சலி", "ஸாதனா" போன்ற கவிதைச் சிருஷ்டிகளை உருவாக்கிய அதே காலகட்டத்தில், இந்திய மலைச் சாரல்களுக்கு அப்பால் பாரதி இயற்கை பற்றியும், மனிதாபிமானம் குறித்தும், தேசிய விடுதலைக்காகவும் கவிதை முழக்கம் செய்ய, தொலைவிலுள்ள பஞ்சாபில் அல்லாமா இக்பால் தமது தத்துவக் கருத்துக்களை கவிதை உருவில் வடித்தார்.

இம்மூன்று மகாகவிகளும் மொழி, மதம், பண்பாடுகளில் வித்தியாசப்பட்டவர்களாயினும் கீழைத்தேயப் பாரம்பரியத்தின் பிரதிநிதிகள் என்ற வகையிலும், மனிதாபிமானத்தை நேசித்த கவிஞர்கள் என்ற வகையிலும், மனிதனின் ஆளுமையில் மகத்தான நம்பிக்கை பூண்டவர்கள் என்ற வகையிலும், ஒரே நேர்கோட்டில் ஒருவரை ஒருவர் சந்திக்கின்றனர். பேராசிரியர் கைலாசபதியின் "இரு மகாகவிகள்" (சென்னை,1962) என்ற நூல் பாரதியினதும் தாகூரினதும் கவிதைகளில் காணப்படும் ஒருமைப்பாட்டை மிகச் சிறப்பாக ஆராய்கின்றது. இவ்வகையில் இக்பாலுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதிக்குமிடையேயுள்ள கருத்துறவையும் தொடர்பையும் ஒப்பிட்டு ஆராய்வதே இத்தலைப்பின் நோக்கமாகும்.

பாரதியும் இக்பாலும் இரு வேறுபட்ட மத, கலாசாரப் பாரம்பரியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இந்து மதப் பாரம்பரியம், தமிழ் இலக்கியத்தின் மரபு நெறி என்பன பாரதியின் ஆளுமையை உருவாக்க, இக்பாலோ இஸ்லாத்தின் ஆத்மீகப் பாரம்பரியத்தாலும், உர்து, பாரசீக இலக்கியப் பாரம்பரியத்தாலும் போஷிக்கப்பட்டவராக இருந்தார்.

இரு கவிஞர்களதும், ஆரம்பகால இலக்கிய முயற்சிகள் அவர்களது அழகுணர்வின் அனுபவத்தை வெளியிடும் வகையில் இயற்கையின் பேரழகினைச் சித்தரிக்கும் கவிதைகளாகவே அமைகின்றன. பாரதியின் "காலைப் பொழுது", "அந்திப் பொழுது" 'ஒளியும் இருளும்', "நிலாவும் வான் மீனும்" ஆகிய கவிதைகளை நாம் இந்த வகையில் குறிப்பிடலாம். எங்கும் பரந்திருந்த காரிருள், சூரியனின் ஒளிக்கதிர்கள் பரவ மறையும் பேரழகை பாரதி பின்வருமாறு பாடுகின்றார்:

"வானமெங்கும் பரிதியின் சோதி
மலைகள் மீதும் பரிதியின் சோதி
தானை நீர்க்கடல் மீதிலும் ஆங்கே
தரையின் மீதும் தருக்களின் மீதும்
கானகத்திலும் பற்பல ஆற்றின்
கரைகள் மீதும் பரிதியின் சோதி"

காலைப் பொழுதைப் பாரதி அழகுணர்த்த அவரை மெய்மறந்து பின்வரும் வகையில் பாடவைக்கின்றது:

"காலைப் பொழுதினிலே கண் விழித்து
மேனிலை மேல்
மேலைச் சுடர்வானை நோக்கி
நின்றோம் விண்ணகத்தே
கீழைத் திசையில் ஞாயிறுதான் கேடில்
சுடர் விடுத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்த வெளியெல்லாம் பகலொளி

யாய் மின்னிற்றே''

இக்பாலின் ஆரம்ப காலக் கவிதைகள் இயற்கை அழகைத் தரிசித்து அதனடியாக அவர் பெற்ற அழகுணர்வின் வெளிப்பாடாகவே அமைந்தன. இக்பால் அவரது இளமைக் காலத்தை இமாலயச் சாரலில் உள்ள ஸியால்கோட்டில் கழித்தார். இயற்கை அழகு நிறைந்த இந்த மனோரம்மியமான சூழ்நிலையிலேயே 'இமாலயம்' போன்ற அவரது கவிதைகள் பாடப்பட்டன:

''எழுமின் விண்ணார்ந்த பெரு மலைகளிலும்

தாழ்ந்த பள்ளத்தாக்குகளிலும்

வசந்தத்தின் வெண்கரம் படிந்துவிட்டது

வானம்பாடிகள் வெறிபிடித்து

இன்னிசை எழுப்புகின்றன.

ஓடும் நீரருவிகளின் அருகே

ரோஜாவும் அல்லியும் மலர்ந்து

மணம் வீசுகின்றது.

வெளியே வந்து பார், வசந்தம் வந்துவிட்டது,

புத்துயிர் பிறந்துவிட்டது.''

என இக்பால் இமாலயச் சாரலில் வசந்தத்தின் வருகையை வரவேற்றுப் பாடுகின்றார். இந்த அழகுணர்வே இவ்விரு கவிஞர்களையும் ஆங்கிலேய இயற்கைக் கவிஞர்களான வேட்ஸ்வோத், கிட்ஸ், பைரன் ஆகியோர்களின் கவிதைகளில் ஈடுபாடு கொள்ளச் செய்தது.

பாரதியும் இக்பாலும் வாழ்ந்த காலப் பிரிவு இந்தியத் துணைக் கண்டம் மேற்கத்திய ஏகாதிபத்தியத்தின் அடிமைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளையில் சிக்கியிருந்த அவலநிலை படைத்த காலப் பிரிவாக அமைந்தது. பாரதியும் இக்பாலும் இயற்கை அழகில் கட்டுண்டு அழகனுபவத்தைக் கவிதையில் வடிக்கும் நிலையிலிருந்து வளர்ச்சியடைந்தனர். தங்களது தாயகம் அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெறல் வேண்டும் என்ற உணர்வு அவர்களிருவரையும் ஆட்கொண்டது. அவர்களது இதயக் குமுறல் தேசிய உணர்வினையும், நாட்டுப் பற்றினையும், சுதந்திர வேட்கையையும் பிரதிபலிக்கும் உணர்ச்சி நிறைந்த தேசியப் பாடல்களாக வெளிப்பட்டது.

''என்று தணியும் இந்தச் சுதந்திரத் தாகம்?

என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?

என்றெமதன்னை கைவிலங்குகள் போகும்?

என்றெமதின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?''

எனப் பாரதி தனது அன்னை பூமியின் அடிமைத் தளைகள் நீங்கும் பொன்னாளை நினைந்து ஏக்கப் பெருமூச்சு விடுகின்றார். இக்பாலின் 'ஜாவீது நாமா' என்ற கவிதை நூல் அவர் பல்வேறு கிரகங்களைத் தரிசித்து அங்கு பல்வேறுபட்ட கவிஞர்கள், தத்துவ ஞானிகள், ஆட்சியாளர்களைச் சந்தித்து அவர்களுடன் உரையாடும் வகையில் அமைந்துள்ளது. சனிக் கிரகத்தில் இக்பாலின் முன்னிலையில் கையில் விலங்கிடப்பட்ட நிலையில் கண்ணீரும் கம்பலையுமாக இந்தியாவின் ஆத்மா (Spirit of India) தோன்றுகிறது. 'இந்தியாவின் ஆத்மா'வை இக்பால் பின்வருமாறு வர்ணிக்கின்றார்:

''வானம் பிளந்தது! அந்தோ! திறந்த

முகத்துடன் ஒரு சுவர்க்கத்துக் கன்னித்

தேவதை தோன்றினாள்.

அவளது கண்ணிமைகளில் நித்தியம்

ஒளிவிட்டுப் பிரகாசித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேகத்தை விட மென்மையான
ஆடைகளை அவள் அணிந்திருந்தாள்.
ரோஜா இதழ்கள் போன்று அதன்
நூற்கள் இழையோடியிருந்தன.
இவ்வளவு அழகைப் பொதிந்திருந்த
அவளது மென் கரங்கள்
அந்தோ! விலங்கிடப்பட்டிருந்தன.
அவள் ஏக்கப் பெருமூச்சு விட்டாள்.
உதடுகள் எத்தனையோ முணங்க கண்கள்
நீரைத் தாரையாகக் கொட்டின.
அப்போது எனது வழிகாட்டி ரூமி
என்னைப் பார்த்துக் கூறினார்,
'இதுதான் எண்ணற்ற உள்ளங்களில்
வேதனையையும் துயரத்தையும்
ஏற்படுத்தும் வகையில் புலம்பும்
இந்தியாவின் ஆத்மா.''

அதனைத் தொடர்ந்து இந்தியாவின் இதயக் குமுறலைக் கேட்ட இக்பால் :

'இந்தியாவின் இருள் சூழ்ந்த இரவு கழிந்து
ஒளி நிறைந்த விடியற் காலைப் பொழுது எப்போது தோன்றும்?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வேதனைக் குரலை எழுப்புகின்றார். இக்பாலும் பாரதியும் இந்தியாவின் மைந்தர்கள். இந்திய நாட்டின் மீது பற்றும் பாசமும் கொண்ட அவர்கள் இருவரும் தங்களது தயாகம் அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெறல் வேண்டும் என்ற உணர்வோடு செயல்பட்டனர். அவர்கள் இருவரது கவிதைகளிலும் தேசிய உணர்வையும் சுதந்திர வேட்கையையும் காண முடிகின்றது.

ஆனால் அவர்கள் இருவரும் குறுகிய தேசியவாதத்தின் எல்லைகளைக் கடந்து மனித இனத்தையே நேசித்த மனிதாபிமானக் கவிஞர்களாக வளர்ச்சியடைந்தனர். மனித சமுதாயத்தின் மேம்பாடும் உயர்ச்சியும், கண்ணியமும், வெற்றியுமே அவர்களது உயர்ந்த இலட்சியமாக அமைந்தது.

"சொல்லடி சிவசக்தி – எனைச்
சுடர்வீடும் அறிவுடன்
படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ – இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?"।

என்ற பாரதியின் மனிதாபிமானம், அனைத்து மனித இனத்தினரையும் தழுவிய ஒரு சர்வதேசியக் கோட்பாடாக பின்வரும் கவிதையில் பிரதிபலிக்கின்றது:

"நிகரென்று கொட்டு முரசே – இந்த
நீணிலம் வாழ்பவரெல்லாம்
தகரென்று கொட்டு முரசே। –
பொய்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்
அன்பென்று கொட்டு முரசே – அதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கமுண் டாமென்று கொட்டு
அன்பென்று கொட்டு முரசே – மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இடம் பெரிதுண்டு வையகத்தில் – இதில்
எதுக்குச் சண்டைகள் செய்வீர்?
அன்பென்று கொட்டு முரசே! அதில்
யார்க்கும் விடுதலை உண்டு
வயிற்றுக்குச் சோறிட வேண்டும் – இங்கு
வாழும் மனிதர்க்கெலாம்
பயிற்றிப்பல கல்வி தந்து – இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்
ஒன்றொன்று கொட்டு முரசே! – அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே! –
நன்றென்று கொட்டு முரசே இந்த
நானில மாந்தருக் கெல்லாம்.''

இக்பால் இஸ்லாத்தின் சர்வதேசியக் கோட்பாட்டில் ஆழந்த நம்பிக்கை கொண்டிருந்தார். தேசியவாதத்தின் பெயரால் கீழைத்தேய நாடுகளைத் துண்டாடி மனித இனத்தின் ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்கும் மேற்கத்திய ஏகாதிபத்திய வாதத்திற் கெதிராக அவர் குரல் எழுப்பினார். இஸ்லாத்தின் இறைதூதரின் பகைவனாக விளங்கிய அபூஜஹ்ல் இறைவனின் சந்நிதியில் நபிகளாருக்கு எதிராக முறையிடும் வகையில் அமைந்த இக்பாலின் பின்வரும் கவிதையடிகள் மனித இன ஒருமைப்பாடு பற்றிய அவரது கருத்தோட்டத்தைப் பிரதிபலிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முஹம்மதின் கோட்பாடு தேசம்,
இனம் என்ற தடைச் சுவர்களை
உடைத்தெறிந்துவிட்டது.
உயர்ந்தோர், தாழ்ந்தோர் அனைவரும்
சமம் எனப் போதிக்கும் அவர்
அடிமைகளுடன் சமமாக
உணவருந்துகின்றார்.
அரபுலகின் குலப் பெருமையை
மதிக்காத அவர் கறுப்புநிற
நீக்ரோக்களைத் தனது
நண்பராகக் கொள்கின்றார்."

தனது 'பாலே ஜிப்ரீல்' என்னும் கவிதையில் இக்பால் குறுகிய தேசிய வாதத்தைப் பின்வருமாறு கண்டிக்கின்றார்:

"மேற்கத்திய ஏகாதிபத்தியவாதம்
கிழக்கின் மதிப்பீடுகளை
உடைத்துச் சுக்குநூறாக்கிவிட்டது.
மேற்கத்திய பிரபுக்கள் தேசம், இனம்,
ஆகியவற்றைப் பூஜிக்கும் தேசிய
வாதத்தைக் கற்றுக்கொடுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனே! நீ கழுகுபோன்ற தீட்சண்ய

பார்வை படைத்தவன்

வான்வெளியே நீ பறக்கும் பருந்தாகளாம்

உனது இறக்கைகளை விரிப்பாயாக

முழுப் பிரபஞ்சமும் இறைவனுக்கே உரியது.''

இவ்வாறு தேசம், இனம், வர்க்கம் என்ற குறுகிய எல்லைகளைத் தாண்டிய மனித இன ஒருமைப்பாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்த பாரதியினதும், இக்பாலினதும் உலக நோக்கை இக் கவிதையடிகள் மிகச் சிறப்பாக உணர்த்துகின்றன.

கீழைத்தேய உலகம் மேற்குலகின் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியின் பயனைப் பெற்று நவீன யுகத்தில் பிரவேசித்தல் வேண்டும் என்பதில் பாரதியும், இக்பாலும் மிக அக்கறையும் கரிசனையும் கொண்டிருந்தனர். ஆனால் புதுமை படைத்தல் வேண்டும் என்ற இந்த வேட்கையில் அவர்கள் கீழைத்தேய கலாசாரப் பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் புறக்கணிக்கவில்லை. கீழைத்தேய பண்பாட்டின் தார்மீக, ஆத்மீகப் பாரம்பரியங்களும், மேற்கத்திய பண்பாட்டின் உலோகாயத, அறிவியல் வளர்ச்சியும் இணைந்த ஒரு புது உலகைக் காண இருவரும் ஆசித்தனர். பேராசிரியர் கைலாசபதி இது தொடர்பாக பாரதியையும் தாகூரையும் ஒப்பிட்டுக் கூறும் கருத்து, இக்பாலுக்கும் எல்லாவகையிலும் பொருத்தமானதாக உள்ளது.

'தாகூர் அறிவால் உலகை அளந்து காட்டினார். பாரதியார் உள்ளுணர்வால் அளக்க முயன்றார். எனினும் இரு மகாகவிகளுக்கும் ஒரு பொதுவான நம்பிக்கை இருந்தது. உலகம், இந்தியாவிடம், கீழைத்தேயங்களிடம் கற்கவேண்டிய எவ்வளவோ உள்ளன என்று இருவரும் நம்பினர். இந்தியாவின் புராதன மேம்பாட்டில் இருவருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தவர்களாதலின் கீழைத் தேயங்கள் ஆத்மீக வழிவந்த நாகரீகத்தையுடையன என்றும், மேலைத் தேயங்கள் உலோகாயத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிப்பட்டன என்றும் நிலவிய கருத்தை இருவராலும் உதறித்தள்ள முடியவில்லை. (கைலாசபதி, இரு மகாகவிகள்: பக். 41)

இக்பாலும் இதே வழியில் சிந்தித்த கவிஞராவார். மேற்குலகு அறிவு, ஆராய்ச்சித் துறைகளில் முன்னேறி வியத்தகு வளர்ச்சியைக் கண்டுள்ளது. ஆனால் மனிதனின் ஒழுக்க, ஆத்மீகத் தேவைகளை அது முற்றிலும் புறக்கணித்துள்ளது. கீழைத்தேய உலகானது, இதற்கு முற்றிலும் மாறுபட்டு ஆத்மீக வாழ்விற்கு முக்கியத்துவமளித்து, வாழ்க்கையின் புறத் தேவைகளைப் புறக்கணித்துவிட்டது எனக் கூறும் இக்பால், மேற்கின் அறிவும், கிழக்கின் ஆத்மீகமும் இணைந்த புத்துலகு காண விளைகின்றார்.

''மேற்கில் அறிவே வாழ்வின்
ஆதாரமாக அமைகின்றது.
கிழக்கிலோ அன்பே வாழ்வின்
அடிப்படையாக விளங்குகின்றது.
அன்பின் மூலம் அறிவானது சத்திய
மெய்ப்பொருளோடு உறவு பூண்டு
வளர்ச்சியடைகின்றது.
அறிவானது அன்பின் பணிக்கு
உறுதியையும் சக்தியையும்
வழங்குகின்றது.
விழித்தெழுங்கள்! அறிவையும்,
அன்பையும் இணைப்பதன் மூலம்
ஒரு புது உலகிற்கான
அத்திவாரமிடுங்கள்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியும் இக்பாலும் இலக்கியத்தை ஒரு சமுதாய சக்தியாகக் கருதினர். கலையினதும், கவிதையினதும் பணி வெறுமனே அழகுணர்விற்குக் களம் அமைத்துக் கொடுப்பதும் அதன் வெளிப்பாட்டின் ஊடகமாக அமைவதுமே என்ற கலைக் கொள்கைக்கு முரணாகவே அவர்களிருவரினதும் கலைக் கோட்பாடு அமைந்தது. கலையும், இலக்கியமும் மனிதனின் ஆளுமைக்கு வலுவூட்டி, சமூக வாழ்வை நெறிப்படுத்தும் சமுதாயச் சக்திகளாக விளங்குதல் வேண்டும் என்ற உணர்வே அவர்கள் இருவரினதும் இலக்கியப் பணியின் அடிநாதமாக அமைந்தது.

சமூகத்தின் ஓர் அங்கமாக வாழும் கலைஞனின் ஆளுமையின் உள்ளார்ந்த ஆற்றலின் பிரதிபலிப்பே கலை இலக்கியச் சிருஷ்டிகளாகும். அந்த ஆளுமையின் ஆற்றலை உணர்ந்து கலைப் பொருளும் கவிதையும் உருவாகும்போதுதான் அது உயிர்த்துடிப்புள்ளதாக மட்டுமன்றி சமூகத்தை நெறிப்படுத்தும் ஆற்றலையும் பெறுகின்றது என்ற கொள்கையில் பாரதியும் இக்பாலும் பூரண நம்பிக்கை கொண்டிருந்தனர் பாரதி இதனைப் பின்வருமாறு விளக்குகின்றார்:

பிரம்ம தேவன் நமக்கோர்
பணியிட்டான் யாங்ஙனம்?
மண்ணுலகத்து மானுடன்
தன்னைக் கட்டிய
தளையெல்லாம் சிதறுக என்று
வாழ்க தந்தை! வாழ் மானுடா!
அறிவிலே ஒளியை அமைத்தேன்
வாழ்க!
மந்திரங் கூறுவோம்
உண்மையே தெய்வம்
கவலையுற்றிருத்தலை வீடு, களியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிழ்தம் பயன் வருஞ்
செய்கையே அறமாம்
அச்சமே நரகம் – அதனைச் சுட்டு
நல்லதை நம்பி நல்லதே செய்க।
மகனே பசுபதி – மயக்கந் தெளிந்து
தவத் தொழில் செய்து
தரணியைக் காப்பாய்।''

**இக்பால் :**

''பொருட்களின் யதார்த்த நிலையை
உணராத கலை கலையன்று
நித்திய வாழ்வு பெறுவதே அனைத்து
கலைகளினதும்
இறுதி இலட்சியமாகும்
மூஸாவின் அற்புத ஊன்றுகோலின்
சக்தியற்ற கலை
பயனற்ற கலையாகும்
கலையின் இலட்சியம் மனிதனின்
ஆளுமையை கட்டியெழுப்புவதாகும்
வாழ்வினை அழகுபடுத்தாத
அதற்கு இலட்சியம் ஒன்றினை
வழங்காத கலை கலையன்று
கவிஞன் இனத்தின் ஆத்மா ஆவான்.
அவன் இனத்தின் இதயமாவான்

FAIZAL FAREED
AHATHTHIMU...PU



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“இக்பால்,
வெறுமனே கனவுலகில்
சஞ்சரித்த கற்பனைக் கவி அல்ல,
தனக்கென்று
ஓர் இலட்சியத்தை
வகுத்துக்கொண்டு,
அந்த இலட்சியத்திற்கு
இலக்கிய உருவமளித்த
ஓர் இலட்சியக் கவி.
ஓர் மகத்தான செய்தியை
முஸ்லிம் சமூகத்திற்குச் சிறப்பாகவும்,
மனித குலத்திற்கு
பொதுவாகவும் விடுக்க வந்த
ஓர் அழைப்பாளர்.”

கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி

ISBN 978-955-54143-0-2
9 789555 414302 >

Dharul Bushra Publication
16/3A, Menangama Place, Mount Lavania. +94 71 78 90 000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org